**பதிவுகளுக்கு முந்துங்கள்!**




தைத்திங்கள் பொங்கல் நாளில்...
100 பக்கங்களுடன்
விலை ரூ.100
இலக்கியம்
அரசியல்
நகைச்சுவை
சினிமா
விளையாட்டு
இன்னும் பல
சுவாரஸ்யமான
அம்சங்களுடன்..



பதிவுகளுக்கு முந்துங்கள்!
முகவர்களை நாடுங்கள்!!
11ஆம் திகதிவரை மட்டுமே அவகாசம்


# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 042 வள்ளுவர் ஆண்டு: 2045

மார்கழி 23, புதன்கிழமை 07.01.2015


வானிலை
வெப்பமான வானிலை காணப்படும். மாலை, இரவு வேளையில் குளிரான காலநிலை காணப்படும்.

# வாக்களிப்புக்கு அனைத்தும் தயார் நிலையில்

## பொதுமக்கள் நாளை அச்சமின்றி வாக்களிக்கலாம் தேர்தல்கள் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 7
தேர்தலில் மக்கள் வாக்களிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில், நாளை அச்சமின்றி வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல், வேட்பாளர்கள் அனைவரது பரப்புரைப் பணிகள் அனைத்தும் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர், நேற்று பெரியளவிலான வன்முறைச் சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை. நாடு முழுவதும் பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸாரும், தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர். அதனால் மக்கள் அச்சமின்றித் தமது வாக்குகளைப் பதிவு செய்ய முடியும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதேவேளை, தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக நாடு பக்.25

## மைத்திரிக்கு எதிராகவே அதிகமான வன்முறைகள்

### ‘கபே’ அமைப்பு கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஜன 7
ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து நேற்று அதிகாலை 4.30 மணி வரையான காலப்பகுதியில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் ஆயிரத்து 411 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில் மிக அதிகமான முறைப்பாடுகள் தற்போதைய ஆளும் கட்சியினருக்கு எதிராகவே பதிவாகியுள்ளதோடு மைத்திரிபால பக்.19

## வங்கிக் கிளை அடர்த்தி கூடிய மாகாணம் வடக்கு!

வங்கிக் கிளைகளின் அடர்த்தி கூடிய மாகாணமாக வடக்கு மாகாணம் தெரிவாகியுள்ளது. சனத்தொகை அடர்த்தி கூடிய மேல் மாகாணத்தை விட, வடக்கு மாகாணத்திலேயே அதிகளவான வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டமை இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது. பக்.02

## நாட்டின் தலைவிதி நாளை நிர்ணயம்!

### அனைவரும் வாக்களியுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 7
தேசிய ரீதியில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள இலங்கையின் ஏழாவது ஜனாதிபதித் தேர்தல் நாளை 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் முக்கிய தேர்தலாக இது அமைந்துள்ளதால், வாக்காளர்கள் அனைவரும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் எனப் பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வாக்களிப்புக்குரிய ஏற்பாடுகள் யாவும் இறுதிக் கட்டத்திலுள்ளன. 12 ஆயிரத்து 314 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரை வாக்கெடுப்பு இடம்பெறும்.
பாதுகாப்புக் கடமைகளுக்கென 71ஆயிரம் பொலிஸார் களமிறக்கப்பட் பக்.25

- வேட்பாளர்கள் - 19
- வாக்காளர்கள் - 15,044,490
- வாக்களிப்பு நிலையங்கள் - 12,314
- வாக்கெண்ணும் நிலையங்கள் - 1,419

## வாக்காளர் விவரம் பெற இராணுவம் பிரயத்தனம்

### முல்லைத்தீவில் தொடர் முயற்சி

யாழ்ப்பாணம், ஜன. 7
முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்காளர்களின் விவரங்களை இராணுவத்தினரும், கடற்படையினரும் உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. இந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம், தேர்தல் நடவடிக்கைகளுடன் எந்தவிதத்திலும் தொடர்புபடாத இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் வாக்காளர் தொடர்பான விவரங்களைக் கோரியுள்ளனர்.
கடந்த இரு தினங்களுக்கு முன்னர், உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் சென்ற இராணுவத்தினர் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் எத்தனை பேர் வாக்களிக்கவுள்ளனர் என்ற விவரங்களைக் கோரியுள்ளனர். எனினும் அவற்றை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் வழங்க பக்.19

## வாக்குப் பெட்டிகள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 7
ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள், இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு பக்.21

## கண்காணிப்புப் பணிகள் வடக்கில் நேற்று ஆரம்பம்

சர்வதேச, உள்ளூர் கண்காணிப்பாளர்கள் இணைந்து நிலைமைகளை அவதானிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
நாளை நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக வந்துள்ள சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் நேற்று, வடக்கில் தமது கண்காணிப்பை ஆரம்பித்துள்ளனர். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை வடக்கில் தங்கியிருந்து நிலைமைகளை பக்.21

## தேர்தல் அதிகாரிகள் குழு வடக்கில் வாகன ரோந்து

மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
தென்பகுதியிலிருந்து வந்துள்ள தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் வட மாகாணம் முழுவதும் இன்று தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர். குறிப்பாக அவர்கள் இன்று இரவு முழுவதும் விசேட கண்காணிப்பு நடவடிக்கையாக – வாகனங்களில் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர். பக்.21



காணாமற்போகச் செய்யப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று அலரி மாளிகைக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பக்.24

## பாப்பரசர் வருகையில் மாற்றம் ஏற்படாது

### கத்தோலிக்க திருச்சபை தெரிவிப்பு

கொழும்பு, ஜன.7
பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் இலங்கைக்கான பயணம், எந்தவொரு காரணத்துக்காகவும் ரத்து செய்யவோ அல்லது பிற்போடவோ மாட்டாது என கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது. தேசிய கத்தோலிக்க பொதுத்தொடர்பாளர் பிரிவின் பணிப்பாளர் சிரில் காமினி தெரிவித்தார்.
பரிசுத்த பாப்பரசரின் இலங்கை வருகை மற்றும் திருப்பலி பூசைகள் தொடர்பான விவரங்களை நேற்றைய செய்தியாளர் பக்.25

## முகத்தை காண்பித்து வாக்களிக்க வேண்டும்

‘அபாயா’ அணியும் முஸ்லிம் பெண்கள், தேர்தல் கடமையில் உள்ள பெண் அதிகாரிகளிடம் முகத்தைக் காண்பித்து வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. பக்.02

# செய்திகள்

# வங்கிக் கிளைகளின் அடர்த்தி கூடிய மாகாணமாக வடக்கு

## சனத்தொகை கூடிய மாகாணங்களை பின்தள்ளி முதலிடத்துக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஜன. 7

வங்கிக் கிளைகளின் அடர்த்தி கூடிய மாகாணமாக வடக்கு மாகாணம் தெரிவாகியுள்ளது. போர் முடிவடைவதற்கு முன்னர் இந்தப் பட்டியலில் கடைசி இடத்திலிருந்த வடக்கு மாகாணம், போர் முடிவடைந்த 5 வருடங்களிலேயே, முதலிடத்துக்கு வந்துள்ளது என்று, இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், சனத்தொகை அடர்த்தி கூடிய மேல் மாகாணத்தை விட, வடக்கு மாகாணத்திலேயே அதிகளவான வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர், வடக்குக்கு பெருமளவிலான வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், 'லீசிங்' நிறுவனங்கள் என்பன வந்து கால் பதித்தன. இவ்வாறு புதிதாக திறக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகள், ஒரு லட்சம் பேருக்கு எத்தனை உள்ளது என்பதை அடிப்படையாக வைத்து மத்திய வங்கி கணிப்பிட்டுள்ளது.

சனத்தொகை அடர்த்தி கூடிய மேல் மாகாணத்திலேயே போருக்கு முன்னர் வங்கிக் கிளைகளின் அடர்த்தி கூடியதாக இருந்துள்ளது. ஒரு லட்சம் பேருக்கு அங்கு 17.75 வங்கிக் கிளைகள் என்ற நிலையில் இருந்தன. அப்போது கடைசி இடத்தில் இருந்த வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சம் பேருக்கு 7.39 வங்கிக் கிளைகள் என்று இருந்தது.

போர் முடிவடைந்து 5 ஆண்டுகளில், வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சம் பேருக்கு 21.66 வங்கிக் கிளைகளும், இலங்கையிலேயே சனத்தொகை அடர்த்தி கூடிய மேல் மாகாணத்தில் ஒரு லட்சம் பேருக்கு 21.18 வங்கிக் கிளைகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நிலைமையே கிழக்கு மாகாணத்திலும் காணப்படுகின்றது. போருக்கு முன்னர் ஒரு லட்சம் பேருக்கு, 8.38 வங்கிக் கிளைகள் என்ற அடிப்படையில் எட்டாவது இடத்தில் இருந்த கிழக்கு மாகாணம், இப்போது ஒரு லட்சம் பேருக்கு 16.82 வங்கிக் கிளைகள் என்றளவுக்கு விரிவடைந்து, மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அதேவேளை, வங்கிகளின் கட்டுப்பாடற்ற கடன் வழங்கல்களால் பெருமளவானோர் கடனாளியாக்கப்பட்டனர் என்றும், வர்த்தக நடவடிக்கைகளிலும் இந்த வங்கிக் கிளைகளின் அதீத அதிகரிப்பு பாதிப்புச் செலுத்தியிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வரையறையற்ற விதத்தில் கடன்கள் வழங்கியமையினால், வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் பல வர்த்தகர்கள் தற்கொலை செய்து கொண்ட சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5)

# கடமை விடுமுறை நாளை கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜன. 7

ஜனாதிபதித் தேர்தலில் நாளை வாக்களிப்பதற்கு அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார்துறையினருக்கு கடமை விடுமுறை கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நாளை இடம்பெறவுள்ளது. நாளை வியாழக்கிழமை என்பதால் அரச மற்றும் தனியார் துறையினருக்குக் கடமை நாளாகும். எனவே அவர்களுக்குத் தேர்தலில் வாக்களிப்பதற்குரிய கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

அரச உத்தியோகத்தர்களைப் பொறுத்த வரையில், தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெறாதவர்களுக்கு மாத்திரமே கடமை விடுமுறை வழங்கப்பட முடியும். குறித்த நபர் தனது வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்து திரும்பி வருவதற்குரிய நேரம் அவருக்குக் கடமை விடுமுறையாகக் கட்டாயம் திணைக்களத் தலைவர்களினால் வழங்கப்பட வேண்டும்.

மேலும் தனியார்துறை உத்தியோகத்தர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கும் வாக்களிக்கும் வாக்குச் சாவடிக்குச் சென்று வருவதற்குரிய நேரம் கடமை விடுமுறையாக தொழில் வழங்குநர்களால் விடப்பட வேண்டும். அவ்வாறு கடமை விடுமுறை வழங்கப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட தொழில் வழங்குநர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

(த-5)

# வாக்காளர் அட்டை இல்லாமலும் நீங்கள் வாக்களிக்க முடியும்

கொழும்பு, ஜன. 7

வாக்காளர் அட்டை இல்லாவிடினும் இடாப்பில் பெயர் இருந்தால் உரிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து வாக்காளர்கள் தமது வாக்கை அளிக்க முடியும். பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் இதனைத் தெளிவுபடத் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை இல்லாவிடின் வாகன சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதிய அட்டை, முதியோர் அடையாள அட்டை, தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை ஆகியவற்றைப் பயன்படுத்தியும் வாக்களிக்க இயலுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## விகாரமாதேவி பகுதியில் தீக்குளித்தவர் உயிரிழந்தார்

கொழும்பு, ஜன. 7

கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு அருகே தீக்குளித்த நிலையில் தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பன்னிப்பிட்டிய பகுதியில் வசிக்கும் 72 வயதான ஒருவரே தனது உடலுக்குத் தீ மூட்டிக்கொண்டார். மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி குறித்த நபர் தீக்குளித்த நிலையில் பலத்த காயங்களுடன் மருத்துவனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இவர் தீ மூட்டிக் கொண்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார். (த-10)

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

குளத்தில் வலை வீசி மீன் பிடிக்கச் சென்ற முதியவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். கரம்பொன் மேற்கு பிள்ளையார் கோயிலடியை அண்மித்துள்ள கள்ளிக் குளத்திலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கரம்பொன் மேற்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குட்டி என்றழைக்கப்படும் மரியான் சின்னத்துரை (வயது-77) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் வலைவீசி மீன்பிடிக்கச் சென்ற அவர் வீடுதிரும்பவில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை அவர் குளத்திலிருந்து சடலமாக மிதந்த நிலையில் அடையாளம் காணப்பட்டார். (ற-4)

# முகத்தைக் காண்பித்து வாக்களிக்க வேண்டும்

## 'அபாயா' அணிவோருக்கு தேர்தல் திணைக்களம் கோரிக்கை

கொழும்பு, ஜன.7



முகத்தை மறைத்துக்கொண்டு 'அபாயா' அணியும் முஸ்லிம் பெண்கள் வாக்குச்சாவடிகளில் கடமையிலுள்ள பெண் தேர்தல் அதிகாரிகளிடம் தமது தேசிய அடையாள அட்டையுடன் தமது முகத்தைக் காட்டிய பின்னரே அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்படும். 'அபாயா' அணிந்து செல்லும் முஸ்லிம் பெண்கள் தேர்தல் சட்டங்களுக் கிணங்க நடந்து கொள்ளவேண்டும் என்று மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

"இதேவேளை வாக்குச்சாவடிகளுக்குச் செல்லும் போது ஒவ்வொருவரும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் செல்ல வேண்டும். குறிப்பாக வாக்குச் சாவடிகளுக்குச் செல்லும் போது தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆள்களை பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள மதகுருமாருக்கான அடையாள அட்டை, தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை போன்றவற்றுள் ஏதாவதொன்றை எடுத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாதோருக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாது" – என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-10)

# இந்திய துணைத் தூதுவராக யாழில் நடராஜன் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 7



வெற்றிடமாக இருந்த யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் பதவி நிரப்பப்பட்டுள்ளது. புதிய துணைத் தூதுவர் ஆறுமுகம் நடராஜன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் பதவியேற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவராகக் கடமையாற்றிய வி.மகாலிங்கம் தமிழ் நாட்டுக்கு இடமாற்றப்பட்டிருந்தமையால் துணைத் தூதுவர் பதவி கடந்த 6 மாதங்களுக்கு மேலாக வெற்றிடமாகவே இருந்தது. எனினும் முன்னர் பதில் துணைத் தூதுவராகக் கடமையாற்றிய எஸ்.தெட்சணாமூர்த்தி துணைத்தூதுவருக்கான கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார். தற்போது புதிய துணைத் தூதுவராகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆறுமுகம் நடராஜன் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பொறுப்பேற்றுள்ளார். ஏற்கனவே கண்டியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவராக இவர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (த-14)

# அனைவரையும் ஒன்றாக்கியமை எமக்கு கிடைத்த பெரும் வெற்றி

## மாதுலுவாவே சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.7

ஒரு குடும்ப அரசியலுக்கு எதிராக சகல இனத் தலைவர்களையும் ஒன்றிணைத்து பொது எதிரணியை உருவாக்கியிருப்பதே எமக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி. இதுவே நாட்டின் ஜனநாயகத்தை வென்றெடுக்க முதல் படி என கோட்டை நாக விகாரையின் விகாராதிபதியும் சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் இணைப்பாளருமான மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தீவிரவாதிகள் குடி கொண்டிருப்பது அரசுக்குள்தான். ஒரு குடும்ப அரசியலுக்கு எதிராக சகல இனத் தலைவர்களையும் ஒன்றிணைத்து பொது எதிரணியினை உருவாக்கியிருப்பதே எமக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி. நாட்டின் தலைவரை தெரிவு செய்ய இன்னமும் இருப்பது மூன்று நாள்களே. இந்த நிலையில் அனைவரும் எதிர்பார்ப்பது அமைதியானதொரு நியாயமானதொருதேர்தலையே. இதனையே நாமும் வலியுறுத்துகின்றோம். – என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-10)

தூங்குறவங்கள எழுப்பிடலாம்
தூங்குற மாதிரி நடிக்கிறவங்கள எழுப்ப முடியாது




Love பண்றவங்கள கூட நம்பிடலாம். Just Friends மச்சி
அப்டின்னு கிறுக்குத் தனமா சுத்துறவன நம்பவே முடியாது

## முகநூலில் சுட்டவை

மக்களே நாளை ஒரு புரட்சிப் போராட்டம்
நம் உரிமைப் போராட்டம், வாக்குப் போட செய்கூலி
வாங்காதீர்கள், நாட்டை சேதாரம் ஆக்கி விடுவார்கள்



வாக்குப் போட மறக்காதீர்கள்
உங்கள் உரிமையை இழக்காதீர்கள்
என் வாக்கு என் உரிமை!!

# கைத்தொலைபேசி இல்லாத இயக்குநர்



உலகப் புகழ் பெற்ற, ஹொலிவூட் படங்களை இயக்கிய, கிறிஸ்டோபர் நோலன், தம்மிடம் சொந்தமாக கைத்தொலைபேசி இல்லை என்று தெரிவித்துள்ளார். அது மட்டுமல்ல, தனக்கு பிரத்தியேக மின்னஞ்சல் முகவரி கூட இல்லை என்று கூறி, அவரது ரசிகர்களை திகைக்க வைத்துள்ளார்.

அறிவியல் கலந்த மனோதத்துவ படங்களை எடுப்பதில், வல்லவரான கிறிஸ்டோபர், நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளை பயன்படுத்தாமல் எப்படி இருக்கிறார்?

'நான் இயக்குநரான புதிதில், பலரிடம் கைத் தொலைபேசி இல்லை. அதனால், எனக்கும் அது தேவைப்படவில்லை. அதை வாங்கவும் முயற்சிக்கவில்லை; ஏனென்றால், என்னுடன் எப்போதும் நண்பர்கள் கூட்டம் இருக்கும். தேவைப்பட்டால், அவர்கள் வைத்திருக்கும் கைத்தொலைபேசியை பயன்படுத்திக் கொள்வேன்.

சொந்தமாக 'ஸ்மார்ட்போன்' இருந்தால், அதை துருவி துருவி ஆராயவும், பேசவும் குறைந்தபட்சம் 10 நிமிடங்களாவது ஒதுக்க வேண்டும். அது எனக்கு பிடிக்கவில்லை. அதுபோல் தான் மின்னஞ்சலும். எனக்கு அது அவசியமாகப்படவில்லை, என்கிறார்.

தமிழ் இயக்குநர் ஒருவரும், தம் கடைசி காலம் வரை, கைத்தொலைபேசி இல்லாமல் இருந்துள்ளார். அவர் வேறு யாருமல்ல. மூன்றாம் பிறை போல், தரமான படங்களைத் தந்து மறைந்த, பாலுமகேந்திரா தான்.

# வதைத்து எடுக்கின்றார்கள்



சின்னத்திரை தொடர்களில் நடிப்பதற்காக, இயக்குநர்கள் வதைத்து எடுக்கின்றார்கள் என்று, சின்னத்திரை நடிகை துர்க்கா தெரிவித்துள்ளார்.

முந்தானை முடிச்சு, சொந்த பந்தம் இரு தொடர்களிலும் நடித்து வருகின்றார் துர்க்கா. இவரது மென்மையான சுபாவம் மற்றும் அப்பாவி முகம் என்பன சின்னத்திரை ரசிகர்களை இலகுவில் ஈர்த்து வைத்திருக்கின்றது. இதனால் எல்லாத் தொடர்களிலும் அழும் கதாபாத்திரம்தான் அவருக் கிடைக்கின்றது.

'எனக்கு எல்லாத் தொடர்களிலும் அழும் கதாபாத்திரம் கிடைப்பதால் கவலைப்படவில்லை. இவ்வாறு மென்மையான கதாபாத்திரத்தில் நடிப்பதால், சின்னத்திரை ரசிகர்கள் என்னை தங்கள் குடும்பத்தில் ஒருவராக நினைத்துக் கொள்கின்றனர்.

மேலும் ஒரு நாளைக்கு 12 சீன்கள் எடுக்கின்றனர். இதனால் சாப்பிடக் கூட இயக்குநர்கள் அனுமதிக்க மாட்டார்கள். எங்களை வதைத்துத்தான் இந்தத் தொடர்களே எடுக்கப்படுகின்றன – என்றார்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்

ஆசிரியர் 1 : எதுக்கு அந்தப் பையனை மேசைக்கு மேல் நிற்க வைச்சு இருக்கிறீங்க?
ஆசிரியர் 2 : கட்டபொம்மனை தூக்கில் போட்ட இடம் எது என்று கேட்டால், கழுத்து என்று சொல்றான்...
ஆசிரியர் 1 : ?????

ஆசிரியர் 2 : உலகம் ஒரு நாடக மேடை. அதில் நாமெல்லாம் நடிகர்கள்.
மாணவன் : அப்படின்னா எனக்கு ஜோடியா தமன்னாவைப் போடுவீங்களா?
ஆசிரியர் : ?????

நண்பர் 1 : தினமும் உன் மனைவிக்கு பூ வாங்கிட்டுப் போறியே. மனைவி மேல் அவ்வளவு பாசமா?
நண்பர் 2 : மாப்பேள! பாசம் மனைவி மேல் இல்லைடா. பூக்காரி மேலை!!!
நண்பர் 1 : ??????

facebook பணம் சேர்க்க அதிகம் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. குறைவாக செலவு செய்யப் பழகினால் போதும்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** விரோதிகளும் நண்பர்களாவார்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய் தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும்.

**இடபம்:** மேலதிகாரிகளால் உத்தியோகத்தர்களுக்கு நன்மை உண்டாகும். வாழ்க்கைத் துணை மூலம் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** வேலைப்பளு அதிகரிக்கும். மன உளைச்சல் மற்றும் உடல் களைப்பை தூக்கி எறிந்து விட்டு உழைக்க ஆரம்பியுங்கள். எதைப்பேசினாலும் நன்கு ஆராய்ந்து ஆலோசனை செய்த பின்னரே பேசவும்.

**கடகம்:** அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். சக ஊழியர்களிடம் அலுவலகம் தொடர்பான இரகசியங்களை கூறுவதைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்:** பெண்கள் நண்பர்களிடம் உறவினர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. வீண் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். புதிய செயல்களை யோசித்து செய்வது நல்லது.

**கன்னி:** கூடுதல் கவனத்துடன் இருப்பது நன்மையைத் தரும். மனக் குழப்பம் நீங்கும். வெளியூர் பயணங்கள் உண்டாகும், அதனால் நன்மையும் ஏற்படும். நண்பர்கள் பலவிதங்களிலும் ஆதரவாக இருப்பார்கள்.

**துலாம்:** ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த இடையூறுகள் குறையும். உறவினர்கள் மூலம் அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திருப்தியாக உணர்வார்கள்.

**விருச்சிகம்:** பணவரத்தும் இருக்கும் சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த லாபம் வந்து சேரும்.

**தனுசு:** தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மனத் தெளிவு உண்டாகும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள்.

**மகரம்:** வீண் தர்க்கங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபப்படாமல் மேல் அதிகாரிகள் சொன்ன வேலையை செய்து முடிப்பது நல்லது.

**கும்பம்:** சக ஊழியர்கள் பேச்சைக் கேட்டு நடப்பதைத் தவிர்ப்பது நன்மை தருவதாக இருக்கும். உறவினர்களுடன் பேசும்போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** உத்தியோகத்தர்களுக்கு மனதில் இருந்த பயம் நீங்கி துணிவு உண்டாகும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. அடுத்தவர்களுக்கு ஆதரவாக செயற்படும் போது கவனம் தேவை.

## செய்திகள்

# தாதியர்கள் பற்றாக்குறை

### பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

பருத்தித்துறை, ஜன. 7

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தாதிகள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வேலுப்பிள்ளை ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது 41 தாதிமார் கடமையாற்றிக் கொண்டுள்ளனர். ஆனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 60 தாதிகள் தேவை எனக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். இவர்களின் அறிக்கையின் அடிப்படையில் 19 தாதிகள் பற்றாக்குறையுடனேயே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இயங்கி வருகிறது.

இந்த வைத்தியசாலையில் நோயாளர் விடுதி 10 உம், சத்திர சிகிச்சை நிலையம், அவசர சிகிச்சைப் பகுதி, வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் என பல பிரிவுகள் இயங்குகின்றது. உண்மையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் குறிப்பிடப்பட்டுள்ள 60 தாதிகள் கடமையில் ஈடுபட்டாலும் எமக்குப் பற்றாக்குறையே நிலவும்.

தாதிகள் பற்றாக்குறையால் கடமையில் ஈடுபடும் தாதிகள் வேலைப்பளு காரணமாக உடல், உளப் பாதிப்புக்குள்ளாகின்றனர். சிலர் தொடர்ச்சியாக விடுப்பின்றி இரு கடமைகளையும், சிலர் காலை தமது கடமையை முடித்து வீடு திரும்பி மீண்டும் இரவு வேலைக்குச் சமூகம் தர வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

எனவேமதுவைத்திய சேவையை திறம்பட நடத்துவதற்கு ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(த-422)



வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவிலின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. கடந்த 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது. நேற்று முன்தினம் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவு பெற்றது. (த)

## நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்புத் தேடுங்கள்

### தென்மராட்சி மக்களுக்கு அறிவுறுத்தல்

தென்மராட்சி, ஜன.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் நுளம்புக் கடியிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் டெங்கின் தாக்கம் காணப்படுவதால் வெளி இடங்களுக்குச் செல்வோரும், தத்தமது வீடுகளில் தங்கியிருப்போரும் காலை, மாலை வேளைகளில் நுளம்பை விரட்டும் பூச்சு மருந்துகளைப் பயன்படுத்துமாறும், இல்லையேல் நுளம்பு கடிக்காதவாறு உடலை மூடி ஆடைகளை அணிந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளனர்.

கடந்த ஐந்து நாள்களில் பிரதேசத்தைச் சேர்ந்த 10 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மழை வெள்ளம் பல இடங்களில் காணப்படுவதால் டெங்கின் தாக்கத்தைத் தடுக்க மக்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (த-9)

## போதைச் சாரதி செலுத்தினார் அபராதம்

தென்மராட்சி,ஜன.7

வேகமாகச் சென்ற ஓட்டோவை வழிமறித்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினர் சாரதி மதுபோதையில் காணப்பட்டதையும் அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்றதையும் கண்டுபிடித்தனர்.

பொலிஸார் சாரதிக்கு எதிராக மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் அளவுக்கு அதிகமான பயணிகளை வாகனத்தில் ஏற்றிச் சென்றமை ஆகிய குற்றச் சாட்டுக்களுடன் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நேற்று வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக 5ஆயிரம் ரூபாவும், அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்றமைக்காக 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றொரு சாரதிக்கு 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(த-9)

## மதுபானச் சாலைகள் மூடப்படும்

கொழும்பு, ஜன.7

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாளையும் நாளை மறுதினமும் மதுபானச் சாலைகள் அனைத்தும் மூடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. (த)

## 542 வியாபார நிலையங்களிடம் ரூ.27 லட்சத்துக்கு மேல் அபராதம்

### பாவனைக்கு உதவாத பொருள்கள் விற்பனை செய்த குற்றத்துக்காக

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 542 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டுக் காலாவதியான பொருள்கள் மற்றும் மனித பாவனைக்கு உதவாத பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக நீதிமன்றங்களினால் 27 லட்சத்து 37 ஆயிரத்து 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் நிறைகுறைவாக பாண் உற்பத்தி செய்த 28 பேக்கரிகளுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜனவரி மாதம் 40 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு லட்சத்து 77 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பெப்ரவரியில் 49 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவற்றில் நுகர்வோரை ஏமாற்றும் வகையில் பாண்நிறைகுறைவாக உற்பத்தி செய்யப்பட்டமை மற்றும் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பழச்சாறு ஒன்றினுள் பழத்தின் அளவைக் குறைத்து செயற்கையான பொருள்கள் சேர்க்கப்பட்டு ஏமாற்றி விற்கப்பட்டமை தெரிய வந்தது. அந்த நிறுவனத்துக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மார்ச்சில் 38 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஏப்ரலில் 54 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 7 ஆயிரத்து 750 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மே மாதத்தில் 44 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 32ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஜுன் மாதத்தில் 51 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு ஒரு லட்சத்து 79 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஜுலை மாதத்தில் 52 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஓகஸ்ட் மாதத்தில் 53 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

செப்ரெம்பர் மாதத்தில் 49 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு ஒரு லட்சத்து 89 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஒக்ரோபரில் 43 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. நவம்பரில் 47 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. டிசெம்பரில் 22 வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த வழக்குகளில் பாண் நிறை குறைவாக விற்றமை, மென்பானங்களுடன் இணைத்து இலவசமாக விற்பனை செய்யப்படும் குறைந்த அளவிலான மென்பானங்களை விற்காது மறைத்தமை, முகத்துக்குப் பூசும் கிறீம் வகைகளை உரிய தரம் இன்றித் தயாரித்து விற்பனை செய்தமை, போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை மனித பாவனைக்கு உதவாத வகையில் தூசி கலந்த தண்ணீருடன் அடைத்து விற்பனை செய்யப்பட்டமை என்பன உட்பட காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமைக்காக அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. பாவனைக்கு உதவாத குடிநீரை போத்தலில் அடைத்து விற்பனை செய்த வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ளது- என்றார். (த-4)

## வவுனியா சிறைச்சாலையில் சிறைக் கைதி தப்பியோட்டம்

கொழும்பு, ஜன. 7

நிதி மோசடி தொடர்பில் ஓராண்டு காலச் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த வவுனியா சிறைச்சாலைக் கைதி ஒருவர் நேற்று முன்தினம் முற்பகல் சிறைச்சாலைக் காவலர்களின் பாதுகாப்பிலிருந்து தப்பித்துச் சென்றுள்ளார்.

சிறைச்சாலைக்கு வெளியே சில பணிகளை மேற்கொள்ள அழைத்துவரப்பட்ட கைதிகள் குழுவில் இருந்த கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாகவும், வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த கைதியின் தண்டனைக் காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒரு மாதமே எஞ்சியிருந்ததாகவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் துஷார உபுல் தெனிய தெரிவித்தார்.

(த-22)

## உணவு கையாளுவோருக்கு நெருப்புக் காய்ச்சல் தடுப்பூசி

தென்மராட்சி, ஜன.7

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் அனைவருக்கும் நெருப்புக் காய்ச்சல் (தைபொயிட்) தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

உணவு கையாளும் நிலையங்களில் (தேனீரகம், உணவுச் சாலை, பேக்கறிகள் ஆகியவற்றில்) பணிபுரிவோர் இந்த நிலையங்களின் சமையலறையில் வேலை செய்வோர், இவற்றுக்கு சிற்றுண்டி வகைகள் தயாரித்து வழங்குவோர் ஆகியோருக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படுகிறது.

இவர்களுக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் வைத்து தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாகச் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்கள் வைத்திருப்போர், உணவுப் பொருள்கள் தயாரித்து வழங்குவோருக்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

# ஊழியர் நலனில் தீவிர அக்கறை

## வடமாகாணத் தொழில் நிறுவனங்களில் இந்த வருடம் முதல் நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜன 7

வடக்கு மாகாணத்தில் அதிக தொழிலாளர்களைக் கொண்டு செயற்படும் தொழில் நிறுவனங்களில் ஊழியர்கள் நலன் பேணலைக் கண்காணிக்கும் நடவடிக்கைகள் இந்த வருடம் முதல் இறுக்கமாக மேற்கொள்ளப்படும் என வடக்கு மாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிய தொழில் நிறுவனங்களை விடப் பெரிய தொழில் நிறுவனங் களில் அதிகமாக ஊழியர்கள் பணியாற்றும் நிலையில் அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள், உரிய கால விடுமுறைகள் அல்லது விடுமுறை காலத்துக்கான ஊதியம் என்பவற்றைச் சீராகப் பேணுவதில்லை என்பது தொடர்பில் தொழில் திணைக்களத்துக்குக் கடந்த வருடம் அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நிலையில் ஊழியர்களுக்கான நலன்களைத் தொழில் தருநர்கள் பேண வேண்டியதன் அவசியத்தையும், அதன் சட்ட திட்டங்களையும், தொழிலாளர் உரிமைச் சட்டங்கள் மற்றும் தொழில் திணைக்களத்தின் சட்டங்கள் குறிப்பிட்டுள்ளன.

சிறிய தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வரவுப் பதிவை உரிய முறையில் பேணுவதுடன் அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்தை செலுத்த வேண்டியது தொழில் தருநர்களின் கடமை. அதனைப் போன்று பெரிய தொழில் நிறுவனங்களும் பணியாளர்களின் அதிகரிப்பு நிலையில் குறிப்பிட்ட சில பணியாளர்களுக்கு மட்டுமே இத்தகைய நலன்களைப் பெற்றுக் கொடுக்கின்றனர்.

எனினும் ஒவ்வொரு பணியாளர்களுக்கும் சம்பளத் திட்டத்துக்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதியத்தைச் செலுத்துவதுடன் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை காலத்துக்கான கொடுப்பனவை வழங்க வேண்டியது கட்டாயம்.

இது தொடர்பான ஆராய்வைத் தொழில் திணைக்களம் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் இந்த வருடம் இறுக்கமாக மேற்கொள்ளவுள்ளது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் பெரியளவிலான தொழில் நிறுவனங்களும், வவுனியா மாவட்டத்தில் பெரியளவிலான தொழில் நிறுவனங்களும் உள்ளன. இங்கு பணியாற்றும் தொழிலாளர்களின் நலன்களைத் தொழில் தருநர்கள் உரிய முறைப்படி பேண வேண்டிய அவசியம் குறித்து தொழில்தருநர்களுக்கு ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தொழில் நிறுவனங்கள் மீது எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் ஊடாக ஊழியர்களுக்கான நலன்கள் உரிய காலத்தில் தொழில் திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும்– என்றார். (த–14)



நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக யாழ். மக்கள் வாக்களிக்க உள்ள வாக்குப் பெட்டிகள் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இருந்து பாதுகாப்பான முறையில் யாழ். மத்திய கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்தப் பெட்டிகள் இன்று யாழ்ப்பாணத்தின் அனைத்து

# வலி.கிழக்கில் அதிகரிக்கும் வாழைக்குலைத் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.7

வலி.கிழக்குப் பிரதேசத்தில் வாழைக் குலைகளை வெட்டிச் செல்லும் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

நள்ளிரவு மற்றும் அதிகாலை வேளைகளில் திருடர்கள் வாழைத் தோட்டங்களுக்குச் சென்று கூடுதலாகக் கதலி வாழைக் குலைகளை வெட்டிச் செல்கின்றனர்.

நீர்வேலி, கோப்பாய், இராசவீதி, சிறுப்பிட்டி, கரந்தன் போன்ற பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் இவ்வாறு வாழைக் குலைகள் திருடப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அதிகாலை வேளைகளில் வாகனங்களில் வரும் சிலர் தோட்டங்களுக்குள் சென்று அங்குள்ள கதலிக் குலைகளை வெட்டிச் செல்கின்றனர்.



கடந்த வாரத்தில் இராச வீதியில் உள்ள வாழைத் தோட்டமொன்றில் பத்துக்கும் மேற்பட்ட கதலிக் குலைகள் திருடப்பட்டுள்ளன.

அதனைவிட சிறுப்பிட்டிப் பிரதேசத்தில் உள்ள வாழைத் தோட்டங்களிலும் இவ்வாறு வாழைக் குலைகள் களவாடப்பட்டு வருகின்றன. (த–17)

# கடந்த வருடத்தில் 147 பேருக்கு டெங்கு

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

தென்மராட்சி, ஜன.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் 147 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொகை 2013 ஆம் ஆண்டில் டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தென்னிலங்கைப் பகுதிகளுக்கு பல்வேறு தேவைகளுக்காகச் சென்று திரும்பியவர்களெனத் தெரிவிக்கப்பட்டது.

வியாபார நிமித்தம் கொழும்பு சென்று தங்கிய வர்த்தகர்கள், வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த உறவுகளை வழியனுப்பச் சென்றவர்கள், உயர் கல்விக்காகத் தென் பகுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவர்கள் போன்றோரே அதிக அளவில் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த மாதத்தில் மட்டும் டெங்கினால் 32 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் பெய்த அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக டெங்கு பெருமளவில் பரவியதாகவும் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் பல பிரிவுகளிலும் டெங்கின் தாக்கம் காணப்பட்டபோதிலும் மட்டுவில், அல்லாரை போன்ற இடங்களிலேயே அதிகளவானோர் டெங்கினால் பீடிக்கப்பட்டதாகவும், தற்போது கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் தேங்கியுள்ள மழை வெள்ளம் காரணமாக அந்தப் பகுதிகளில் டெங்கின் தாக்கம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

டெங்கு நோயாளி என இனங்காணப்பட்டால் அந்த இடங்களில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த–9)

# யாழ். விவசாயிகளுக்கு விசேட கடன் திட்டங்கள்

## பிரதேச அபிவிருத்தி வங்கி வழங்குகிறது

யாழ்.மாவட்டத்தில் விவசாயிகள், வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கான விசேட கடன் திட்டத்தை வழங்குவதற்குப் பிரதேச அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளதாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.சிவலோகன் தெரிவித்துள்ளார்.

விவசாயம் மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கையில் யாழ்.மாவட்டத்தில் அதிகளவானோர் ஈடுபடுகின்றனர். எனினும் அவர்களுக்கான விவசாய நடவடிக்கைகளுக்கு முதலீடு இல்லாத காரணத்தால் விவசாயிகள் பலர் விவசாயத்தைக் கைவிட்டுள்ளனர். இந்தத் தருணத்தில் ஏனைய வங்கிகள் கைகொடுப்பதைப் போன்று பிரதேச அபிவிருத்தி வங்கியும் உரிய கடன்களை வழங்கத் தயாராகவுள்ளது.

ஏற்கனவே பிரதேச அபிவிருத்தி வங்கியால் பெண்களை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்களின் சிறுகைத்தொழில் முயற்சிகளுக்கு 50 ஆயிரம் ரூபாவில் இருந்து தேவைக்கேற்ற கடன்களை வழங்கி வருகின்றது. குழு அடிப்படையில் மாதர் சங்கங்கள் ஊடாக வழங்கப்படும் இத்தகைய கடன்களால் வீட்டில் இருந்தே தொழில் முயற்சிகளைப் பெண்கள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வங்கி வழங்கியுள்ளது.

இதனைவிட தொழில்முயற்சிகளுக்காகவட்டியில்லாக்கடனைவழங்குவதற்கும்பிரதேசஅபிவிருத்திவங்கி நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. படிப்படியாக வாடிக்கையாளர்களாக உள்ள தொழில் முயற்சியாளர்கள் தொடர்ச்சியாகக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் விசேடமாக விவசாயிகள் மற்றம் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு 7 வீத வட்டியுடன் கூடிய கடன்களை வழங்கப் பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ். கிளை தயாராகவுள்ளது.

விவசாயிகள் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தாம் செய்கை பண்ணப் போகும் காணிகளின் அளவுக்கு ஏற்ப தேவையான கடன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். விவசாயப்போதனாசிரியர்களின் ஒப்புதலுடன் வங்கியுடன் தொடர்பு கொண்டு குறுகிய காலத்தில் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (த–14)

## ஒளிர மறுக்கும் வீதி விளக்கு

குருநகர், ஜன.7

குருநகர் தண்ணீர்த்தாங்கிக்கு முன்பாக உள்ள வீதி விளக்கு கடந்த 2 வாரங்களுக்கு மேலாக ஒளிராத நிலையில் உள்ளது.

இதனால் மத்திய கிழக்குவீதி, தண்ணீர் தாங்கி வீதி ஆகிய வீதிகளிலிருந்து குறித்த வீதியூடாக இரவு நேரங்களில் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, புதிய மின்குமிழைப் பொருத்தி மின்சாரத்தை வழங்க இலங்கை மின்சார சபையினர் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-51)

## குரங்குகளை கட்டுப்படுத்த தென்மராட்சியில் நடவடிக்கை

தென்மராட்சி, ஜன.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் குரங்குகளைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் குரங்குகளால் பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன.

குரங்குகள் வந்து என்னென்ன பொருள்களை நாசப்படுத்துகின்றன, பொதுமக்களின் உடைமைகளுக்கு என்னென்ன பாதிப்பை ஏற்படுத்துகின்றன போன்ற விவரங்கள் திரட்டப்படுகின்றன.

கடந்த 2002-2014 வரையான காலப்பகுதியில் குரங்குகளின் பெருக்கத்தால் தமது விவசாய உற்பத்திப் பொருள்களும் பயன்தரும் மரங்களும் அழித்து வருவதால் அவற்றை கட்டுப்படுத்த கோரி பிரதேச மக்களால் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக பிரதேச செயலகத்தால் நகைப்புக்குரிய விதத்தில் விவரங்கள் திரட்டப்படுவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (வ-9)

# பனம் பொருள்களுக்கு எதிர்காலத்தில் வடக்கில் பற்றாக்குறை ஏற்படும் நிலை

### பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.ஜன.7

அழிக்கப்பட்டு வரும் பனை மரங்களால் பனையில் இருந்து கிடைக்கப்பெறும் உணவுப் பொருள்களுக்கு வடமாகாணத்தில் எதிர்காலத்தில் பெரியளவில் தட்டுப்பாடு ஏற்படவுள்ளது. எனவே இருக்கக்கூடிய பனை மரங்களைப் பாதுகாப்பதுடன் பயன்தரு பனை மரங்களைத் தறிப்பதை நிறுத்த வேண்டும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடமாகாணத்தில் குறிப்பாக இந்தவருடம் பனையில் இருந்து கிடைக்கப்பெறும் உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பனம் உற்பத்தி உணவுக்களான பனாங்கிழங்கு, ஒடியல் மற்றும் புளுக்கொடியல் என்பவற்றுக்கு சந்தைகளில் தட்டுப்பாடு நிலவுகிறது.

வருட இறுதி மற்றும் ஆரம்ப காலங்களில் தென்பகுதி மற்றும் வெளிநாடுகளில் இருந்து அதிகமானோர் யாழ்.குடாநாட்டுக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சிறப்பான உணவு வகைகளில் பனை சார் உணவுப் பொருள்கள் மிகவும் பாரம்பரிய உணவாக உள்ளதால் யாழ்ப்பாணத்துக்குவருகை தரும் சுற்றுலாத் துறையினர் பனை சார் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். சந்தைகளில் பனை உற்பத்தி உணவுப் பொருள்கள் குறைவாக இருப்பதால் கிடைக்கப் பெற்ற சந்தை வாய்ப்பையும் உற்பத்தியாளர்கள் இழந்துள்ளனர்.

வடமாகாணத்தில் பனை வளம் அதிகமாக இருந்த போது அதிகமான உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதனால் நுகர்வோர் அதிகமாக இருந்தனர். எனினும் கடந்த காலங்களில் ஏற்பட்ட போரால் பனை வளம் அழிக்கப்பட்டதுடன் பல்வேறு தேவைகளுக்கும் அனுமதியின்றி பனை மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாடு தற்போதும் நிறுத்தப்படவில்லை. அனுமதியின்றி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இதனைத் தடுக்க பொலிஸாரின் ஒத்துழைப்பும் குறைவாகவுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளால் பனை மரங்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு குறைவடைந்துள்ளது. இதனால் யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு பனம் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு உற்பத்தியும் குறைவடைந்துள்ளது. தற்போது ஒடியல் கிலோ ஒன்று 350 ரூபாவுக்கு அதிகமாகவும் புளுக்கொடியல் 400 ரூபாவுக்கு அதிகமாகவும் சீவிய புளுக்கொடியல் 600 ரூபாவுக்கும் விற்கப்பட்டு வருகின்றது.

தற்போது பனை அபிவிருத்திச் சபையின் கொள்வனவு மற்றும் விற்பனையை விட தனியார் துறையின் விற்பனையும் கொள்வனவுமே அதிகரித்துள்ளது. எனவே தொடர்ந்தும் பனை மரத்தை அழித்து வந்தால் பனம் உணவுப்பொருள்களின் விலை எதிர்காலத்தில் மேலும் பல மடங்கு அதிகரிக்கும். பனை மரங்களைத் தறிப்போர் தங்களுடைய வளம் மற்றும் பொருளாதாரத்தைக் கருத்திற் கொண்டு பனை மரங்களை அழிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.(வ-14)



பருவ மழை காரணமாக வீதிகள் பல சேதமடைந்து காணப்படுகின்றன. இவ்வாறு பருத்தித்துறைப் புலோலி பிரதேசத்தில் ஜே/414 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மாவிலடி வீதியிலிருந்து வயல் பகுதியை நோக்கி வெள்ளம் குறுக்கறுத்தோடியதால் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த சுவரும் உடைந்துள்ள நிலையில், வீதியில் 6 அடி அகலத்துக்குபெரும்பள்ளம்ஏற்பட்டுள்ளது. இதனால்கடந்தஇருவாரங்களாக குறித்த வீதி வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

## வவுனியாவில்‘நிழல்கள்’ அமைப்பு நடத்திய குருதிக் கொடை நிகழ்வு



வவுனியா, ஜன.7

வவுனியா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்களின் அமைப்பான 'நிழல்கள்' அமைப்பினரால் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் வீதியில் அமைந்துள்ள நாற்சதுர சுவிசேஷ சபை கட்டடத்தில் கடந்த 3 ஆம் திகதி அமைப்பின் தலைவர் ஆரூரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளர், மருத்துவர் எஸ். அகிலேந்திரன், நாற் சதுர சுவிசேஷ சபையின் போதகர் எஸ்.சேகர், இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி மருத்துவர் ஹேமச்சந்திர, மருத்துவர் பாலித ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-421)

## பருத்தித்துறை சுகாதாரப் பிரிவு பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு



பருத்தித்துறை, ஜன.7

பருத்தித்துறை சுகாதார பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் பலரும் ஈடுபட்டுள்ளனர்.

கல்வி அமைச்சு மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய நேற்று முன்தினம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு முதல்நாள் டெங்கு ஒழிப்பு தொடர்பான சிரமதானம் மேற்கொள்ளப்பட வேண்டும்என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ பணிமனையால் இதுதொடர்பாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டதோடு ஒவ்வொரு பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகரும் தமது பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டிருந்தது.

ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி, மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி உள்ளிட்ட குழுவினர் நேரில்சென்றுபார்வையிட்டுள்ளனர். (வ-422)

# அம்மாடியோவ்!



இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?

30

அகவையில் உதயன்

| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

## ஓவியங்களே!

ஆம்! மாணவச் செல்வங்களைத்தான் அழைக்கின்றோம்!!
ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு ஓவியம்தான்.
ஓவியங்கள் வரையும் ஓவியம்.

உதயன் தனது 30 ஆவது ஆண்டினை முன்னிட்டு நடாத்தும் மாணவச் செல்வங்களுக்கான மாபெரும் ஓவியத் தேர்வு.

தேர்வு செய்யப்படும் ஓவிய மாணவச் செல்வங்களுக்குப் பெரிய அளவிலான பரிசு மழை.

ஓவியத் தேர்வு தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

உங்கள் எண்ணங்களை வண்ணமாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.02.2015.

**புத்தாண்டு அன்று பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்.**
**ஆம்! சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.**

உங்கள் எண்ண ஓட்டங்களை வண்ண ஓவியங்களாக்கி அனுப்பிவைக்கும் போது உதயன் படிவத்திலே உங்கள் பெயர் விவரங்களை, ஓவிய ஆக்கத்துடன் சேர்த்து அனுப்ப மறந்து விடாதீர்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் எண்ணக் காவியங்களை வண்ணக் காவியமாக்கும் வகையில் ஓவியப் போட்டிக்கான தலைப்புகளைத் தருகின்றோம்.

| பிரிவு | வகுப்புத் தரம் | தலைப்பு |
|---|---|---|
| A | தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| B | தரம் 06,07,08,09 | பனை வளமும் நாமும் |
| C | தரம் 03,04,05 | பண்டிகை நிகழ்வு |

35 செ.மீ. x 45 செ.மீ. (14" x 18") அளவுடைய வெள்ளை 'பிறிஸ்டல் போட்' அல்லது வெள்ளை நிற கென்ற் (Kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர், சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.
உரிய பிரிவில் ஒருவர் ஓர் ஆக்கத்துக்கு மேலாகவும், உங்கள் ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு ஆக்கங்களுடனும் தனித் தனி விண்ணப்பப் படிவம் இணைத்தல் வேண்டும். மாணவரது ஆக்கம் என்பதனை உரிய பாடசாலை உறுதி செய்தலும் அவசியம்.
எங்கே?
வர்ணமய உலகில் சஞ்சரித்து உங்கள் ஆக்கங்களைத் தொடங்கலாம். பாடசாலை தொடங்கியதும் உறுதிப்படுத்தி அனுப்பி வையுங்கள். தேவைப்படும் இடத்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வாளர்கள் மீண்டும் ஒரு ஆக்கம் ஆக்கத் தயாராக இருக்கவேண்டும். அதற்கான வளங்களை நாம் வழங்குவோம்.
***வாழ்த்துக்கள்.***

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ........................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
........................................
கற்கும் பாடசாலை: ........................................
தரம்: ...............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ........................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:........................................
ஆசிரியரின் பாடத்துறை: ........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி ........................................ அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்
பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இன்றே செய்மின்....அதனை நாளை நன்றே செய்வீர்!

நாளை வியாழக்கிழமை விடிந்தால் நாட்டின் ஏழாவது ஜனாதிபதித் தேர்தல். ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் கடந்து சென்ற இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் நடைபெற்றது. அதன் பிரகாரம் ஏழாவது ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் - 2016 ஆம் ஆண்டு - ஜனவரி மாதத்திலேயே நடைபெற வேண்டும்.

ஆனால், தாம் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்பதால், தமக்கு உள்ள அதிகாரத்தைக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷ, புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

நாளைய தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டங்கள் நேற்று முன்தினம் - ஜனவரி ஐந்தாம் திகதியுடன் - முடிவுற்றன. வாக்காளர்கள் எவருக்குத் தமது பொன்னான வாக்கினை வழங்க வேண்டும் என்று ஆற அமரச் சிந்தித்துச் செயற்படுவதற்கு, இரண்டு நாள் இடைவெளி - அவகாசம் - வழங்கி உள்ளார் தேர்தல் ஆணையாளர்.

நாளைய ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்கள் இருவர் உட்பட மொத்தம் பத்தொன்பது பேர் போட்டி இடுகின்றனர்.

நூறு சதவீதம் - நீங்களாகவே முடிவு செய்து, வாக்குரிமையைப் பயன்படுத்தும் பொறுப்பு உங்களிடம் மட்டுமே முழுமுழுக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கான முடிவை மேற்கொள்வதற்கு இரண்டு நாள்கள் - நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் - தேர்தல் ஆணையாளர் அவகாசம் தந்துள்ளார்.

இந்த நாட்டின், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பிரசை என்பதால் தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. ஆகையால், அதனை நாட்டு நலன் கருதிப் பயன்படுத்தும் பொன்னான பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைத் தக்கவாறு பயன்படுத்துங்கள். அது உங்களுக்குக் கிடைத்துள்ள உரிமையும், கடமையும் ஆகும். அதனைத் தட்டிக் கழிக்காதீர்கள்.

வாக்காளர்களாகிய நீங்கள், உங்களது வாக்கினை, யாருக்கு நல்கப் போகின்றீர்கள் என்பதனைப் பிறர் எவருக்கும் வெளிப்படுத்த வேண்டியதில்லை. அது குறித்துப் பிரசித்தப்படுத்த வேண்டும் என்பதும் அல்ல. அதனைப் பரம ரகசியமாகப் பேணும் உரிமையும் உங்களுக்கு உண்டு.

உங்களது தெரிவு, மக்களின் வாழ்க்கைக்கு, அதன் மலர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்டுவதாக அமையட்டும். 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், வடக்கில் 32.99 சத வீதம் வாக்களிப்பு இடம்பெற்றது. 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் 67.52 வீதம் வாக்களிப்பு இடம்பெற்றதாக புள்ளி விவரங்கள் எடுத்தியம்புகின்றன.

வடக்கு, கிழக்கில் வாழும் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிவாகை சூடும் பிரதான வேட்பாளர் யார் என்பதனை நிர்ணயிக்கப் போகின்றன என்ற ஓர் அலை, மேல் எழுந்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். அந்தக் கணிப்புச் சரியாவதற்கு, வாக்களிப்புக் குறித்த உங்கள் ஒவ்வொருவரது ஆர்வமும் ஈடுபாடும் முழு அளவில் தேவை.

நாளைய நாயகர்கள், வாக்களாப் பெருமக்கள் ஆகிய நீங்களே. உங்களுக்கு உள்ள ஜனநாயக உரிமைகளின் வெளிப்பாடுகளில் முதன்மையான வாக்களிப்பில் பூரணமாக, ஈடுபடுங்கள். காலையில் நேரகாலத்துடன் முந்திக் கொண்டு உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்துக்கு விரையுங்கள்.

இன்றே செய்வோம், அதனை நன்றேசெய்வோம், உகந்தவருக்கே வாக்களிப்போம் என்பதற்கான முடிவில் தளம்பல் இல்லாமல் செயற்படுங்கள். உங்களிடமே பொதிந்து உள்ள (ஜனநாயக) உரிமைகயைப் பேணுங்கள்.

# தேர்தல் களத்தில் தென்படும் சாதக பாதக நிலைமைகள்

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து ரெங்கன்

மஹிந்த ராஜபக்ஷ தாம் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இரண்டு முக்கிய விடயங்களில் முதலில் கவனம் செலுத்தவிருப்பதாகக் கூறியுள்ளார். அவற்றில் முதலாவது 2020ஆம் ஆண்டில் நாட்டின் தனிமனித வருமானத்தை தலா 7,500 அமெரிக்க டொலர் அளவுக்கு உயர்த்துவது, மற்றையது மக்களின் கருத்துக்கள், அபிலாஷைகள் மற்றும் விருப்பங்களை பிரதிபலிக்கும் விதத்தில் புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவது என்பவையாகும்.

அண்மையில் விஜயராம மாவத்தையிலுள்ள சிறிசேனவின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் லஞ்ச ஊழல் தலைவிரித்தாடுவது தொடர்பாக பல விடயங்கள் வெளிப்படையாகின.

ராஜபக்ஷ ஏற்கனவே தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்களுக்கு மறுமொழியாக அவை முன்வைக்கப்பட்டன.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்ற சில மாதங்களின் பின்னர் அமைச்சர் ஒருவர் ஊழல் செயற்பாடொன்றில் ஈடுபட்டிருந்தார். நான் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் முறையிட்டேன். என்னிடம் அதற்கான ஆதாரங்களும் இருந்தன என்று கூறிய சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் என்னையே அந்த அமைச்சருக்குக் கடிதம் எழுதும்படி அவர் எனக்குக் கூறினார். அவர் தெரிவித்த கருத்துக்களினால் நான் முழுமையாக ஏமாற்றமடைந்தேன். அவருக்காக சிரமத்தோடு உழைத்ததெல்லாம் இதற்குத் தானா என்று எண்ணலானேன் என்றார்.

சிறிசேனவும் தாம் பதவிக்கு வந்தவுடன் இரண்டு முக்கிய விடயங்களில் உடனடியாக கவனம் செலுத்தப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார். ஒன்று இன்றுநாட்டில் தினமும் ஒருவேளை உணவுக்காக ஏங்கி நிற்கும் சுமார் ஒருகோடி மக்களின் நலனுக்காக செயற்படுவது. இதில் கவனம் செலுத்தும் அதே வேளை இவைகளையும் உள்ளகப்படுத்திய தமது 100 நாள் செயற்றிட்டத்துக்கான அரசமைப்பு மாற்றங்களில் கவனம் செலுத்துவது என்றார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு சாதகமாக பல விடயங்கள் காணப்படுகின்றன. ஒன்று அவரிடம் இயற்கையாகக் காணப்படும் மற்றவர்களைத் தம்பக்கம் ஈர்க்கும் கவர்ச்சி மற்றும் அவரது தலைமைத்துவக் குணங்கள். இவைகளைக் கொண்டே கடந்த இரண்டு முறைகளும் தேர்தலில் அவர் இலகுவாக வெற்றிபெற்றார். இலங்கையின் கிராமிய சிங்கள–பௌத்தர்களிடம் அவருக்குள்ள ஆதரவைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்காவே எதிர்த் தரப்பில் போட்டியிடுவார் என்று அரச தரப்பினர் ஆயத்தமாகி வந்தமை பயனற்றுப் போய் உள்ளன.

ராஜபக்ஷ ஆட்சியில் ஜாதிக ஹெல உறுமய முக்கிய சக்தியாக இருந்து அதன் சிங்கள–பௌத்த சித்தாந்தத்தை உருவாக்கியும் மெருகிட்டுக் கொண்டும் இருந்தது. அக்கட்சியினால்தான் அவர் பெரும்பாலும் வழி நடத்தப்பட்டு வந்தார். அந்த ஆதரவு இனி அவருக்குக் கிடைக்க மாட்டாது.

எனவே, சிங்கள பௌத்தர்களின் வாக்கு, ஆதிக்கம் அவர் பக்கம் இருக்கும் என்று கூறமுடியாது. பொதுபல சேனாவை அதற்குப் பதிலாக கணிக்க முடியாது. ஏனென்றால் அதன் வாக்கு வங்கி கட்டுப்படுத்திய அளவிலேயே காணப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி முழுமையாக இருந்தது. மைத்திரிபால சிறிசேன பிரிந்துசென்றதன் காரணமாக அக்கட்சியின் மூன்றில் இருந்து ஐந்து வீதம்வரை பாரம்பரிய வாக்கு வங்கியில் வீழ்ச்சி கண்டிருக்கமுடியும். எதிர்த் தரப்பில் சந்திரிகா குமாரதுங்க களமிறங்கியிருப்பதால் பண்டாரநாயக்க பாரம்பரியம் காரணமாக கட்சியின் வயது முதிர்ந்த வாக்காளர் களின்ஆதரவு ராஜபக்ஷவுக்கு வெகுவாகக் குறைவது சாத்தியம். இதுவும் அவருக்கான சவாலாகவே காணப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு ராஜபக்ஷவுக்கு முஸ்லிம் வாக்காளர்களின் ஆதரவு கணிசமாகக் குறிப்பிடக்கூடியதாக கிடைத்திருந்தது. ஆனால் 2014 ஜூன் மாதம் பேருவளை, அளுத்கம மற்றும் தர்காநகர் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களின் விளைவாக அந்த மக்களின் ஆதரவும் பெருமளவில் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தென்னிலங்கையில் மட்டுமல்ல நாடு முழுவதிலும் குறிப்பாக கிழக்கில் அங்கு முஸ்லிம் தலைவர்கள் அவருக்கு மாறாக அணி சேர்ந்துள்ளார்கள். இந்தமுறை தொழில்சார் பிரமுகர்களின் ஆதரவும் திசை மாறியுள்ளது. பல்கலைக்கழக கல்விசார் சமூகத்தினர், சட்டத்தரணிகள் மற்றும் ஆசிரியர்கள் முதலியவர்களில் பெரும்பாலனவர்கள் எதிரணிக்காகப் பரப்புரை செய்கிறார்கள். சிவில் சமூக அமைப்புகளிலும் இந்தவித பிரிவினை காணமுடிகிறது. உள்ளூர் கலைஞர்கள் பெரும்பாலும் இந்தமுறை ராஜபக்ஷவுக்கு மாறாக செயற்படுவதைக் காணமுடிகின்றது.

இந்தமுறை 10 லட்சம் பேர் வரை புதிய வாக்காளர்கள் உள்ளனர். அவர்களைக் கவரும் விதத்தில் அரசு தரப்பில் திட்டம் எதையும் காண முடியவில்லை. இளம் சமுதாயத்தினரின் கருத்துக்கள் பெரும்பாலும் சமூக இணையத் தளங்களில் வெளியாகின்றன. அங்கு சிறிசேனவுக்கு அமோக ஆதரவு காணப்படுகிறது.

ராஜபக்ஷவின் குடும்பத்தினர் பெருமளவில் அதிகார பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள் என்ற உண்மை பொதுமக்கள் மத்தியில் பெரும் வெறுப்பை உருவாக்கியுள்ளது.

அவர்களில் குறைந்தது ஒருவர் மேற்கொண்டுள்ள பணியானது பெரும் விமரிசனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. அவர்களில் ஒருவர் குறித்து கட்சிமாறிய பலரும் குற்றம் சாட்டியுள்ளார்கள். அவரே தங்கள் அமைச்சுத் திட்டங்களுக்கு நிதிகள் வழங்கும் பணியில் ஆதிக்கம் செலுத்துபவராய் இருந்தார் என்கிறார்கள் அவர்கள்.

எனவே இவை போன்றவையும் 2010ஆம் ஆண்டு ஜெனரல் சரத்பொன்சேகா தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பத்தைவிட இம்முறை தேசிய ஜனநாயக முன்னணியினர் அகன்ற கூட்டிணைப்பொன்றை உருவாக்கிக்கொள்ள உதவியுள்ளது.

பெரும் எண்ணிக்கையில் மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சிமன்றசபைகளின்உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியி லிருந்து கட்சி மாறியிருக்கும் அதேவேளை நேற்று வரை (சனிக்கிழமை) 26 நாடாளுமன்ற உறுப்பினர் கள் எதிரணி பக்கம் மாறியுள்ளார் கள். நாட்டின் அரசியல் வரலாற்றில் இது ஒரு புதிய சாதனையாகும். கடந்தவாரம் அரசு தரப்பில் ஆராயப்பட்ட ஒரு குற்றச்சாட்டான இப்பொழுது ஜாதிகஹெல உறுமய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தனி நாட்டு நிகழ்ச்சிநிரலை ஏற்றுக்கொண்டுவிட்டது என்பதற்கு அந்தக் கட்சியின் சம்பிக்க ரணவக்க சரியான பதிலடி கொடுத்திருக்கிறார்.

அந்தப் பருப்பு இனிமேலும் வேகாது. அவர்கள் தான் புலிகளின் முக்கியஸ்தர்களை தங்களுடன் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். போர் விரிவுபடுத்தப்பட்டமைக்கு அவர்களே காரணமாக இருந்துள்ளார்கள். த.தே.கூட்டமைப்பினர் மைத்திரியின் வேலை திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் மைத்திரிக்கு நிபந்தனையற்ற ஆதரவை அறிவித்துள்ளார்கள் என்று கூறியுள்ளார் சம்பிக்க.

# அடங்குமா டெங்கு நோய் இங்கு?

(மருத்துவர் சி.யமுனாநந்தா)



தற்போது யாழ்ப்பாணத்தை டெங்கு நோய் அச்சுறுத்துகின்றது. முன்னர் ஒருசில பத்துக்களில் இருந்த நோயாளிகளின் தொகை இன்று ஆயிரங்களைத் தாண்டுகின்றது. இது யாழ்.குடாநாட்டில் ஒரு டெங்கு அபாயச் சூழல், உட்பரம்பல் Endemic என்ற நிலையும் உள்ளதாக எடுத்துக் காட்டுகின்றது. முன்னர் கொழும்பு போன்ற தென்பகுதியில் இருந்து வருபவர்களினாலேயே தொற்று ஏற்பட்டு, நோயாளர் இனங் காணப்பட்டனர். இன்று டெங்குக் கிருமிகள் நுளம்புகள் மூலமும் மனிதர்கள் மூலமும் யாழ். குடாநாட்டின் பலமூலைகளுக்குப் பரப்பப்பட்டுவிட்டது. பருவ மழை நின்றாலும் சிதறிய நீர்களில் டெங்கு நுளம்பு பரவ ஏதுநிலை உள்ளது. அடுத்து எதிர்வரும் 3 மாதங்கள் பனிப் பொழிவுக்குரியது. இப் பனிப் பொழிவு நீர், சிறு பொலித்தீன்களில் சேகரிக்கப்பட்டாலேயே அதில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயநிலை உள்ளது.

டெங்குக் கட்டுப்பாட்டில் நுளம்புகளின் பெருக்கத்தை அழித்தல் எவ்வாறு முக்கியமானதோ அவ்வாறே நோயாளிகளை இனம் கண்டு, அவர்கள் வாழும் பிரதேசங்களில் நுளம்புகளின் பெருக்கத்தை அழித்தலும் முக்கியமானது.

துரதிஷ்டவசமாக வைத்திய சாலையின் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறும் காய்ச்சல் நோயாளிகளின் விவரத்தை, தொற்றுநோய்த் தடுப்பு வைத்திய பிரிவு யாழ்ப்பாணத்தில் இன்றுவரை ஆய்வுக்கு, உட்படுத்தவில்லை. டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் பிரதேச ரீதியில் நோயாளர்கள் அடையாளப்படுத்தல், உடனடி நடவடிக்கைகளுக்கு மிகவும் இன்றி அமையாதது.

நோயாளிகள், வெளிநோயாளர் பிரிவில் உரிய முகவரியை அளிக்காமையும் இந்தத் தகவல்களைப் பெறமுடியாமைக்கு முக்கிய காரணம்.

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் டெங்கு நோயாளிகளின் தகவல்களைத் தெளிவாகப் பெற்று டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது சுகாதாரத் திணைக்களத்தின் கடமையாகும்.

பாடசாலைச் சூழலில் டெங்கின் தாக்கம் ஏற்படாது இருப்பதற்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கைகொடுத்தல் வேண்டும்.

அடுத்து டெங்கு நோயாளிகள் அனைவரும் அரச வைத்திய சாலையில் தான் சிகிச்சைபெற வேண்டும் என்ற பயம் இருத்தல் கூடாது. நோயாளிகள் தமக்கு நம்பிக்கையான வைத்தியரிடம் சிகிச்சை பெறலாம். குறிப்பாகக் கடுமையான உடற் செயற்பாடுகளில் வேலைகளில் ஈடுபடல் ஆகாது. போதிய உப்புச்சத்து நிறைந்த நீராகாரத்தை உட்கொள்ள வேண்டும். மஞ்சள் சேர்ந்த உணவுகள், பழங்கள் இலைக்கறிகள் உள்ள உணவுகள் மிகவும் நல்லது.

“டெங்கு நோயாளிகள் அனைவரும் அரச வைத்தியசாலையில் தான் சிகிச்சைபெற வேண்டும் என்ற பயம் இருத்தல் கூடாது. நோயாளிகள் தமக்கு நம்பிக்கையான வைத்தியரிடம் சிகிச்சை பெறலாம். குறிப்பாகக் கடுமையான உடற் செயற்பாடுகளில் வேலைகளில் ஈடுபடல் ஆகாது. போதிய உப்புச்சத்து நிறைந்த நீராகாரத்தை உட்கொள்ள வேண்டும். மஞ்சள், சேர்ந்த உணவுகள், பழங்கள் இலைக் கறிகள் உள்ள உணவுகள் மிகவும் நல்லது.

டெங்கு நோயின் அபாய நிலைகளாகக் குருதிச் சிறுதட்டுக்களின் எண்ணிக்கை 150,000 குறைதல் அபாயமானதாகும். வயிற்றுநோ, வாந்தி ஏற்படல் அபாயமான நிலை ஆகும். இத்தகைய சந்தர்ப்பத்தில் வைத்தியசாலை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறல் அவசியம். மாறாக எல்லா நோயாளிகளையும் வைத்தியசாலையில் அனுமதித்தால் மிகவும் அபாயகரமான நோயாளிகளின் கவனிப்புக் குறைவாகும்.

டெங்குநோய் பொதுவாகப் பலருக்கு ஏற்படினும் சிலருக்கே அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதில் குழந்தைகள், போசாக்குக் குறைபாடு உடையவர்கள், மன நெருக்கீட்டுக்கு உட்பட்டவர்களில் பாதிப்பு அதிகம்.

அடுத்து டெங்கு நோய் என்றவுடன் மரணதண்டனையைப் பெற்றுவிட்ட உணர்வைப் பலர் பெறுகின்றனர். டெங்குநோய் தொடர்பான அச்சம், நோயாளிகளையும், அவர்களது உறவுகளையும் மிகவும் கிலிகொள்ள வைத்துள்ளது. இந்த நிலையில் நோயாளிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆறுதல் வார்த்தைகளும் மனத்தைரியத்தையும் கொடுத்தல் எமது கடமையாகும்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து, நோயாளியைச் சூழவுள்ளவர்களுக்கு நோய்த் தொற்று நுளம்பினால் ஏற்படாது தடுத்து, சூழலில் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல் மிகவும் இன்றியமையாதது.

யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் நெருக்கமான வீடுகளும், வடிகால் அமைப்பும், திண்மக் கழிவு முகாமைத்துவமும் டெங்குப் பரம்பலில் முக்கியத்துவம் பெறுகின்றது. கோப்பாய், உடுவில், மருதனார் மடம், நல்லூர் பிரதேசங்களில் நெருக்கமான காணிகளும், விரைவில் வளரும் பூண்டுகளும் கவனிப்பாரற்ற வடிகால்களும் டெங்குப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. தீவுப்பகுதி, வடமராட்சி, கந்தரோடைப் பிரதேசங்களில் சுற்றுலாப்பயணிகளின் தாக்கம், டெங்கினைத் தீர்மானிக்கின்றது.

எயிடீஸ் நுளம்பு கடிப்பதனால், டெங்கு நோய்க்கான வைரஸ் தொற்றலடைகின்றது. அது போல் டெங்கு நோயாளியில் இருந்து எயிடீஸ் நுளம்பு டெங்குக் கிருமிகளைப் பெற்றுக்கொள்கின்றது. நுளம்பு இல்லாத சூழல் நோய்த் தொற்று ஏற்படுவதனையோ நோய் பரவுவதையோ தடுக்கும். இதற்கு எம்மால் இயன்ற செயல்களைச் செய்தல் வேண்டும்.

எயிடீஸ் நுளம்பு நோயாளியைக் கடிக்கும்போது நோய்க் கிருமி நுளம்பினுள் செல்லும். பின் நுளம்பின் இழையங்களினுள் சென்று 8–10 நாள்களில் நுளம்பின் உமிழ்நீர்ச் சுரப்பியில் இருந்து, நுளம்பு மனிதரைக் கடிக்கும்போது நோய்க் கிருமியைப் பரப்புகின்றது. நுளம்பு ஒரு தடவை கடித்தாலே நோய்த் தொற்று ஏற்படும். இந்த நுளம்பின் ஆயுட் காலம் பொதுவாக 21 நாள்கள்.

ஒருவருக்கு நுளம்பினால் கிருமி உடலினுள் சென்று 3 – 13 நாள்களில் நோய் அறிகுறிகள் தென்படும்.

டெங்கு நோயின் அறிகுறிகள்

01. காய்ச்சலின்போது பின் வரும் அறிகுறிகள் தோன்றலாம்.

திடீர் காய்ச்சல்
தலைவலி
வாய், மூக்கு, வழி குருதிப் பெருக்கு.
தசை, மூட்டு வலி.
வாந்தி
தோலில் சிறிய சிவப்புப் புள்ளிகள் தோன்றலாம்.

02. நோய் கடுமையான போது பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

தாழ் குருதி அமுக்கம்
நுரையீரல் சுற்றுச் சவ்வு நீர் தேங்கல்
வயிற்றில் நீர் தேக்கம்
உணவுக் கால்வாயில் குருதிப் பெருக்கல்.

நோயில் இருந்து மீளும்போது பின்வரும் அறிகுறிகள் தோன்றலாம்.

நினைவில் மாற்றம்
வலிப்பு
உடலில் சொறிவு
இதயத்துடிப்பு வீதம் குறைதல்

டெங்குவைரஸ் இறைபோநியுக்கினிக்கமிலத்தைக் கொண்ட வைரஸ் ஆகும். இது மனிதரைத் தாக்கும்போது உருவாகும் நோய் எதிர்ப்பு குருதிப் பாயங்களைக் கொண்டு நான்கு வகைகளாக வகுக்கப்படும். முதல் ஒருவகையும் பின் அடுத்த வகையும் தொற்று ஏற்படும் போது பாதிப்பு அதிகமாகும்.

டெங்கு நோய்ப் பரம்பலினைக் கட்டுப்படுத்த Innovative Information Technology

புதிய தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் டெங்கு நோய் அறிகுறி உடையோரை உடனடியாக அடையாளம் கண்டு, டெங்கு நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தல் மிகவும் இன்றியமையாதது. இதற்கு வைத்தியசாலையின் வெளி நோயாளர் பகுதியில், சிகிச்சைக்குவரும் நோயாளிகளின் பெயர், வீட்டு முகவரி என்பவற்றை கணினித் தகவல் படிவத்தில் Data entry operators மூலம் பதிய வேண்டும். பின் மருந்து எடுக்கும் இடத்தில் நோயாளிக்குக் காய்ச்சல் எனப் பதியப்பட்டால் கணினியில் Data entry Sheet இல் காய்ச்சல் எனப் பதியப்படும். இதனால் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள டெங்கு நோயாளிகள் அல்லது காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்படுவர். இம் முறையினால் நுளம்பு பெருகும் வீதத்தைவிட நோயாளியின் நகரும் வீதத்தினை விட விரைவாக நோயின் பரம்பலை அறிந்து உடனடியாக நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தலாம். எனவே டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கணினி மயப்படுத்தப்பட்ட தகவல் தொழில் நுட்பம் மிகவும் ஆக்கபூர்வமானதாக அமையும். இதற்கு ஆரம்ப முதலீடாக, இரண்டு கணினிகளும், Datu entry Opcraror ஒருவரும் ஒரு வைத்தியசாலைக்குத் தேவை.

அடுத்து Public Private Mix என்கின்ற தனியார் அரச வைத்தியசாலைகளின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. அரச வைத்தியசாலைகள், தனியார் வைத்தியசாலைகள் டெங்குக் கட்டுப்பாட்டில் இணைந்து பணியாற்ற வேண்டும். அடுத்து மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் கலந்துரையாடல் மிகவும் இன்றியமையாதது. இவை நிவர்த்தி செய்யப்பட்டால் டெங்கினைக் கட்டுப்படுத்தல் சுலபமாகும். அர்ப்பணிப்பான சேவை மனப்பாங்கே, இந்த அசுர சுரத்தினைக் கட்டுப்படுத்த வேண்டப்படுகின்றது.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள்: துணைபோகும் அரச பணியாளர்கள்

நான் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒரு விவசாயி. கடந்த புதன் கிழமை நான் வயலுக்கு மருந்தடிக்க வெளிக்கிட்டபோது, எனது பகுதி விவசாய சம்மேளனத் தலைவர் எனக்கு ஓர் அவசர செய்தியைச் சொன்னார். உங்களின் விவசாய நட்டஈட்டுப் பணம் இன்று சிவன்கோயிலடியிலுள்ள கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்படும். தேசிய அடையாள அட்டையுடன்வந்துபெற்றுக்கொள்ளுங்கள் என்றார். இதனை கமநலசேவை நிலையத்திலிருந்து ஒரு பெண் ஊழியர் அறிவித்திருந்தார் என்று கூறினார்.

ஏற்கனவே இதற்குத் தேவையான சகல தகவல்களையும் நாம் வழங்கியிருந்ததுடன் கொடுப்பனவுப் படிவத்திலும் கையொப்பம் இட்டிருந்தோம். அத்துடன் எங்கள் வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படும் என்றும் கூறியிருந்தனர்.

இதற்கு மாறாக திடீரென இன்று வரும்படி ஏன் அழைக்கிறார்கள் என்று புரியாமல், வயலுக்கு மருந்தடிக்கிற ஒழுங்கையும் கைவிட்டு பணம்பெறும் ஆசையில் உரிய நேரத்துக்கு முன்னதாகவே கலாசார மண்டபத்துக்குப் போய்விட்டேன். அங்கு சுமார் 1500 வரையிலான விவசாயிகள் (பெண்கள், முதியவர்கள் உட்பட) தென்மராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் வந்து திருவிழாக் கூட்டம் போல நிறைந்திருந்தனர்.

ஆனால் அதனுடன் தொடர்புடைய எந்த அரச அதிகாரிகளும் அங்கு காணப்படவில்லை. அதிகாரிகளின் வாகனத்தை வழிமேல் விழி வைத்தபடி பார்த்திருந்தோம். நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. வாகனச் சத்தம் கேட்டது. மக்கள் மனங்களில் ஒரே மகிழ்ச்சி. ஆனால் அங்கு வந்ததோ அரசுக்கு காவடி எடுக்கும் அமைச்சரினதும் அவருக்கு கூசா தூக்கும் பரிவாரங்களதும் வாகனங்களே. சரி அவர் வந்து பணம் தரப் போறாராக்கும் என்று நம்பியிருந்தோம்.

அவர் பணத்துக்கு பதில் மஹிந்த அரசனின் பரணி பாடினார். பற்றாக்குறைக்கு பரிவாரங்களும் பாடின. உங்களுக்குத் தரப்படும் இந்தப் பணம் மஹிந்த அரசனின் காருண்யத்தால் கிடைக்குது என்றார். அவருக்கு வெற்றிலை கொடுத்து நாம் வரவேற்க வேண்டும் என்றார். வெற்றிலைக்கு வெற்றியைத் தரவேண்டும் என்றார். ஒவ்வொரு தமிழனதும் (தன்மானமுள்ள)கடமை என்றார். இன்னும் பல சொன்னார். எமக்கு அவையொன்றும் முக்கியமாகத் தெரியவில்லை. பணம் எப்போது தரப்படும் என்றே பார்த்துக் கொண்டிருந்தோம். கடைசியில் அந்தப் பணம் உங்கள் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படும் என்றார். இதனால் ஏமாற்றம் அடைந்தோம். சரி இந்த அழைப்புக்குப் பொறுப்பானவர்களிடம் இது பற்றி விசாரிப்போம் என்று எண்ணி, நான் இந்த நிதிக்கு பொறுப்பான தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குச் சென்று விசாரித்தேன். அவர்கள் சொன்னார்கள் எமக்கும் இந்த அழைப்புக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. உங்களுக்குரிய பணத்தை வங்கியில் வைப்புச் செய்து வருகிறோம். ஓரிரு நாள்களில் அதை நீங்கள் பெறமுடியும் என்றனர். கமநல சேவை நிலையத்திலிருந்து தானே அறிவித்தல் வந்தது, எதற்கும் அங்கு சென்று விசாரியுங்கள் என்றனர்.


அந்த நிலையத்துக்குச் சென்று விசாரித்தபோது பிரதேச செயலகத்திலிருந்துதான் அறிவித்தல் தந்தார்கள் என்றனர்.

இதுதான் இன்றைய எங்கள் பிரதேசத்தின் நிலை. ஒரு புறத்தில் மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் ஒரு சில அரசியல்வாதிகள், மறுபுறத்தில் அந்த அரசியல்வாதிகளுக்குத் துணைபோகும் சில அரச பணியாளர்கள். இவர்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாதவர்கள். செய்யக் கூடாதவற்றைச் செய்பவர்கள்.

இவர்கள் ஒன்றில் தவறான வழியில் பதவிக்கு வந்திருக்க வேண்டும் அல்லது தவறான வழியில் ஒன்றை அடைய விரும்புபவராக இருக்கவேண்டும். போதாக்குறைக்கு பெரிய அரச பணியாளரான தேர்தல் ஆணையாளர் நீதியான முறையில் தேர்தல் நடைபெறும் என்று சத்தியம் செய்கிறார்.

*க.அருந்தவபாலன்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## மாற்றங்கள் எல்லாம் நன்மைக்கே

இலங்கையில் கடந்த பல வருடங்களாக சீரான காலநிலை இருக்கவில்லை. மழையை நம்பியதான மக்களின் விவசாய நடவடிக்கைகள் இதனால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டிருந்தன. ஒரு வருடம் வறட்சியாக இருந்தால், அடுத்த வருடம் வெள்ளம் ஏற்பட்டு பேரிடர் ஏற்படும்.

உலகில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் இலங்கையையும் பாதித்திருந்தது. இதனால் ஒவ்வொரு வருடமும் நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடையாத நிலைமை ஏற்பட்டது. இதனால் விவசாயம் பாதிப்பை எதிர்கொண்டிருந்தது. வறட்சி நிவாரணம் அல்லது வெள்ள நிவாரணம் வழங்க வேண்டியும் இருந்தது.

பருவமழை கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் பொய்த்துப் போயிருந்தது. வளிமண்டத்தில் ஏற்பட்ட தாழ்வு நிலை காரணமாகவே மழை பெய்யும் நிலைமை காணப்பட்டது. இது விவசாயத்துக்கு ஒவ்வாத ஒன்றாகவே இருந்து வந்தது. இவ்வாறு இருந்து வந்த நிலைமை கடந்த ஆண்டும் தொடரவே செய்தது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்திற்கு முதல் நாடு முழுவதையும் வறட்சி வாட்டி வதைத்தது. ஆனால் நவம்பர் மாதத்திற்குப் பின்னர், பருவப் பெயர்ச்சி மழை நாடு முழுவதிலும் பெய்தது. பல இடங்களில் குளங்களில் நீர் தேங்கி வான் கதவுகள் திறக்கும் நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால் விவசாயத்திற்குப் போதுமான அளவு மழை பெய்திருந்தது. இதனால் நாடு முழுவதிலுமே சீரான நெல் விளைச்சல் இந்த வருடம் கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நீண்ட காலத்திற்குப் பின்னர் இந்த 'மாற்றம்' நடந்துள்ளது. இயற்கையும் இந்த ஆண்டு நல்லதொரு மாற்றத்தை தந்துள்ளது.

மேலும், 20 வருடங்களின் பின்னர் – போர் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு பாப்பரசர் ஒருவர் வரவுள்ளார். பாப்பரசர் என்பவர் கிறிஸ்தவ மதத்தவர்களுக்கு மாத்திரமல்ல, ஒட்டுமொத்த சமூகத்துக்குமே ஒரு புனிதர்தான். அப்படிப்பட்ட புனிதர் இந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இதுவும் நல்லதொரு 'மாற்றமாக' இலங்கைக்கு இருக்கப் போகின்றது.

காலமும், சூழலும் பல்வேறு 'மாற்றங்களை' ஏற்படுத்தியுள்ளது. இயற்கையாகவே அமைந்த 'மாற்றங்கள்', எல்லோருக்கும் நன்மை பயப்பதாகவே அமையும். இயற்கை ஏற்படுத்தித் தந்த 'மாற்றங்களை' நாங்கள் அனுபவிக்க, நாமும் சில 'மாற்றங்களை' உருவாக்கிக் கொள்ளுவோம்.

மாற்றம் ஒன்றுதான் உலகில் மாற்றமில்லாதது.

பத்தி எழுத்து

# சிறுவர்




# நம்ப முடிகிறதா?

இசை ஒலித்தால் பூக்கள் வேகமாக வளரும்
உலகில் விற்பனை செய்யப்படும் மிகப் பெரிய உணவு ஒட்டகம்
இரட்டையர் ஒட்டிப் பிறப்பது 2 இலட்சம் பிரசவங்களில் ஒருமுறைதான் நிகழ்கிறது
பெண் மின்மினிப் பூச்சிகளால் ஆண் பூச்சிகள் அளவுக்குப் பறக்க முடியாது. காரணம், அவற்றின் சிறகுகள் மிகச் சிறியவை.



அமெரிக்காவில் ஒவ்வொரு 5 விநாடிகளுக்கும் 60 ஆயிரம் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப்படுகின்றன.
சராசரி மனிதனால் 150 நபர்களை மட்டுமே நன்றாக நினைவில் வைத்திருக்க முடியும்.
ஹிட்லரைக் கொல்ல 42 முறை முயற்சிகள் நடந்துள்ளன. ஆனால், அவர் தற்கொலை செய்துகொண்டார்.
முழுவதும் இரும்பால் செய்யப்பட்ட ஈபிள் கோபுரத்தின் மொத்த எடை பத்தாயிரம் தொன்
சனி கிரகத்தின் வளையங்கள் பனியால் ஆனவை.

## பட்டாசு கண்டுபிடிப்பு



பட்டாசுகளை இந்த உலகுக்கு அறிமுகப்படுத்தியது சீனாதான். கி.பி 960–1279–ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில அங்கு ஆட்சி செய்த லிங் வம்சத்தினர் பட்டாசுகளைக் கண்டுபிடித்தார்கள். காகிதக் குப்பையில் வெடிமருந்தைத் திணித்து வெடிக்கிற பழக்கத்தை அவர்கள் தான் கண்டுபிடித்தார்கள். 'பைரோ டெக்னிக்ஸ்' எனும் தொழில்நுட்பத்தை வைத்துத்தான் பட்டாசு தயாரிக்கிறார்கள். பட்டாசு என்ற பெயர் சமஸ்கிருத மொழியில் இருந்து வந்தது. 'டபாஸ்'என்றால் 'உரத்த ஒலி'என்று அர்த்தம். இந்த 'டபாஸ்' என்ற பெயர் மருவி 'பட்டாசு'என்று வந்தது. பொட்டாசியம் நைட்ரேட், பேரியம் நைட்ரேட், ஸ்டான்சியம் நைட்ரேட், பொட்டாசியம் குளோரைட் போன்ற கலவைகளைக் கொண்டு பட்டாசு தயாரிக்கப்படுகிறது. இந்தக்கலவைகளில் இருந்தே பட்டாசின் ஒலி வருகிறது.


## பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பூநகரி (வ.து) பாரவூர்திகள் பகிரங்க ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான NPLA - 5114, 47 - 3141ஆம் இலக்க பாரவூர்திகளை 30.01.2015ஆம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப.10.00 மணிக்கு சங்க தலைமைக் காரியால யத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

மேற்படி பாரவூர்திகளை காலை 8.30மணி தொடக்கம், மாலை 5.00 மணிவரை சங்கத் தலைமைக் காரியாலயத் தில் பார்வையிடலாம்.

| வாகன இலக்கம் | வாகன வகை | ஆரம்ப விலை |
|---|---|---|
| 47-3141 | Ashok Leyland | 400,000.00 |
| NP.LA5114 | Ashok Leyland | 350,000.00 |

வாகனத்திற்கான கேள்வி கோரும் மீளளிக்கப்படாத தொகை ரூபா 500.00உம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 5000.00 (மீளளிக்கக்கூடியது) செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விக்கு சமுகமளிக்கவும்.

ந.சுந்தரமூர்த்தி,
தலைவர்,
பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(சி18905)
(12.3.7)

CM K

## PEOPLE'S BANK

TENDER NOTICE

SALE OF USED MOTOR VEHICLES

**Sealed quotations are hereby invited for the sale of MOTOR VEHICLES used by the People's Bank.**

| Item No. | Vehicle No. | Type of Vehicle | Make & Model |
|---|---|---|---|
| 1 | 48-4587 | Lorry | ISUZU- NHR55E |
| 2 | 48-5068 | Lorry | ISUZU- NHR55E |
| 3 | 226-0899 | Lorry | ISUZU- NHR55E |
| 4 | 226-1221 | Lorry | ISUZU- NHR55E |
| 5 | 54-4525 | Cash Van | Toyota - Hiace |
| 6 | 250-6704 | Cash Van | Toyota - Hiace |
| 7 | 62-1190 | Passenger Van | Toyota - Hiace |
| 8 | 61-6531 | Van | Toyota - Hiace |
| 9 | 32-3918 | Jeep | Mitsubishi Jeep |
| 10 | 204-4871 | Three Wheeler | Bajaj |
| 11 | 204-4872 | Three Wheeler | Bajaj |

These vehicles could be inspected at People's Bank, Vehicle Park (adjoining Supplies Department) at No: 30/101, Kew Road, Colombo 02, **from 07.01.2015 to 21.01.2015** between 9.00 a.m to 3.00 p.m. on Bank working days. (Except Saturdays, Sundays and Public Holidays)

Application forms will be issued by the People's Bank, Supplies Department till **21.01.2015** between 9.00 a.m to 3.00 p.m on payment of non refundable fee of Rs. 1,000/- and refundable deposit of Rs. 10,000/-.

Terms and conditions regarding the tender will be issued along with the tender applications. Tender will be opened **at 2.00 p.m on 22.01.2015.** The applicants may be present at the time of opening the tender. Tender Application should be submitted to the following address in Register Post or kept at the tender box on below mentioned address.

**Deputy General Manager (BSS) ,**
**6th Floor, People's Bank Head Office,**
**Sir Chittampalam A Gardiner Mawatha,**
**Colombo 02.**

Application submitted after the above time will be rejected.

The Bank reserves itself the right of rejecting any or all bids or cancels the whole tender and the right of accepting any portion of a tender without assigning any reason before transfer the vehicles.

Vehicle technical details could be obtained from the Chief Transport Manager, People's Bank, Head Office over the Telephone Nos. 011 2436056 or 0112 481467.

**Chief Manager (Supplies),**
**People's Bank, Supplies Department,**
**No.30/101, Kew Road,**
**Colombo 02.**

**Tel: 011 2433048, 011 2439577, 011 2439578**
**Fax: 011 2439576**

(சி18913)
(12.3.7)

ஆக்கம்

# இந்த ஆண்டின் முக்கிய நாவல்கள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

அவ்வாறு போருக்குச் செல்லும் ஒரு வீரன்தான் கெய்ஜி க்ரியா. ஆனால் போரின் முதல் நாளே சக வீரர்களுடன் கெய்ஜி கொல்லப்படுகிறான். அதிசயமாக கெய்ஜி கண்விழிக்கும்போது முந்தைய நாள் இரவிலிருந்து சம்பவங்கள் மறுபடியும் நடக்கத்தொடங்குகின்றன. மறுநாளும் போரில் கெய்ஜி கொல்லப்படுகிறான்.

பலமுறை இவ்வாறு கொல்லப்பட்டவுடன் தன்னுடைய விதியானது ரீட்டா என்ற மற்றொரு கால சுழற்சியில் சிக்கிய பெண்ணுடன் இணைந்திருக்கிறது என்பதை கெய்ஜி உணர்கிறான். இருவரும் சேர்ந்து ஒவ்வொரு நாளும் சிறிதளவு முன்னேற்றம் காண, 160ஆவது நாளில் கெய்ஜியின் சுழற்சி எப்படி முடிவுக்கு வந்தது என்பதை வாழ்வியல் தத்துவங்கள், நட்பு, உணர்வுகளுக்கான முக்கியத்துவம் என்று பல கோணங்களில் பிணைத்து சொல்லப்பட்டுள்ளது இந்தக்கதை. இந்த ஆண்டு வெளியான Edge of Tomorrow என்ற Tom Cruise நடித்த ஹாலிவுட் படத்தின் மூலக்கதை இது.

Brave Dan (ஜூலை 2014)

கதை மற்றும் ஓவியம்: ஓசாமு தெசூகா (1962 ஜப்பானிய மாங்கா), ஆங்கில மொழியாக்கம்: கைல் வாண்டர்ஸ்டீன், வெளியீடு: டிஜிட்டல் மாங்கா ம்னிறா

ஜப்பானிய ஐனு பழங்குடியின புதையலை கைப்பற்ற மூன்று சாவிகள் தேவை. ஒரு சிறுவனும், விலங்குக்காட்சியகத்தில் இருந்து தப்பிய புலியும் சேர்ந்து தீயசக்திகள் கைவசம் செல்லாமல், அதைத் தடுப்பதே கதை.

ஜப்பானிய ஐனு பழங்குடியினரின் மீது அளவு கடந்த மரியாதை கொண்டிருந்த மாங்காவின் தலைமகனான தெசூகா, கடந்த காலத்தை பற்றிய கதைகளைத் திரட்டி 1962–ல் இதை எழுதினார்.

மேலாளரை எதிர்த்துக் குடும்பத்துடன் தப்பியோடுகிறார் கோட்டன் எனும் சிறுவனின் தந்தை. மற்றவர்கள் பின்தொடருவதைத் தவிர்க்க காட்டுக்கு அவர் தீ வைக்க, அதனால் விலங்குகாட்சியகத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் ரயில் கவிழ, டேன் என்ற புலி தப்பிக்கிறது.

அந்தப் புலி தீயில் விழும் ஒரு மரத்தின் அடியில் சிக்க, அதனை கோட்டனின் தந்தை காப்பாற்றுகிறார். பதிலுக்கு அவர்கள் குடும்பம் முழுவதையுமே அந்தப் புலி காப்பாற்றுகிறது. அதன் பின்னர் கோட்டனும் டேனும் நண்பர்களாகின்றனர். கோட்டனின் பெற்றோர்கள் கடத்தப்படும்போது, இபோபோ என்னும் முதியவர் கோட்டனைச் சந்தித்து ஐனு கோயிலின் பொக்கிஷங்களைப்பற்றியும், அவற்றை அடையத் தேவைப்படும் மூன்று சாவிகளைப் பற்றியும் சொல்லி, ஒரு சாவியை கோட்டனிடம் தருகிறார்.

கோட்டனின் கையால்தான் தனக்கு மரணம் ஏற்படும் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டாலும்கூட அவனுடனே கதை முழுக்க டேன் புலி பயணிக்கிறது. ஒரு கவித்துவ முடிவுடன் கதை நிறைவு பெறும்போது அந்தப் புலிக்காக நாம் கண்ணீர் சிந்துவதைத் தவிர்க்கவே முடியாது.

ஆங்கிலம் – பிரிட்டிஷ் காமிக்ஸ்: Butterfly Gate (ஒக்டோபர் 2014)

கதை: பெஞ்சமின் ரீட், ஓவியம்: கிரிஸ் வைல்ட்கூஸ், வெளியீடு: இம்பிராப்பர் புக்ஸ் (இங்கிலாந்து)

இரண்டு சிறுவர்கள் தங்களது தோட்டத்தில் வண்ணத்துப்பூச்சியைப் பிடித்து விளையாடிக் கொண்டு இருக்கும்போது, ஒரு விசித்திரமான வண்ணத்துப் பூச்சி அவர்களைக் கவர, அதைப் பின்தொடர்ந்து சென்று காலப் பெட்டகத்தின் கதவைத் திறந்து வேறொரு காலத்தில் அவர்கள் பிரவேசிக்கிறார்கள்.

அங்கு வேறு கிரகத்தைச் சேர்ந்த ஒரு உயிரினம் இவர்களை சில செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. வசனமோ, வார்த்தைகளோ இல்லாமல் வந்திருக்கும் காமிக்ஸ் கதை இது. நாவல்களில் இருந்து சித்திரக் கதைகள் எப்படி வேறுபடுகின்றன என்றால், கதையை ஓவியங்களின் மூலம் சொல்லும் பாணியில் தான். மறுபடியும் சித்திரக் கதைகளின் வசந்தத்துக்கு நம்மை அழைத்துச் செல்கிறது இந்தத் தொடரின் முதல் பாகம்.

Good Cop Bad Cop (நவம்பர் 2014)

கதை: ஜிம் அலெக்ஸாண்டர், ஓவியம்: லூக்கூப்பர் மற்றும் வில் பிக்கரிங், வெளியீடு: Rough Cut Comics (இங்கிலாந்து)

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நிழல்முகம் உண்டு. தனது நேரெதிர் துருவமாக இருக்கும் பகுதியை நிழல் முகமாகக் கொண்டவர்களை ஜெக்கில் ஹைடு என்று உளவியல் அறிஞர்கள் வகைப்படுத்துகிறார்கள். ஒரு காவல் துறை அதிகாரி இப்படி இரு வேறு மனநிலைகளில் இருந்தால் என்ன ஆகும்?

பிரிட்டனின் மிகச்சிறந்த காமிக்ஸ் என விருது வாங்கிய தொடரின் இரண்டாவது பாகம் இது. மனப்பிறழ்வு நிலையில் இருக்கும் காவல்துறை அதிகாரியான பிரையன் பிஷர் ஒரு மன நிலையில் இருக்கும்போது எப்படிச் செயற்படுகிறார்? அவரது மனநிலை மாறியவுடன் எவ்விதம் செயல்புரிகிறார் என்பதை கச்சிதமாக விளக்குகிறது இந்த புத்தகத்தின் முதல் கதை.

வசனங்கள்தான் இந்த கதையின் அதிகபட்ச சிறப்பு. கதாசிரியர் ஜிம் அசத்தி இருக்கிறார். சிக்கன ஓவிய மரபின்படி முதல் கதைக்கு ஓவியங்களை அமைத்துள்ளார் லூக்.

ஆங்கிலம் – அமெரிக்க காமிக்ஸ்: The Sword & The Butterfly (ஏப்ரல் 2014)



கதை: மத்தியஸ் உல்ஃப் ஓவியம்: ஜிம் ஜிமெனேஸ் (ஓவியம்) மற்றும் குளோரியா கபால் (வண்ணம்), வெளியீடு: Razor Wolf Entertainment LLC (அமெரிக்கா)

இங்கிலாந்தின் மன்னர் ஆர்தர், அவருடைய புகழ்பெற்ற எக்ஸ்காலிபர் வாள் ஆகிய இரண்டையும் இணைத்து, அட்லாண்டிஸ், கடல் கன்னிகள், அயல் கிரக படையெடுப்பு என்று பலவற்றையும் ஒருங்கிணைத்து எழுதப்பட்ட அறிவியல் புனைவு. Unbeatable என்ற கிராபிஃக் நாவலை எழுதி வாசகர்கள் மற்றும் விமர்சகர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட மாத்தியஸ் உல்ஃப் இரண்டு வருடங்களாக எழுதிய இந்தக் கதை ரவீந்திர நாத்தாகூரின் வசனத்துடன் ஆரம்பிக்கிறது.

தாய், தந்தையை இழந்த ஒரு சிறுமி மாபெரும் வீராங்கனையாகப் பயிற்சி பெறுகிறாள். பயிற்சி முடிந்தவுடன் அவளுக்கு மன்னர் ஆர்தரின் வீர வாளைப் பற்றியும், லேடி ஆப் தி லேக் பற்றியும் சொல்லப்படுகிறது. ஆர்தரின் வாளான எக்ஸ்காலிபரை அவள் எடுக்கும் போது கதை ஆரம்பிக்கிறது. அவள் தந்தையைக் கொன்றது யார்? அவள் தாய் யார்? கடலில் மூழ்கிய அட்லாண்டிஸ் கண்டத்துக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்பு என்று பல கோணங்களில் நகர்கிறது இந்தக் கதை.

The Late Child & Other Animals (நவம்பர் 2014)

கதை: மார்க்கரிட் வான் குக், ஓவியம்: ஜேம்ஸ் ரோம்பர்கர் (மனைவியின் கதை மற்றும் கணவன் ஓவியம்), வெளியீடு: Fanta Graphics Books (அமெரிக்கா)

இரண்டாம் உலகப் போரின் முடிவில் லண்டனில் பெற்றோரையும், கணவனையும் இழந்து தனித்து நிற்கும் ஹெடி மற்றும் அவளது வளர்ப்பு மகளின் கதை. சமூகத்தில் பெண்களின் நிலையைப் பற்றிய நேரடியான விமர்சனம் இது. மார்கரீட்டின் தாய் எப்படி தனியாக ஒரு பெண்ணைத் தத்தெடுத்து, அவளை வளர்க்க சட்டச் சிக்கல்களைச் சந்தித்து, வளர்த்து ஆளாக்கி, அதன் பின்னர் சமூகத்தின் அவலங்களை நேரிடையாகக் காண நேரிட்டு, அதை எதிர் கொண்ட விதத்தைப் பற்றிய புரிதலை இந்த நாவல் விளக்குகிறது.

ஒரு கவிஞர் உருவாக்கிய கிராபிஃக் நாவல் என்பது ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு ஓவியக் கட்டத்திலும், ஒவ்வொரு வார்த்தையிலும் அற்புதமாகத் தெரிகிறது. பெண் நிலை நோக்கில் மிக முக்கியமான புத்தகம்.

வணிகம்

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் அறிமுகம் நாளை மறுதினம் முதல்

2015 ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ள தொழில் நிறுவனங்கள் நாளை மறுதினம் முதல் தம்மை அறிமுகப்படுத்தலுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன என்று யாழ்ப்பாண வர்த்தகத் தொழில் துறை மன்றம் தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

6 ஆவது தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் தென்னிலங்கையில் இருந்து அதிகளவிலான தொழில் நிறுவனங்கள் வருகை தருவதுடன் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த 30 வீதமான தொழில் நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளன.

இதற்கான 80 வீதமானபதிவு நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்துள்ள நிலையில் தொழில் நிறுவனங்கள் தாம் காட்சிப்படுத்தவுள்ள உற்பத்திப் பொருள்களின் அறிமுகத்தை யாழில் மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை நாளை மறுதினம் முதல் ஆரம்பிக்கவுள்ளன. துண்டுப் பிரசுரங்களுடன் கூடிய விளம்பரங்களைப் பொதுமக்கள் மத்தியில் விநியோகித்து அறிமுகப்படுத்தலுக்கான வேலைகளை ஆரம்பிக்கவுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்காக பிற்போடப்பட்டிருந்த அறிமுகப்படுத்தல் நடவடிக்கைகள் தேர்தல் முடிவடைந்ததும் ஆரம்பிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து காட்சிக் கூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். வர்த்தகர்களுக்கிடையே இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் வருடந்தோறும் நடத்தப்படும் இந்தக் கண்காட்சி இந்த வருடமும் வர்த்தகர்களுக்கு நன்மை தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறும் கண்காட்சியைப் பொது மக்கள் பார்வையிடுவதற்கும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளது. (த–14)



## மஞ்சியின் 'கமட சரண' பொறுப்புணர்வுத் திட்டம்

சி.பி.எல் நிறுவனம், அண்மையில் அதன் மஞ்சி சமக கமட சரண உள்கட்டுமான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 6 சமூக திட்டங்களை பூர்த்தி செய்துள்ளது. இத் திட்டத்தின் ஊடாக சி.பி.எல் நிறுவனம், இந்த வருடத்தில் மாத்திரம் 83,765 மக்கள் நேரடியாக பயனடையக்கூடிய வகையில் நாடுமுழுவதும் 87 சமூக பொறுப்புணர்வு திட்டங்களை பூர்த்தி செய்துள்ளது. அண்மையில் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுள் 2,800 குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் தெனியாயவில் அமைக்கப்பட்ட சமூக மையம், பதுளை மற்றும் மொரவக பிரதேசத்திலுள்ள இரு பாடசாலைகளில் கற்கும் 650 மாணவர்களுக்கு சுகாதாரமான குடிதண்ணீர் வசதி, கெகிராவ நெல்லியகம மத்திய பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை கலை நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களை நடாத்துவதற்கு புதிய பாடசாலை அரங்கம், மஹியங்கனை பகரகம்மான முஸ்லீம் வித்தியாலயத்தைச் சேர்ந்த 250 மாணவர்களுக்கு அறிவியல் ஆய்வுகூடம் மற்றும் தீகவாபி சிங்கள மகா வித்தியாலயத்தை சேர்ந்த 300 மாணவர்களுக்கு நவீன பாடசாலை வாசிகசாலை போன்றவை உள்ளடங்குகின்றன.

மஞ்சி சமக கமட சரண உள்கட்டுமான அபிவிருத்தி திட்டமானது இலங்கையின் பின்தங்கிய கிராமிய சமூகத்தின் தேவைகளுக்கு உதவுவதுடன், நேரடியாக அதன் பயனை அடைபவர்களுடன் இணைந்து செயலாற்றி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பான குடிநீர் வசதியற்ற சமூகங்களுக்கு சுகாதாரமான குடிதண்ணீர் வசதிகளை மஞ்சி ஏற்படுத்திக் கொடுக்கிறது.

மேலும் மஞ்சி ஆனது அடிப்படை உள்கட்டுமான வசதிகளை கொண்டிருக்காதவர்களுக்கு வீதிகள், பாலங்கள் மற்றும் சமூக நிலையங்களை நிர்மாணித்துக் கொடுக்கிறது. கமட சரண திட்டம் ஊடாக எதிர்கால சந்ததியினரின் அறிவு வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கும் முகமாக கல்வி நிலையங்கள், வாசிகசாலை, கணினி மற்றும் அறிவியல் கூடங்களையும் மஞ்சி அமைத்துக் கொடுக்கிறது.

எமது நிறுவனம் சமூகத்தின் நலனுக்கு பங்களிப்பு வழங்கி வருகிறது. ஏனெனில் வணிகம் என்பது வெறும் இலாபம் சார்ந்தது மாத்திரமல்ல. சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுவதும் தான் என நிறுவனம் உணர்ந்துள்ளது' என குழு பணிப்பாளரும். சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பிரிவு தலைவருமான நந்தன விக்ரமகே தெரிவித்தார். எமது திட்டங்களில் 42 வீதம் பாடசாலை சார்ந்ததாகவும், 29 வீதமானவை தூய்மையான குடிதண்ணீரை வழங்கும் முகமாகவும் அமைந்துள்ளன. இவை மிக எளிய விடயங்களாக தோன்றலாம். ஆனால் இவை நாம் உதவிடும் சமூகங்களிலுள்ள மக்கள் மத்தியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவல்லவை என்றார். (த)

# தொழில்நுட்பம்

## INSTAGRAM இன் அதிரடி




ஒளிப்படங்கள் உட்பட சிறிய அளவிலான வீடியோ கோப்புக்களை பகிரும் தளமான Instagram அண்மையில் 300 மில்லியன் பயனர்களைக் கொண்டிருப்பதாக தகவல் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது மில்லியன் கணக்கான போலியான கணக்குகளை (Fake Account) நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இதன் காரணமாக பிரபல்யமானவர்கள் உட்பட பல Instagram பயனர்கள் அதிகளவான பின்தொடர்பவர்களை (Followers) இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் Justin Bieber 3.5 மில்லியன் வரையானவர்களையும், Kim Kardashian 1.3 மில்லியன் வரையானவர்களையும் மற்றும் Beyonce 830,000 வரையானவர்களையும் இழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## LOLLIPOP அப்டேட் விரைவில் வெளியீடு

கூகுள் நிறுவனம் அண்மையில் Android 5 Lollipop இயங்குதள பதிப்பினை அறிமுகம் செய்திருந்தது.

இந்த இயங்குதளப் பதிப்பிற்கான அப்டேட்டான Android 5.1 Lollipop இனை 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பதிப்பில் நீக்கப்பட்டுள்ள Silent வசதி இந்தப்புதிய பதிப்பில் மீண்டும் அறிமுகம் செய்யப்படவுள்ளதுடன், பிரதான நினைவக முகாமைத்துவம் மேம்படுத்தப்படவுள்ளது.

இவை தவிர வயர்லெஸ் இணைப்பில் காணப்பட்டுள்ள தவறுகள் நீக்கப்பட்டுள்ளன, மின்கல முகாமைத்துவம் மேம்படுத்தப்பட்டுள்ளது. ஒலி அமைப்பில் காணப்பட்ட தவறுகள் நீக்கப்பட்டுள்ளன.



## செல்வந்தர்களுக்கான கைபேசி அறிமுகம்



பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி வெவ்வேறு நிறுவனங்கள் ஏட்டிக்கு போட்டியாக ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்து வருகின்றன.

இவற்றின் வரிசையில் சுமார் 6000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஸ்மார்ட் கைபேசி ஒன்றும் இடம்பிடித்துள்ளது. ஆடம்பரமானதும், விலையுயர்ந்ததுமான லம்போகினி கார் வடிவமைப்பு நிறுவனத்தை நிர்வகிப்பவரான Ferruccio Lamborghini என்பவரது மகனால் நடத்தப்படும் நிறுவனம் ஒன்றே இந்தக் கைபேசியை தயாரித்துள்ளது.

88 Tauri எனும் இந்தக் கைபேசியானது 5 அங்குல அளவுடைய Gorilla Glass தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 2.3GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Qualcomm Snapdragon 801 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவற்றுடன் 20 மெகா பிக்சல்களை உடைய பிரதான கமெரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.


### வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் உள்ள வைத்திய நிலையத்திற்கு பின்வரும் பணிக்கு தகுதியுடையோர் தேவை.

* அம்புலன்ஸ் சாரதி:
  (வாகனம் ஓட்டுவதில் மிகவும் அனுபவம் உடையவர், 40 வயதுக்கு மேல்)
* Accounts Cleark (கணக்காளர்) (முன் அனுபவம், கணினி அறிவு தேவை)
* வரவேற்பாளர் - வைத்திய சாலை (முன் அனுபவம் தேவை)

நேர்முகத் தேர்வு: 08.01.2015 நண்பகல் 12 மணிக்கு
11.01.2015 காலை 8.30 மணிக்கு

இடம்: சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்நிலையம் முன்பாக)

TP:021 222 6069

(55596) (12.3.7)

### வேலைவாய்ப்பு

3வருடங்களுக்கு மேற்பட்ட வெளிநாட்டு அனுபவம் மிக்க வெல்டிங் மற்றும் ரிங்கரிங் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

(55597) (12.3.7)

ROYAL MARK (Pvt)Ltd,
Auto Masters, No.123,
Kandy Road. Jaffna.
021 221 1133/077 393 1393

### யாழ்ப்பாணத்தில் 14.03.2015 ல் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

*"IELTS Registration Centre for British Council"*

IELTS
The world speaks IELTS

* Strategies and techniques are taught to gain a higher score
* All 4 skills are paid equal attention
* Special attention to weak students
* 60 hours of learning in 8 weeks
* Affordable charges

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்.
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

Courses Conducted by University Lecturers

வகுப்புக்கள் 10.01.2015 இல் ஆரம்பம்

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Weeks | 10Weeks |
| Time | 8.00 -11.00 | 7.30-10.00, 5.00 - 7.00 |

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887

CMK

### இதோ வெளிவந்துவிட்டது!

100/- பெறுமதியான மாத சஞ்சிகையை ரூபா 75ற்கு வாங்கி பல்லாயிரம் ரூபா பெறுமதியான அறிவியல் விடயங்களைப் பெற்றுக்கொள்ள ஓர் அரியவாய்ப்பு

இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் ஒரு பரிணாம புரட்சி

25/- இலாபத்தில் இவ்வாரம் வெளிவந்த 'ஒளிஅரசி' சஞ்சிகையை வாங்கி கீழ்வரும் உடல், உளம், மனம், அறிவு, கல்வி, பொதுவிடயங்களை அழகாக, அளவாக, ஆனந்தமாக நுகரலாம்.

பக்கங்களும் உள்ளடக்கங்களும்

05 - சிறப்புக்கட்டுரை - பெண்களும் பண்டிகைகளும்
06 - சிறப்பு கவிதை - என்பாதை, அகலிகை
07 - சிரிக்கலாம் வாங்க - புதிய ஜோக்ஸ்
08, 09 - இல்லறம் நல்லறமாக - ரொமான்ஸ் இரகசியம் 13
10, 11 - குழந்தை வளர்ச்சியில் பின்பற்றவேண்டியவைகள்
12, 13, 14 - நட்சத்திர இல்லத்தரசி - பல்கலைக்கழக பீடாதிபதி எம். ஐ. எஸ். சபீனா வழங்கும் அனுபவப் பகிர்வுகள்
15 - வரலாற்றில் பெண்மணி
மோனிகா செலஸ் காட்டும் வாழ்க்கைப் பாடம்
16, 17, 18 - உறவுகள் சுகமானது - நெடுந்தொடர்
19 - அறிவியல் - இயற்கை அதிசயத்திற்கு ஆபத்து?
20 - குறுக்கெழுத்துப் போட்டி இல. 14
22, 23 - தொழில் வழிகாட்டி - O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட கட்டுரை
24, 25 - தன்னம்பிக்கை - யார் வெற்றி பெறுவார்கள்?
26 - அழகுக் குறிப்பு - அலுவலகத்திற்கு ஏற்ற ஆடை
27 - இயக்குநர் சிகரம் - கே. பாலசந்தர்
28, 29 - குறுங்கதை - சின்ன வீடு
30, 31 - இலக்கியதேன் - வெட்கத்தைவிட்டுவிடு
32, 33 - திகில் தொடர் - இருட்டில் வைத்தகுறி
34, 35 - உலக உலா
எப்போலாவுக்கு எதிராக கியூபா மருத்துவர்களின் போர்
36 - விளையாட்டு அறிவுப் போட்டி
38, 39 - சுயதொழில் - சிப்பிக்குள் பூக்கும் வருமானம்
40, 41 - நீங்கள் நலமா?
பெண்களுக்கான மருத்துவ ஆலோசனை
42 - சிறப்புக் கவிதை
அம்மா, விடிவு கிடைக்குமா, என்றும் மழலை
43 - சமூகசேவை - கருணை உள்ளம் ஒரு பார்வை
44, 45 - சிறுகதை - பிரச்சினை
46 - அழகுக்குறிப்பு - பெண்களும் மூக்குத்தியும்
47 - கண்டதும் கேட்டதும் - நாகரிக மனிதர்கள்
48, 49 - கட்டுரை - மாமியார், மருமகள் உறவு
50, 51 - விந்தை உலக விடயங்கள்
52, 53 - ஜனவரி மாதம் உங்களுக்கு எப்படி?
54, 55 - அம்முவின் கேள்வி பதில்
56 - 'பிசாசு' சினிமா விமர்சனம்




57 - நட்சத்திர ஜோக்ஸ்
துப்பாக்கியுடன் நடந்த திருமணம்
59 - பொது அறிவு - உங்களுக்கு தெரியுமா?
60, 61 - கடல் கொள்ளையர்கள்
வரலாற்றுத் தொடர்
62 - டுவிட்டரில் கிடைத்த முத்துக்கள்
63 - தையல்கலைப் பயிற்சி - பாடசாலை சீருடை
64 - ஆன்மிகம்
வித்தைக்காரனும் வியாபாரியும்
65 - இம்மாத மங்கை - சமூகத் தலைவி
66 - சுவைக்க சமைப்பது எப்படி?
67 - உண்மைச் சம்பவம்
சிந்திக்க வேண்டிய திருமணம்
68 - வாசகர் உள்ளங்கள்
70 - புராணக்கதை
மழலைகள் அறிய வேண்டியவை
72, 73 - தரம் 5, 4 பல்திறன் அறிவுப் போட்டி - 05
74 - மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி

பல சிறப்புக்களை தன்னகத்தே உள்ளடக்கிய 'ஒளிஅரசி' சஞ்சிகையை மாதம் ஒன்று வாங்கி எங்கள் வீட்டில் வைப்பதால் எங்கள் குடும்பம் கௌரவம் பெறுகின்றது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்...

இப்படிக்கு : 2014 ஆம் ஆண்டுக்குரிய நட்சத்திர இல்லத்தரசிகள்.

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு:
0718 628379 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு:
078 8864730 / 0787 273035

# உலகச் செய்திகள்



## ஒடிசாவில் 5 மாவோயிஸ்ட்டுக்கள் சுட்டுக்கொலை

சென்னை, ஜன. 7

ஒடிசா மாநிலத்தில் 5 மாவோயிஸ்ட்டுக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். ஒடிசா மாநிலம் மல்கான்கிரி மாவட்டத்தில் மாவோயிஸ்ட்டுக்கள் பதுங்கியிருப்பதாக சிறப்பு அதிரடிப் படைக்கு தகவல் கிடைத்திருந்தது.

இதனையடுத்து, சி.ஆர்.பி.எப். வீரர்களும், கோப்ரா தளபதிகளும், எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்போது, 5 மாவோயிஸ்ட்டுக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். தொடர்ந்து அந்தப் பகுதியில் மாவோயிஸ்ட்டுக்களை இராணுவம் தேடி வருகிறது. (ஒ–ரி)

## தீவிரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை பாகிஸ்தானைப் பாராட்டுகிறது அமெ.

### இந்தியா அதிருப்தி, அதிர்ச்சி

புதுடில்லி, ஜன.7

பாகிஸ்தான் பாடசாலையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசு பல வழிகளிலும் தீவிரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இந்த நிலையில் அமெரிக்க அரசு தீவிரவாதத்தை தடுப்பதற்காகப் பாகிஸ்தானுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது. அத்துடன் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு மக்கள் நல திட்டங்களுக்காக நிதி உதவியும் செய்ய விருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த வருடம் பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்கவிருப்பதாகஅமெரிக்க நாடாளுமன்றம் அதிபர் ஒபாமாவுக்கு தனது குறிப்பை வழங்கியுள்ளது. விரைவில் இந்த நிதி வழங்கப்படும் என்றுபாகிஸ்தானிலுள்ள அமெரிக்க தூதர் ரிச்சர்ட் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா திடீரென நற்சான்றிதழ்கொடுத்தது இந்தியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் தெரிவிக்கையில்;

அமெரிக்காவிலுள்ளவரிசெலுத்துவோரின் பணத்தை எவருக்கு கொடுப்பது என முடிவு செய்வது அமெரிக்க அரசின் தனிப்பட்ட முடிவாகும்.

ஆனால் அந்த நிதியுதவியின் மூலம் பாகிஸ்தான் அரசு தீவிரவாதிகளை சிறைக்கு அனுப்புவதில் உறுதியான நடவடிக்கை எடுப்பதாகவோ, போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஆதரவாக செயற்படுவதாகவோ, லஷ்கர் இதொய்பா, அல்குவைதா, ஹெய்ஷ் இ முகமது போன்ற தீவிரவாத குழுக்கள் பாகிஸ்தானில் தளம் அமைத்திருப்பதை தடுத்துவிட்டதாகவோ இந்தியா நம்பவில்லை எனத் தெரிவித்துள்ளார். அதேவேளை, பஞ்சாபி, உருது பேசும் சில சக்திகள் ஆப்கானிஸ்தானில் தீவிரவாத குழுக்களுடன் இணைந்து செயற்படுவது அதிகரித்துள்ளது. இது ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் இந்திய தூதரக அதிகாரிகள் உட்பட சர்வதேச சமுதாயத்துக்கு எச்சரிக்கை விடுப்பதாக இருக்கும் எனத் தெரியவந்துள்ளது. (ஒ–ரி)



## சோமாலியாவில் குண்டுவெடிப்பு 4 பேர் சாவு

மொகதிஷு, ஜன.7

சோமாலியாவின் தலைநகர் மொகதிஷுவில் அரசுபடைகளை குறி வைத்து தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர். அதில் அப்பாவி பொதுமக்கள் 4 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். அந்தத் தாக்குதலுக்கு அல்சபாப் என்ற அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது. மேலும், அமெரிக்கப் படைகளைக் குறிவைத்து இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. சோமாலியாவில் அல்குவைதா அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்பொன்று குண்டுவெடிப்பு உட்பட பல தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகிறது. தீவிரவாதிகளை குறி வைத்து இராணுவம் தொடர்ந்து தாக்குதல் மேற்கொண்டு வருகிறது. அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகளும் செயற்பட்டு வருகின்றன. தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திடமிட்டுள்ளதாக இரகசியத்தகவலொன்று கிடைத்ததைத் தொடர்ந்து இராணுவ வாகனத்தில் இருந்த குண்டு அகற்றப்பட்டதாகவும், ஆனால், மனித வெடிகுண்டுப்படை தீவிரவாதி பொதுமக்கள் பயன்படுத்திய காரில் குண்டுவெடிப்பை மேற்கொண்டதால் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும் சோமாலிய நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. (ஒ–ரி)

## தேனியில் நியூட்ரினோ ஆய்வகம்; மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புதுடில்லி, ஜன. 7

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் இந்திய ரூபா.1,500 கோடி மதிப்பில் நியூட்ரினோ ஆய்வகம் அமைக்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. அணுவைவிட மிகச் சிறிய, கண்ணுக்குப் புலப்படாத நியூட்ரினோ துகளை ஆராய்வதற்கான இந்த மையம் மூலம், பிரபஞ்சம் உருவான ரகசியத்தை அறிய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நியூட்ரினோ என்பது பிரபஞ்சத்தின் அடிப்படைத்துகள்களில் ஒன்று. அது பூமிக்கு அடியிலும், சூரியனுக்கு உள்ளேயும் தடையின்றி பாயக்கூடியது. இதனால், பூமிக்கு அடியில் உள்ள வளங்கள் மற்றும் சூரியனின் மையப் பகுதி பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

தற்போது அமைக்கப்படும் ஆய்வகத்தில் பிற பொருள்களில் இருந்து நியூட்ரினோக்கள் பிரித்து எடுத்து சேகரிக்கப்படும். இதன் மூலம் நியூட்ரினோக்களின் தன்மை பற்றி மேலும் விரிவாக படிக்க முடியும்.

இதனால், நியூட்ரினோ ஆய்வகம் அமைக்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதலை எதிர்நோக்கி இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



பணி ஓய்வுக்குப் பிறகு அமைதியான முறையில் முதுமையை கழிக்க வெளிநாட்டவர்களுக்கான சிறந்த நாடுகளின் பட்டியலை சர்வதேசஓய்வுக்கால குறியீட்டு அமைப்பு வெளியிட்டுள்ளது. உலக நாடுகளின் காலநிலை, உடல்நலம், அன்றாட செலவுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டுக்கான பட்டியலில் 25 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இதில் பிரான்ஸ் 17ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஈக்குவேடார், மெக்ஸிக்கோ மற்றும் பனாமா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் உள்ளன.

## நியூஸிலாந்தில் நிலநடுக்கம்

சென்னை, ஜன. 7

நியூஸிலாந்து நாட்டின் தெற்கு தீவில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.4ஆக பதிவாகியுள்ளது என்றும் ஒரு மணி நேரத்தில் 13 முறை நிலநடுக்கம் உணரப்பட்டதாகவும் ஜியோனெட் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2,011ஆம் ஆண்டுக்கு பின் ஏற்பட்ட 2ஆவது சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)

## ஜம்மு – காஷ்மீர் எல்லையில் தாக்குதல் கிராம மக்கள் 10 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

வொஷிங்டன், ஜன 7

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் இந்திய– பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் தொடர் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் எல்லையோர மக்கள் பலரும் பீதியில் உறைந்துள்ளனர். பலர் தங்களது கிராமங்களில் இருந்து வெளியேறி வருகின்றனர். சுமார் 500கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பத்தாயிரம் பேர் இதுவரை வெளியேறி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



சம்பா, கத்துவா போன்ற கிராமப் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் பலர் இடம்பெயர்ந்து வருகின்றனர். பல இடங்களில் பாகிஸ்தான் படையினர் நடத்திய தாக்குதல் காரணமாக குண்டு மற்றும் தோட்டாக்கள் சிதறிக் கிடப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதற்கிடையில் இந்தத் தாக்குதலைப்பயன்படுத்தி பலர் இந்திய எல்லைக்குள் ஊடுருவ திட்டமிட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ–ரி)

## ஒபாமாவின் பாதுகாப்புக்காக அமெரிக்க படை இந்தியா வருகை

புதுடில்லி, ஜன.7

இந்திய குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள வருமாறு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்ததையடுத்து இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெறக் கூடும் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இதனையடுத்து ஒபாமா இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் போது அதிகபட்ச பாதுகாப்பு கொடுக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு பாதுகாப்பு கொடுக்க அமெரிக்காவில் இருந்து தனிப்படையொன்று இந்தியாவுக்கு வருகிறது. அமெரிக்க தனிப்படை வீரர்கள் வருகிற 12ஆம் திகதி டில்லி வரவுள்ளனர். மேலும் குண்டுதுளைக்காத கார்கள் மற்றும் நவீன கருவிகளைக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## டுபாயில் செயற்கைத் தீவுகளை உருவாக்கத் திட்டம்

பிரமாண்டத்துக்கும், நம்மை அதிசயிக்க வைக்கும் ஆச்சரியங்களுக்கும் புகழ்பெற்ற நகரம் டுபாய் ஆகும். அதிலும் கடந்த சில வருடங்களில் மட்டும் கட்டடக்கலையில் இதன் அதிவேக வளர்ச்சி அனைவரையும் பிரமிக்கவே வைத்திருக்கிறது. செயற்கையாக உருவாக்கப்பட்ட பாம் தீவுகள், உலகத்தின்



மிக உயரமான கட்டடம் என டுபாயின் வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. அதே போன்று எதிர்காலத்தில் டுபாயில் உலகிலுள்ள சில முக்கியமான நகரங்களை போன்று 'ஹார்ட் ஒப் யுரோப்' என்ற செயற்கை தீவுகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# உலகச் செய்திகள்



## ஐசில்தீவில் கவிழ்ந்து மூழ்கும் பிரிட்டன் சரக்குக் கப்பல்

லண்டன், ஜன. 7

பிரிட்டன் சௌதம்டன் துறைமுகத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த ஹோ ஒசாகா என்ற சரக்குக் கப்பல் ஐசில் தீவுக்கு அருகே பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென தரை தட்டி நின்றது. சிறிது நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு புறமாகச் சரிந்து கவிழ்ந்து விபத்துக்குள் ளானது.

அந்த கப்பலில் 1200க்கும் மேற்பட்ட கார்கள், 80 கட்டுமான பாகங்கள், ஜே.சி.பி. இயந்திரங்கள், கிரேன்கள், கற்களை உடைக்கும் கிரஷ்ர் இயந்திரங்கள் உட்பட 4600 தொன்களுக்கும் அதிகமான இயந்திரங்கள் ஏற்றப்பட்டிருந்தன.

52 டிகிரி வரை சரிந்து நிற்கும் அந்தக்கப்பலைநிமிர்த்தி ஒழுங்குபடுத்த பல நாள்களாகும் எனக் கப்பல் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கப்பல் கவிழ்ந்ததற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்றுவருகிறது.கப்பலில்இருந்த 25 பணியாளர்களையும் கடற்படை வீரர்கள் பத்திரமாக மீட்டுள்ளனர். கப்பலில் 500 தொன்கள் நிறையுள்ள எரிபொருளும் இருந்ததாக கப்டன் ஜோன் நோபல் தெரிவித்துள்ளார். மேலும் தரைதட்டியதால் கப்பல் கடுமையாக சேதமடைந்திருக்க அதிகவாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ–ரி)

## நைஜீரியாவில் பன்னாட்டுப் படைத்தளம் போகோ ஹராம் தீவிரவாதிகள் வசம்

மெய்டூரி, ஜன.7


வடகிழக்கு நைஜீரியாவில் பன்னாட்டுப் படைத்தளத்தின் கட்டுப்பாட்டை இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவான போகோ ஹராம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.



பாகா எனும் இடத்தில் இருக்கும் இராணுவப்படை முகாம் மீது மோட்டார்சைக்கிள் மற்றும் சிறிய ரக வாகனங்களில் வந்த நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள், தாக்குதலை மேற்கொண்டு அங்கிருந்த ஏராளமான இராணுவ வீரர்கள் மற்றும் பொது மக்களைக் கொன்று குவித்துள்ளனர். சாட் ஏரியின் கரையில் அமைந்துள்ள, தாக்குதலுக்குள்ளான நைஜீரியப் படைத் தளம், போர்னோ மாகாணத் தலைநகரான மைதுகுரியி லிருந்து இருநூறு கிலோமீற்றர் தொலைவிலுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஒ–ரி)

## குண்டுத் தாக்குதல்; யேமனில் 6பேர் சாவு

சனா, ஜன. 7



யேமனில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் அலுவலகத்தில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 31 பேர் காயமடைந்துள்ளனர்.

அந்த நாட்டின் தாமர் மாகாணத்தில் நடைபெற்ற அந்தத் தாக்குதலுக்கு, அல்குவைதா அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. யேமன் அதிபர் அபெத்ரப்போ மன்சூர் ஹாதிக்கு எதிராக ஹூதி பழங்குடியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். தலை நகர் சனா உட்பட பல பகுதிகளை அவர்கள் கைப்பற்றியுள்ளனர். அந்தநிலையில் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவும், அரச படையினருக்கு எதிராகவும் அல்குவைதா அமைப்பு பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)



## ஐ.எஸ்ஸை உளவுபார்த்த உளவாளிகள் படுகொலை

ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பைஉளவு பார்த்த நபர்களை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றனர். இந்தநிலையில் ஈராக் அரசின் பொலிஸ் அதிகாரிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். பிரிவில் இணைந்துமுஸ்லிம்களாக மதம் மாறி, தீவிரவாதிகளின் முகாம்களிலே, தங்கியிருந்துதீவிரவாதிகளை உளவுபார்த்து ஈராக் அரசாங்கத்துக்குத் தகவல் தெரிவித்து வந்துள்ளனர். அந்த விடயத்தைக் கண்டறிந்த அறிந்த ஐ.எஸ்.ஐ.எஸ், தீவிரவாதிகள் தங்களை உளவுபார்த்து வந்த 8 உளவாளிகளையும் கொல்லத் திட்டமிட்டனர். அதனையடுத்து தீவிரவாதிகள் அந்த உளவாளிகள் 8 பேரையும் பணயக்கைதிகளைப் போல வைத்திருந்து காவி நிற உடை அணிவித்து மொசூல் நகரில் வைத்து சாவுத் தண்டனையை நிறைவேற்றியுள்ளனர். மேலும் தாங்கள் அந்த 8 உளவாளிகளையும் சுட்டுக்கொன்ற சம்பவத்தின் ஒளிப் படங்களைஉளவாளிகள்இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சீனாவில் இஸ்லாமியவாத தீவிரவாதம்

சீனாவில் இஸ்லாமிய தீவிரவாத அச்சுறுத்தல் அதிகரிப்பதாக சீன அரசு கூறி வருகிறது. 2014 இல் முஸ்லிம்களை பெரும்பான்மையினராகக் கொண்ட வீய்கர் இனத்தவர்களது மேற்கு மாகாணமான, சின்சியாங்கில் உருவான அமைதியீனத்தை கட்டுப்படுத்த அரசு முயற்சித்தது. அங்கு பொலிஸ் பாதுகாப்பு இரட்டிப்பாக்கப்பட்டு, பல வீய்கர் இனத்தவர் கைது செய்யப்பட்டும் அங்கு வன்செயல்கள் ஓயவில்லை. அந்த சிறுபான்மை இன மக்களின் மசூதிகள் நிர்மூலம் செய்யப்பட்டதால் அவர்கள் பழிவாங்க முற்படுவதாகவும் கூறப்படுகின்றது. (ஒ–ரி)



## ஜேர்மனியை அச்சுறுத்தும் புதையுண்ட 3,000 குண்டுகள்

பேர்லின், ஜன. 7

இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனியில் புதைக்கப்பட்ட 3,000 வெடிகுண்டுகள் வெடிக்காத நிலையில் பெர்லின் நகரில் நிலத்தின் கீழே புதையுண்டு இருக்கலாம் என்று நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



பெர்லினில் கடந்த 2014ஆம் ஆண்டில், 54 தொன் நிறை கொண்ட குண்டுகள் மற்றும் போர்க் கருவிகள் கண்டெடுக்கப்பட்டு பாதுகாப்பாக அப்புறப் படுத்தப்பட்டுள்ளன.

பொலிஸார் இது குறித்து தெரிவிக்கையில், இரண்டாம்உலகப் போரின் இறுதியில் கைவிடப்பட்ட அந்த வெடிகுண்டுகள் எவராலாவது நகர்த்தப்படும்போது தான் வெடித்து ஆபத்தை விளைவிப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், 1945ஆம் ஆண்டு முதல் இதுவரை 1.8 மில்லியன் தொன் நிறையுள்ள குண்டுகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் பெர்லினில்கட்டட வேலை நடைபெறும் இடங்களில் வெடிக்காத வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்படுவதாகவும் ஆண்டுக்கு 1000 முறையாவது வெடிகுண்டு அகற்றும் படையினர் குண்டுகளை அகற்ற அழைக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமின்றி அதிகாரிகளால் நகரின் எந்தெந்தப் பகுதிகளில் வெடிகுண்டுகள் புதைந்து கிடக்கின்றன என்பதைத் தம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)

## லிபியத் துறைமுகத்தில் நின்ற கிரேக்கக் கப்பல் மீது தாக்குதல்

லிபியாவின் கிழக்கு நகரான டெர்ணாவிலுள்ள துறைமுகத்தில் தரித்து நின்ற கிரேக்க எண்ணெய்க் கப்பலின் மீது, தமது வான்படைகள் தாக்குதலை நடத்தியுள்ளதாக லிபியா தெரிவித்துள்ளது.



கப்பல் தீவிரவாதிகளை ஏற்றி வந்தது என லிபியா கூறுவதை கிரேக்கம் மறுக்கிறது

அந்தத் தாக்குதலில், அந்தக் கப்பலின் இரண்டு ஊழியர்கள் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்துள்ளதாகவும் கிரேக்கக் கடலோரக் காவற் படை கூறியுள்ளது.

அந்தத் துறைமுகத்தில் தங்களது அனுமதி இல்லாமல், அந்தக் கப்பலை நிறுத்த வேண்டாம் என அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது என லிபிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கப்பல் இஸ்லாமியத் தீவிரவாதிகளை லிபியாவுக்கு கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அந்தத்தாக்குதல் எந்தவிதமான முகாந்திரமும் இன்றி, கோழைத்தனமாக நடத்தப்பட்ட தாக்குதல் என்று கூறியுள்ள கிரேக்க அரசு அதனை வன்மையாகக் கண்டித்தும் உள்ளது. இது தொடர்பில் விசாரணை ஒன்றையும் கிரேக்கம் கோரியுள்ளது.

அந்தக்கப்பல்லிபியாவின்இரண்டு துறைமுகங்களுக்கு இடையே தொடர்ச்சியாக சேவைகளை நடத்திக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)

# பல்சுவை

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 140 | 100 | 120 | 100 | – | 60 | 80 |
| கத்தரி | 180 | 140 | 200 | 200 | 180 | 200 | 240 | 120 |
| கரட் | 180 | 200 | 240 | 180 | 180 | 240 | 220 | 180 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 60 | 40 | 50 | 50 | 20 |
| பயிற்றை | 250 | 280 | 200 | 240 | 220 | 180 | 220 | 250 |
| பாகல் | 400 | 350 | 350 | 320 | 300 | 200 | 220 | 200 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 60 | 80 | 80 | 45 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 110 | 100 | 120 | 100 | 90 | 70 |
| சி.வெங்காயம் | 50 | 120 | 60 | 80 | 70 | 120 | 120 | 60 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 | 40 | 50 | 60 | 25 |
| தக்காளி | 200 | 150 | 200 | 180 | 140 | 180 | 160 | 100 |
| வாழைக்காய் | 70 | 80 | 70 | 100 | 80 | 120 | 100 | 70 |
| கீரை | 25 | 60 | 50 | 20 | 50 | 40 | 20 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 50 | – | 30 | 30 | 20 | 50 | 15 |
| மிளகாய் | 500 | 450 | 500 | 450 | 400 | 500 | 700 | 350 |
| புடோல் | 180 | 160 | 140 | 120 | 160 | 140 | 140 | 120 |
| கோவா | 120 | 120 | 160 | 140 | 120 | 160 | 120 | 120 |
| வெண்டி | 200 | 140 | 160 | 160 | 180 | 120 | 140 | 100 |
| போஞ்சி | 300 | – | 200 | 240 | 360 | 160 | 400 | 300 |
| லீக்ஸ் | 320 | 280 | 240 | 300 | 320 | 400 | 290 | 250 |
| தேங்காய் | 40 | 40 | 60 | 50 | 30 | 40 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 80 | 60 | 80 | 60 |
| தேசிக்காய் | 50 | 80 | 50 | 80 | 60 | 50 | 80 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 350 | – | 240 | 280 | 350 | 350 |
| இராசவள்ளி | 120 | 120 | 110 | 160 | 160 | 140 | 160 | 120 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 800 | 600 | 400 |
| நண்டு | 200 | 350 | 300 | 300 | 250 | 320 |
| கணவாய் | 400 | 500 | 400 | 400 | 500 | – |
| பாரை | 450 | 450 | 400 | 500 | 500 | 340 |
| சுறா | 450 | 550 | 600 | 600 | 800 | 370 |
| சீலா | 300 | 400 | 300 | 400 | 400 | – |
| விளை | 450 | 400 | 300 | 500 | 500 | – |
| முரல் | 250 | 350 | 350 | 350 | 300 | 340 |
| கும்பிளா | 350 | 250 | 350 | 450 | 400 | – |
| கிழாக்கன் | 200 | 500 | 400 | 500 | – | – |
| ஓரா | 350 | 300 | 400 | 400 | – | – |
| திரளி | 200 | 250 | 240 | 200 | 200 | – |
| நகரை | 180 | 300 | 160 | 200 | 200 | – |
| சூடை | 120 | 150 | 160 | 160 | 125 | 40 |
| ஒட்டி | 150 | 200 | 250 | 200 | – | – |
| திருக்கை | 100 | 300 | 240 | 180 | 250 | 130 |
| பாலை | 400 | 100 | 350 | 400 | – | – |
| வாளை | 180 | 250 | 200 | 300 | – | 150 |
| கொய் | 80 | 150 | 60 | 100 | 100 | – |
| மதனம் | 100 | 250 | 150 | 250 | – | 110 |
| நெத்தலி | – | 500 | – | 500 | 300 | – |

## நாளை 2015

**மார்கழி-24 வியாழக்கிழமை**

**08.01.2015**

திதி: திருதியை பி.ப.03.43 மணி வரை

நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.04.25 மணிவரை

சுபநேரம்: 08.02-09.32 மணி வரை

இராகுகாலம்: 02.02-03.32 மணி வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இலட்சியத்துக்காக வாழுங்கள்

எவை இல்லாமல் வாழமுடியாதோ அவை நமக்கு கிடைத்தே தீர வேண்டும். அவை கிடைக்கவில்லை யென்றால் வாழ்க்கை நடக்காது.நீங்கள் யோகியாக வேண்டுமானால் சுதந்திரமாக இருக்கவேண்டும். கவலையற்ற சூழ்நிலையை அமைத்துக் கொள்ள வேண்டும். வசதியாக வாழ்ந்து கொண்டு ஒருவன் ஆன்மிகத்தை நாடிச்செல்ல முடியாது. முதலில் இறைவனைத் தேடுங்கள். ஏனையவை எல்லாம் உங்களைத் தேடி வரும். ஒரு இலட்சியத்துக்காக வாழுங்கள். அது ஒன்றே உங்கள் நோக்கமா கட்டும். அந்த இலட்சியம் எல்லாவற்றிலும் உயர்ந்த தாகட்டும். உறுதியுள்ளதாகட்டும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 1 | | | 4 | | | 2 |
| | 5 | | | | 6 | 4 | | |
| | 2 | 6 | | 1 | | | 3 | 5 |
| 9 | | 7 | 3 | 6 | | | | |
| | | | 5 | | 2 | | | |
| | | | | 7 | 9 | 6 | | 3 |
| 8 | 7 | | | 9 | | 2 | 4 | |
| | | 2 | 8 | | | | 1 | |
| 1 | | | 6 | | | 3 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையயான எண்கலை ஒழுங் குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களை யும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரை யிலும் நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண் டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 3 | 5 | 4 | 2 | 8 | 9 | 1 |
| 5 | 2 | 1 | 6 | 9 | 8 | 3 | 7 | 4 |
| 8 | 9 | 4 | 7 | 1 | 3 | 5 | 6 | 2 |
| 1 | 6 | 7 | 3 | 5 | 9 | 4 | 2 | 8 |
| 4 | 5 | 8 | 2 | 7 | 1 | 6 | 3 | 9 |
| 9 | 3 | 2 | 8 | 6 | 4 | 1 | 5 | 7 |
| 2 | 8 | 9 | 4 | 3 | 5 | 7 | 1 | 6 |
| 3 | 1 | 6 | 9 | 8 | 7 | 2 | 4 | 5 |
| 7 | 4 | 5 | 1 | 2 | 6 | 9 | 8 | 3 |

## இளநரை வரக் காரணம்



வெள்ளை முடி வந்துவிட்டால் உடனே வயதாகி விட்டதென்ற எண்ணம் அனைவரது மனதிலும் ஏற்படுகிறது. ஆனால் உண்மையில் முடியின் வேர்ப் பகுதியில் உள்ள மெலனின் என்னும் நிறமிப்பொருள், முடியின் நீளத்துக்கு உற்பத்தியாக முடியாததால் முடியின் நிறம் மாறு படுகிறது. மேலும் கூந்தல் வெள்ளை யாவதற்குப் பல காரணங்கள் இருக் கின்றன. இத்தகைய காரணங்கள் தெரியாததால், இளமையிலேயே வெள்ளை முடியால் பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. ஆகவே அத்தகைய கார ணங்கள் என்ன வென்று சற்றுத் தெரிந்து கொண்டால் வெள்ளை முடியைத் தடுக்கலாம். பெற்றோரின் மரபணுக்கள் காரணமாகவும், உட லில் விற்றமின்கள் குறைவாக இருந் தாலும், முக்கிய மாக விற்றமின் பி12 குறைவாக இருந்தால் முடிகள் வெள்ளை நிறமடையும்.

தைரொய்ட் சுரப்பிகள் சரியாக இயங்காமல் அதாவது அளவுக்கு அதிகமாக அல்லது குறைவாக சுரந் தாலும், வெள்ளை முடிகள் வந்து விடும். பெரும்பாலோ னோருக்கு வெள்ளை மற்றும் கிரே முடிகள் அதிக மன அழுத்தம், ஆரோக்கிய மற்ற வாழ்க்கை முறை அல்லது பர பரப்பான வாழ்க்கை முறை போன்ற காரணங்களால் வருகின்றன. இதனை அனைத்து அழகியல் நிபு ணர்களும் ஒப்புக் கொள்கின்றனர். ஆகவே இவை அனைத்தையும் விட்டு ஆரோக் கியமான, மன அழுத்தமில்லாத வாழ்க்கை முறை யைக் கடைக் கொண்டு வந்தால் வெள்ளை முடிகள் வருவதைத் தடுக்கலாம். இதேவேளை புகைப் பிடிப்பவர்க ளுக்கு ஏற்படும் வெள்ளை முடிகள், சாதாரணமாக இருப்பவர்களுக்கு வரும் வெள்ளை முடியை விட நான்கு மடங்கு அதிகமாக ஏற்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே புகை பிடிக்காமல் இருந்தால், வெள்ளை முடிகள் வராமல் தள்ளிப் போடலாம் என்றும் கூறுகின்றனர்.

மருத்துவம்

## செவிடாக்கும் மாத்திரைகள்



உடல்வலி மற்றும் தலைவலிக்காக பெண்கள் பயன்படுத்தும் மாத்திரைகளால் காதுகள் செவிடாகும் வாய்ப்பு உள்ளதாக சமீபத்திய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. ப்ரூபின், பரசிற்றமோல் போன்ற மாத்திரைகள் பெண்கள் அதிகம் உபயோகிக்கும் மாத்திரைகள். இந்த மாத்திரைகள் உபயோகிப்பதனால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வலி நிவாரண மாத்திரை சாப்பிட்ட 13 சதவிகித பெண்களின் காது கேட்கும் திறன் குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது. அவற்றில் ஒரு ரக மாத்திரையை வாரத்துக்கு 2 தடவைகள் உபயோகித்தால் 24 சதவிகிதம் செவிட்டு தன்மையும், மற்றொரு ரக மாத்திரையை வாரத்துக்கு 6 தடவைகள் பயன்படுத்தினால் 21 சதவிகிதம் செவிட்டு தன்மையும் ஏற்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் அஸ்பிரின் மாத்திரையை உபயோகிக்கும் பெண்களுக்கு இதுபோன்ற பாதிப்பு ஏற்படுவதில்லை என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஆண்களுக்கு இவற்றால் செவிட்டுத்தன்மை ஏற்படுமா என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# சோதிடம்



## சிம்மம்

இந்த ஆண்டு இதுவரை இருந்து வந்த கடினமான சூழ்நிலையிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் கரைபுரளும். புத்திரர்களாலும், பேரப்பிள்ளைகளாலும் மகிழ்ச்சி ஏற்படும். உயர்ந்த பதவிகள் உங்களைத் தேடி வரும். சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். செய்தொழிலை விரிவுபடுத்த பெரிய அளவில் கடன் வாங்குவீர்கள். அதேநேரம் அனைத்து விவரங்களையும் நன்றாகப் புரிந்து கொண்ட பிறகே ஆவணங்களில் கையொப்பமிடவும்.

மன அழுத்தம் குறைந்து தெளிவாகச் சிந்திக்கும் காலம் இது என்பதால் உங்களுடைய உள்ளம் உங்களைத் தெளிவான வழிகளிலேயே இட்டுச் செல்வதற்கு வாய்ப்புகள் அதிகம். வம்பு, வழக்குகளிலிருந்தும் விடுபட்டு புதிய மனிதனாக ஆவீர்கள். ஆன்மிகத்தில் புதிய விடயங்களை அறிந்து கொள்வீர்கள்.

பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். நண்பர்களிடம் மன உறுதியுடன் தெளிவாகப் பேசுவீர்கள். உங்களைப்பற்றிப் புறம்பேசும் நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து நாசூக்காக விலகி விடுவீர்கள். குறுக்கு வழியில் எந்தச் செயலையும் செய்ய நினைக்க வேண்டாம்.

நீங்கள் சார்ந்திருக்கும் துறையில் நன்றாகவே முன்னேறுவீர்கள். சிலருக்கு நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் சூழ்ச்சிகளில் சிக்கும் சூழல் ஏற்படலாம். ஆனாலும் முருகக் கடவுளின் அருளால் காப்பாற்றப்பட்டு விடுவீர்கள். வெளியூர் அல்லது வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். இக் காலகட்டத்தில், உங்களை கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க வைப்பார் சனி பகவான்.

நீண்ட நாளைய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். நிலையான புகழும், பெருமையும் அடைவீர்கள். இதனால் நீங்கள் புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள். உங்கள் மன வலிமை அதிகரிக்கும். உங்கள் செயல்களில் சுறுசுறுப்புக்கூடும். உங்களை நீங்களே அறிந்து கொண்டு சமுதாயத்துக்குப் பயன்படுவீர்கள். தெய்வ வழிபாட்டுக்குத் தக்க பயன் கிடைக்கும். உங்களது காரியங்களைப் பொறுமையாகவும், அமைதியாகவும் செய்து முடிப்பீர்கள். சமுதாயத்தில் முக்கியஸ்தர் என்கிற அந்தஸ்தைப் பெறுவீர்கள்.



# உங்களுக்கு எப்படி?

### உத்தியோகத்தர்கள்

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கத் தொடங்கும். உழைப்புக்கேற்ற சம்பளத்தைப் பெறுவதில் தடை ஏற்படாது. சக ஊழியர்கள் உங்களிடம் பொறாமை கொள்ளலாம். எடுத்த காரியங்களில், சில சந்தர்ப்பங்களில் கால தாமதம் ஏற்படலாம்; உடலில் சோர்வும், மனதில் தெளிவின்மையும்கூட உண்டாகலாம். உங்களுக்கு உறுதுணையாக இருந்து வந்த மேலதிகாரிகளின் ஆதரவு சற்று குறையக் கூடும். உங்களின் கடமைகளைப் பதற்றப்படாமலும், நிதானத்துடனும் செய்தால் எந்தச் சரிவுக்கும் ஆளாகாமல் தப்பிக்கலாம்.

### வியாபாரிகள்

வியாபாரிகள் நல்ல பொருளாதார வளத்தைக் காண்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் மறையும். கூட்டாளிகளிடம் ஒற்றுமை உண்டாகும். வங்கிக் கடன்கள் சிக்கலின்றிக் கிடைக்கும். உங்கள் முயற்சியில் சுறுசுறுப்பு உண்டாகும். வர்த்தக வட்டாரத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை உயரும். புதிய முதலீடுகளில் ஈடுபட்டு லாபத்தைக் காண்பீர்கள்.

### கலைஞர்கள்

கலைத்துறையினர் சுமாரான வாய்ப்புகளையே பெறுவீர்கள். ரசிகர்களின் ஆதரவும் எதிர்பார்க்கும் அளவுக்கு இருக்காது. புகழைத் தக்க வைத்துக்கொள்ள கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உழைப்பை அதிகப்படுத்திக்கொண்டு, கர்வத்தை விட்டொழித்துத் திறந்த மனதுடன் இயங்கினால் புகழ் பெறலாம். சக கலைஞர்களுடன் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் சில முடிவுக்கு வரும்.

### பெண்கள்

பெண்கள் குழந்தைகளால் சந்தோசம் அடைவீர்கள். கணவருடனான ஒற்றுமை நன்றாகவே இருக்கும். உங்களது புத்திசாலித்தனத்தை குடும்பத்தினர் புகழ்வார்கள். புத்தாடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். விருந்து மற்றும் விழாக்களில் கலந்து கொண்டு உற்சாகம் அடைவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். பொருளாதாரம் சிறப்பாக இருப்பதால் சேமிப்பு விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள்.




இந்தஎண்கொண்டவருக்கு ராகுவுடன் சந்திரன் சேர்ந்த ஆதிக்கப் பலன் உண்டாகும். இவர் சுமாரான உயரம் கொண்டவராகவும், உடல் பருமனாகவும் காணப்படுவார். அனைவரையும் கவரும் வகையில் பார்க்க அழகாக காட்சியளிப்பார். முடி நீண்டதாகவும், புருவம் அடர்ந்தும் இருக்கும்.

இவர் பொதுவாக அச்சமுள்ளவராகவும், அமைதியாகவும் இருப்பார். சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டவராகவும், தீய செயல்களை விரும்பாதவராகவும் நடப்பார். சிறு வயதிலேயே மகா கெட்டிக்காரராக இருப்பார். இவர் மனதில் பொறாமை குணம் எப்போதும் இருக்கும் ஆனால் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள மாட்டார். பிறர் மீது இரக்கம் காட்டும் குணம் கொண்டவர்.

இவருக்கு பெற்றோர் அன்பும் ஆதரவும் பூரணமாக கிடைக்காது. தெய்வ பக்தி, கலைப்பற்று இருக்கும்.

நல்ல குடும்பத்தில் சகோதர

## கூட்டெண் பலன்கள் 4-2

சகோதரிகளுடன் பிறந்த இவர் யாரிடமும் நெருங்கிப் பழக மாட்டார். குடும்ப வாழ்வில் சண்டை, சச்சரவுகள் இருக்கும். காலப்போக்கில் ஒரு நிலையான செல்வாக்குப் பெறுவர். பிற்கால வாழ்வில் நிம்மதி பிறக்கும். பெரியோர்களை வீட்டில் ஆதரித்துக்கூடி வாழ்வர்.

மிகவும் கற்றவரான இவர் எல்லாச் சங்கதிகளையும் அறிந்திருப்பார். சாத்திரம், சம்பிரதாயம் என உலக நடைமுறை அறிந்து வாஸ்து சாத்திரப்படி வீடுகட்டி விற்பவராக இருப்பார்.

வாக்குத் திறமையால் சட்டத்தரணி ஆவார். மருத்துவத்துறை, ரசாயன பேராசிரியர் போன்ற துறைகளில் பணிபுரிவார். வீட்டுத் தரகர், சினிமாத் தயாரிப்பாளர், அச்சக அதிபதியாகவும் இருக்கலாம்.

கபம் சம்பந்தமான நோயும், மூச்சுத் தொடர்பான நோயும், நீர்க் கோர்த்துக் கொள்ளுதல் போன்ற நோய்களும் ஏற்படும்.

ராகுவுடன் குரு இணைந்த ஆதிக்கப்பலன் கொண்டவராக இருப்பார். நல்ல உயரமாகவும் உருண்டை வடிவமுகம், நெற்றி சற்று மேடாகவும் இருப்பார். தலைமுடி சுருண்டு அடர்த்தியாக இருக்கும்.

இந்த எண்காரர் விளையாட்டும் கேலியுமாக பேசி மற்றவர்களைக் கவரும் குணம் கொண்டவர். சிறு வயதிலிருந்து உடல் சற்று பருத்து காணப்படும். கல்வி இவருக்கு நன்றாக வரும். பெரிய வர்களை மதித்து நடப்பவர்.

வாழ்க்கையில் திடீர் நிகழ்ச்சிகளால் திருப்பங்கள் உண்டாகும். ஆத்திரம் வந்தாலும் அடக்கிக் கொள்ளுவார். கையெழுத்து கிறுக்கலாக இருக்கும். நல்ல குடும்ப வாழ்க்கை உண்டாகும். குடும்பப் பற்றும் பிள்ளைப் பாசமும் அதிகம் கொண்டவர்.

நன்கு உழைத்து முன்னேறுவார். மனமொத்த துணை அமைந்தாலும் மண வாழ்வில் தடையேற்படும். திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்வோரும் இருக்கின்றனர். அமைதியான

## கூட்டெண் பலன்கள் 4-3

குடும்ப வாழ்க்கையே அமையும்.

ஆன்மிக நாட்டமுள்ள இவர் கோயில்களில் வேலை செய்வார். முதலில் வேலை எதுவும் சரிவர அமையாது. இவரது பிற்கால வாழ்வில் சிறந்த தொழில் அமையும். இவருக்கு ஆசிரியர், விளையாட்டு வீரர், அரசியல், சினிமா சம்பந்தப்பட்ட வேலைகள் அமையும்.

வயிற்று வலி, குடல் புற்று, தோல் நோய்கள், சிறுநீரகக் கேடும் ஏற்படும்.

# செய்திகள்

## சங்கப் பணியாளர் அங்கத்தவர் பிள்ளைகளுக்கு உபகரணங்கள்

தென்மராட்சி, ஜன.7

பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் தென்மராட்சி கொத்தணியினர் கொடிகாமம் சாவகச்சேரி சங்கங்களின்பணியாளர், அங்கத்தவர்கள் ஆகியோரின் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குகற்றல்உபகரணங்களைவழங்கிவருகின்றனர்.

சங்கங்களின் அலுவலகங்களில் பணிபுரிவோருக்கு சம அளவு தொகையிலான கற்றல் உபகரணங்களும் அங்கத்தவர்களுக்கு தொழில் பங்களிப்பு வீதத்துக்கு ஏற்பவும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்படுவதாக சாவகச்சேரி பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.பூபாலசிங்கம் தெரிவித்தார். (வ-9)


### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கலைவாணி பிருதிவிராஜ்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி சிவலட்சுமி
சபாரத்தினம்

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், (55394) 12.3.7)
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.



### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.12.2014 திங்கட்கிழமை
இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
பத்மநாதன்
பத்மராஜன் (பத்தி)

வீட்டுக்கிருத்திய கிரியைகள் 07.01.2015 புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மதியபோசனம் தொண்டமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மாசந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன், அதனைத் தொடர்ந்து செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச் சந்நிதி,
தொண்டமானாறு (55584) c15.3.7)
குடும்பத்தினர்.



### நினைவலைகள்

முதலாம் ஆண்டு



திருமதி பாக்கியலட்சுமி
முத்துலிங்கம்
தோற்றம் 22.03.1940
மறைவு 19.12.2013

இரண்டாம் ஆண்டு



அமரர் விஸ்வலிங்கம்
முத்துலிங்கம்
தோற்றம் 08.03.1934
மறைவு 31.10.2012

பூவின் புதுப்பொலிவுடன் பொலிவை புன்னகையுடன் பூரிப்பை பாவின் பண்புடன் பைந்தமிழ் நாமிழந்து பரிதவித்து தவிக்கின்றோம். நீங்கள் எங்கள் உயிர் மூச்சே! சோகம் குறையாததோடு வித்தகத்தோடு உங்கள் நினைவுகள் தொடரும் இந்த மண்ணுலகமும் விண்ணுலகமும் உள்ளவரை இறைவன் திருவடியில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

பிறவுண்றோட்,
சிவகுருநாதர் லேன்,
யாழ்ப்பாணம். (52258)(453.7)

உங்கள் துயரில் தத்தளிக்கும்
சகோதரர்கள், பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.


## தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்ததினத்தன்று பெரியோர்கள் ஐவருக்கு சிவத்தமிழ் விருது

யாழ்ப்பாணம், ஜன.7

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 90 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் 5 பெரியார்கள் சிவத்தமிழ் விருது 2015 வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். அவர்களது பெயர், விவரங்கள் வருமாறு:-

தேசமானி, சரவணமுத்து ஆறுமுகநாதன் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பிரபல தொழிலதிபர், கடந்த நாற்பது ஆண்டுகளாக துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் பங்காற்றி வருபவர் தற்போது தேவஸ்தான உபதலைவராக பணியாற்றிவரும் இவர் பல விருதுகளைப் பெற்றவர். அரிமாக் கழகத்தின் உறுப்பினராக விளங்கும் இவர்,தனது சொந்தச் செலவில் தெல்லிப்பழையில் தொழிற்பயிற்சிக் கூடத்தை நிறுவிய பெருமைக்குரியவர்.

வைத்தியகலாநிதி கனகசுந்தரம் மயிலேறும்பெருமாள் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர், 1974முதல் இலங்கையின் பல பாகங்களிலும் சிறந்த மருத்துவப் பணியாற்றி ஓய்வுபெற்றவர், வன்னியிலும் வல்வெட்டித்துறையிலும் போர்ச் சூழலில் அரிய பணியாற்றியவர். மாவட்ட வைத்திய அதிகாரியாக விளங்கிய இவர் அரிய சேவையாற்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

சைவப்புலவர், பண்டிதர், தம்பிப்பிள்ளை இராசரத்தினம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்டவர். சிறந்த ஆசிரியராக விளங்கியவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றி வருபவர். திருமுறை முற்றோதல், புராணப்படிப்பில் பங்குபற்றி வரும் இவர், இலக்கண இலக்கியத்தில் இன்று ஐயங்களைத் தீர்த்து வைக்கும் மரபுவழி அறிஞராக விளங்கிவருகிறார்.

நாதஸ்வர வித்துவான், கலாபூஷணம், சுந்தரமூர்த்தி இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடந்த அறுபது ஆண்டுகளாக எம்மண்ணில் கலைப்பணியாற்றி வருபவர். பலவிருதுகளைப் பெற்ற முதுபெருங்கலைஞர்.

ஜெபமணி யேசுசகாயம் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர், 37ஆண்டுகள் இலங்கையின் பலபாகங்களிலும் ஆசிரியப் பணியாற்றியவர், ஓய்வுபெற்றபின்பும் ஏழை மாணவர்களின் கல்விக்காக இன்றுவரை உழைத்து வருபவர், ஏழைகளின் பங்காளராக பணியாற்றிவரும், இவர் சேவையால் பலர் பயன் பெற்றுள்ளனர். (வ)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

### செங்குந்தா இந்துக் கல்லூரி

**கலைப் பிரிவு**

ஜெ.சிந்துஜா– 2ஏபி, மு.சியானி – 2ஏபி, தே.நிதர்சன் – ஏ2பி, பா.போதநிலாஞ்சலி – ஏ2பி, தே.சுவேந்தா– ஏபிசி, சி.தாரகா– ஏபிசி, இ.அனுசியா–2பிசி, பி.சூரியதாஸ்– 2பிசி, ஜீ.சஜீவன்– 2பிஎஸ், ஜெ.வளர்மதி – பிசிஎஸ், அ.ஜீவாகரன்– 2சிஎஸ், உ.தனுஜா– பிசிஎஸ், உ.அசோதன் – 3சி, கு.சுகன்ஜா– பி2சி, அ.தயாழினி – பிசிஎஸ், செ.சர்மினி– 2சிஎஸ், ப.யாழினி – பிசிஎஸ்.

**கணிதப் பிரிவு**

ஜெ. நோபேட் – 2சிஎஸ்.

### புனித அந்தோனியார் கல்லூரி

**கலைப் பிரிவு**

செ.மதுரா – 3ஏ, ஸ்.அலஸ்ரிகா– 2ஏபி, ச.நிவேன் – 2ஏஎஸ், க.கிரிசாந் – ஏ2பி, அ.காணிக்கைராஜ்– ஏ2சி, வி.துளசிகரன் – 3பி, பே.நிஜாந் – 3பி, பா.அனற்ராஜன் – 3பி.

**வர்த்தகப் பிரிவு**

ஜெ. சசிராஜன் – 2பிசி, அ.டனிஸ்ரன் – பிசிஎஸ்.

### வயாவிளான் மத்திய கல்லூரி

**கணிதப் பிரிவு**

த.கலைநீதன் –2பிசி, பா.சிந்துஜன் – பி2சி.

**விஞ்ஞானப் பிரிவு**

ம.துவாகரன் –பி2எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

யோ.நிதுசியா – 2ஏபி, நி.ஆர்த்திகன் – ஏ2பி, அ.ஸ்ரீலக்ஸன்– ஏ2பி, சி.நிகாரிகா– ஏ2பி, த.ஜயந்திகா –ஏ2பி, வ.தனுசன் – ஏபிசி, செ.வித்தகி – ஏபிசி, வ.மதுசா– 3பி, சி.கிருத்திகன் – பி2சி, ல.பஜிந்தன் – பி2சி, த.ராஜ்குமார் – ஏ2எஸ்.

**கலைப்பிரிவு**

உ.துதியா – 3ஏ, த.கோமதி – 2ஏபி, ரி.சர்விகா –2ஏசி, சி.லக்ஸனா –2ஏசி, பு.நவனீதா – 2ஏசி, பா.ஜென்விகா – 2ஏ, ம.கரன் – ஏபிசி, அ.சர்மியா – ஏபிசி, ம.சஞ்தியா – ஏபிசி, ம.கஜீபா– ஏபிசி, சி.பிருந்தா– ஏபிசி, ம.பிரதீப் – ஏ2பி, அ.லிசா– ஏ2சி, ம.சுபோதினி– ஏ2பி, செ.தக்சானி– ஏ2பி, சி.ஸ்ரீலக்ஸனா–ஏ2பி, க.கேஸ்தா –ஏ2சி, ம.டென்சியா– ஏசிஎஸ்.

## வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் நீர்வேலி தெற்கு இந்து மயானம்



யாழ்ப்பாணம்,ஜன.7

நீர்வேலி தெற்கு இந்து மயானம் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதால் சடலங்களை தகனம் செய்யச் செல்லும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையால் குறித்த மயானம் மற்றும் மயானத்தை அண்டிய தரவைப்பிரதேசம் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகின்றது.

அதனைவிட பருத்தித்துறை வீதியில் நீர்வேலி, வில்லு மதவடி வீதியில் இருந்து மயானத்துக்கு செல்லும் பிரதான வீதியி லும் வெள்ளம் நிறைந்துள்ளது.

இதன்காரணமாக மயானத்துக்கு சடலங்களை கொண்டு சென்று தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மயானத்தில் காணப்படும் மேட்டு நிலம் ஒன்றில் வைத்தே மக்கள் சடலங்களை தகனம் செய்து வருகின்றனர்.

குறித்த மயானம் மற்றும் மயானத்துக்குச் செல்லும் வில்லு மதவடி வீதி போன்றவற்றைப் புனரமைத்து தருமாறு மக்கள் பல தடவைகள் வலி. கிழக்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும் இதுவரைக்கும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-17)

## மைத்திரிக்கு

சிறிசேனவின் கூட்டங்களிலேயே அதிக வன்முறைகள் இடம்பெற்றுள்ளன என்று கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' இது தொடர்பில் அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நேற்றுமுற்பகல் நடத்தியது. அதில் கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளரான மனாஸ் மக்கீன்,

"வடக்கில் நேற்றுமுன்தினம் வரை தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 19 முறைப்பாடுகள் பதிவாகியிருந்தன. நேற்றிரவு அது 21 ஆக உயர்ந்துள்ளது. கோப்பாயில் கட்சி ஒன்றின் உறுப்பினர் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வடமாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்கு நள்ளிரவு கல்லெறி நடத்தியதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது"– என்று குறிப்பிட்டார்.

"நாடளாவிய ரீதியில் பதிவான முறைப்பாடுகளின்படி தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 157 முறைப்பாடுகளும் தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் ஆயிரத்து 201 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. அவற்றில் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம், அரச நியமனம், இடமாற்றம் என 438 முறைப்பாடுகளும், சட்டவிரோத தேர்தல் பரப்புரை தொடர்பில் 763 முறைப்பாடுகளும், கட்டடங்கள், தேர்தல் கட்சி அலுவலகங்களைச் சேதப்படுத்துவது தொடர்பில் 50 முறைப்பாடுகளும், தாக்குதல், அச்சுறுத்தல்கள் தொடர்பில் 157 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. நாடளாவிய ரீதியில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுடன் ஒப்பிடும்போது வடக்கில் முறைப்பாடுகள் ஒரு வீதமாகப் பதிவாகியுள்ளது– என்றும் தெரிவித்தார்.

"தேர்தல் அறிவிக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட அல்லது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அல்லது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் சென்று கூட்டங்களை நடத்துவதற்கான மேடை அமைப்பு, ஒழுங்குகளை மேற்கொண்டபோதுதான் அதிக வன்முறைகள் நடைபெற்றதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தவிர வடக்கில் அரச சொத்துத் துஷ்பிரயோகம், அரச ஊழியர்களை தேர்தல் பரப்புரைக்காக அழைத்தமை தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் நடைபெறுகின்றபோது அதற்கு அரச உத்தியோகத்தர்கள் கட்டாயத்தின் பேரில் அழைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கட்டாயமாக தமது கூட்டங்களுக்கு வருகை தர வேண்டும். வராவிட்டால் சமுர்த்திக் கொடுப்பனவுகள் எதிர்காலத்தில் வழங்கப்படாது என்று அச்சுறுத்தி பலரையும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை தொடர்பில் பல பிரதேசங்களிலிருந்தும் அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன."– என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவை தவிர பத்திரிகைகளில் நேற்றுமுன்தினமும் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களில் மக்களைத் திசை திருப்பும் வகையிலும் மக்களைத்தவறானபாதைக்கு இழுத்துச் செல்லும் வகையில், மக்கள் தவறான புரிந்து கொள்ளலுக்காக விளம்பரங்கள் வெளியாகியிருந்தன– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

முறைப்பாடுகள் அதிகளவாக அதாவது 202 முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன. அநுராதபுரத்தில் 119 முறைப்பாடுகளும், கம்பஹாவில் 100 முறைப்பாடுகளும், களுத்துறையில் 72 முறைப்பாடுகளும், கண்டியில் 68 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ந–4)

## வாக்காளர்

மறுத்து விட்டார். பின்னர் அதே விவரங்களை கடற்படையினரும் கோரியுள்ளனர்.

கடற்படையினருக்கும் அந்த விவரங்களை வழங்குவதற்கு உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மறுத்ததைத் தொடர்ந்து, புலனாய்வுப் பிரிவினர் குறித்த விவரங்களைக் கோரியுள்ளனர். எனினும் அப்போதும். உதவித் தேர்தல்கள் ஆணையாளர் விவரங்களை வழங்கவில்லை.

இது தொடர்பில் தேர்தல்களை கண்காணிக்கும் அமைப்புக்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ந–5)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கார் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள Nissan FB-15 Car உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு 0776510188

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி
veta Spoken English
Veta Fluency Diploma
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
யாழ்ப்பாணம் Mon,Wed,Fri: 9.30 a.m. Mon,Wed,Fri: 1.30 p.m.
நெல்லியடி Tue, Thu 10.00 a.m. Sat, Sun 3.30 p.m.
சாவகச் சேரி Mon, Wed, Fri 10.30 a.m.
சுன்னாகம் Tue, Thu 8.30 a.m.

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள் Duration: 3 Months
பல்கலைக்கழகம் செல்லவுள்ளோருக்கான விசேட பிரிவுகள்
DMI COMPUTER EDUCATION
UK விசாவுக்கான ஆங்கிலப்பரீட்சை
2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
IELTS
•Unique Test Tips
•Latest course Materials
IELTS பரீட்சை பதிவுகள் இலவசமாக எந்த கிளையிலும் மேற்கொள்ள முடியும்
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M. M. V. வீதி, Tel.:021-226 2470
சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970

காலை எழுந்திருங்கள்

வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லுங்கள்

நீங்கள் வாக்களியுங்கள்


உங்கள் குடும்ப அங்கத்தவரை வாக்களிக்கச் செய்யுங்கள்

உங்கள் அயலவரை வாக்களிக்கச் செய்யுங்கள்

உங்கள் உறவினர்களை வாக்களிக்கச் செய்யுங்கள்

வாக்களிப்பது உங்கள் ஒவ்வொருவரது கடமையாகும்

வளமான அழகான தேசத்தை கட்டியெழுப்புவோம்.



**வாக்களிப்பது ஒவ்வொருவரது சுதந்திரமாகும்.**

VOTE

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## கடை வாடகைக்கு

சாவகச்சேரி நகரத்தின் மத்தியில், டிறிபேக் கல்லூரிக்கு அருகே டச்சு வீதியில் அமைந்துள்ள 50 அடி நீளமும், 15அடி அகலமும் கொண்ட முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட கடை வாடகைக்குண்டு. (நிறுவனங்களுக்கும் உகந்தது).

(51865)(12.3.7) உடன் தொடர்புகளுக்கு: 077 248 7170


# திறந்த பல்கலையின் கல்விச் செயற்பாடுகள் பிற்போடல்

யாழ்ப்பாணம், ஜன.7

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தால் இன்று தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நடத்தத் திட்ட மிட்டப்பட்டிருந்த அனைத்து கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய பாடசாலைகளின் பரீட்சைகள் மற்றும் செய்முறை வகுப்புக்கள் உட்பட அனைத்து கல்விசார் நடவடிக்கை களும் தேர்தல் காரணமாக பிற்போடப் பட்டுள்ளன. அவற்றுக்கான புதிய மீளமைக்கப்பட்ட திகதிகள் மற்றும் விவரங்கள் என்பவற்றை யாழ்.பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள் ளார்.

(வ)


## MOTHER ELDERS CARE CENTRE

முதியோர்கள், நோயாளிகள், படுக்கை நோயாளிகள், பிறப்பிலேயே இயலாதவர்கள், மனநோயாளிகள் அனைவருக்கும் 24 மணித்தியாலமும் டாக்டரின் கண்காணிப்பின் கீழ் யாழ் நகர், வெள்ளவத்தை, தெகிவளை ஆகிய இடங்களில் சகல சொகுசு வசதிகளுடன் சேவை வழங்கப்படும்.

உடன் தொடர்பு:077 712 6859/60

(51916)(12.3.7) Mail address: srishankaru@yahoo.com



## செல்லா சினிமா யாழ்ப்பாணம்



தைப்பொங்கல் வெளியீடு AC / DTS

40அடி அகலம் LED திரையில்

14 முதல்

முற்றிலும் குளிரூட்டப்பட்டது

டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில் சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்

காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30

ஐ


# 'கலைஞர் மஞ்சரி' நூல் வெளியீடு

வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டு பேரவையால் பிரதேசத்தில் வசிக்கும் கலைஞர்களின் வரலாறு மற்றும் அவர்களின் பணி விவரங்களை உள்ளடக்கியதாக 'கலைஞர் மஞ்சரி' நூல் வெளியிடப்பட்டுள்ளது. பிரதேசத்தில் வசிக்கும் 64 கலைஞர்களின் விவரங்களை கொண்ட 'கலைஞர் மஞ்சரி' வெளியீடு கடந்த 29 ஆம் திகதி பிரதேச செயலர் தலைமையில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெற்றது.

(வ–11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொன்னையா சுந்தரலிங்கம்

Best Wishes!

அலுவலக நடைமுறைகள் மற்றும் மக்கள் சேவை ஆகிய விடயங்களையொட்டி கிராம சேவையாளர்களுக்கு இடையில் புதுக்குடியிருப்பு பிரதேசம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் இரண்டு மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட உடையார்கட்டு வடக்கு கிராம சேவையாளர் பொன்னையா சுந்தரலிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு. அவரின் சேவை மேன்மேலும் வளம்பெற அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
உடையார்கட்டு வடக்கு,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.



## சிவாச்சார்யார் (குருக்கள்) தேவை

நோர்வே (Norway) பேர்கனில் (Bergen) அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆலயக் குருக்களாக பணிபுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்

- சிவாச்சார்யாபிஷேகம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- சிவாகமமுறைப்படி சகல அபிஷேகங்கள், பூசைகள் மற்றும் அனைத்து கிரியைகள் தனித்து செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சாத்துப்படி மற்றும் மடப்பள்ளி வேலைகள் தனித்து செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் திருமணமானவராகவும் இருத்தல் வேண்டும்.
- சமய சொற்பொழிவாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பதவிக்காலம் ஆகக்கூடியது இரண்டு வருடங்கள்.
- தகுந்த வேதனமும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
- ஆலயம் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடைபெறுகின்றது.

தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள், மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்து கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 20.01.2015 இற்கு முதல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

Bergen Hindu Sabha
Storetveit veien 5
5067 Bergen
NORWAY
மேலதிக தொடர்புகட்கு: +47 46769063
E-mail: styret@bergenhindusabha.info, www.bergenhindusabha.info (3,7,8)(55515)



## விற்பனைக்கு

இணுவிலில் பூ மணவறை விற்பனைக்குண்டு.

(55534)(45) தொடர்பு: 077 578 5987

## தையல் தெரிந்தவர்கள் தேவை

மானிப்பாய், சுதுமலை, இணுவில், தாவடி போன்ற பகுதியிலுள்ள தையல் தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை. யுக்கி மெசின் தைக்கத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

(55583)(12.3.7) தொடர்பு: 077 729 4794/075 488 8448

## தேவை

கணினியில் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக்கூடிய பெண்பிள்ளைகள் தேவை. (Photoshop, Page maker) முன் அனுபவம், ஆங்கில அறிவு அவசியம்.

பிரகாந்த் போட்டோ கொப்பி சென்ரர்
55, பலாலி வீதி, திருநெல்வேலி.
தொடர்பு: 077 313 8881, 077 593 5294
(55546)(4.3)





# கேஸ்ட்ரைட்டீஸ்

(இரைப்பை சவ்வு அழற்சி)

நோயை பூரணமாக குணப்படுத்துவதற்காக.

ராஜபுர ஆயுர்வேத சாலையில் இருந்து தயாரிக்கப்பட்ட தேசிய ஒளடதம்

பஞ்சபல அமிர்த பானம்






- வயிறு மற்றும் நெஞ்சு பகுதிகளில் எரிவு.
- கடுமையான தலை வலி.
- இரைப்பையில் புண்.
- பித்த வெடிப்பு
- வயிறு உப்புதல்.
- உடல் மெலிதல்.

தற்போது அனைத்து ஆயுர்வேத கடைகளிலும், பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

food city

தொடர்புகளுக்கு: 0773131070

ஆயுர்வேத யோக சங்கராஹ சபையில் அனுமதி பெற்ற ஒளடதமாகும்

(C/18561)(10.7.3)

# தொடர்ச்சிகள்

## கண்காணிப்பு

அவர்கள் நேரில் கண்காணிக்கவுள்ளனர். தேர்தலின் போது வடக்கில் அசம்பாவிதங்கள் நடைபெறக்கூடும் என்று எதிர்கட்சிகள் அச்சம் வெளியிட்டுள்ளன. இந்த நிலையில் தேர்தல் திணைக் களத்தின் கண்காணிப்பாளர்களும், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் கண்காணிப்பாளர்களும் வடக்கில் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

அவர்கள் வடக்கின் 5 மாவட்டங் களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களைச் (மாவட்ட அரச அதிபர்) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அத்துடன் உதவித் தேர்தல்கள் ஆணையாளருடனும் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர்.

சர்வதேசக் கண்காணிப்பாளர்களும் நேற்று முதல் தமது நடவடிக்கை களை ஆரம்பித்துள்ளனர். உள்ளூர் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து வடக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டு வருகின்றனர். அத்துடன் தொடர்ச்சியாக வடக்கு மாகாணம் முழுவதும் இவர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை வரையில் கடமைகளில் ஈடுபட்டிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–5)

## தேர்தல்

அது தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடவடிக்கைகளை குழப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனையடுத்து வடக்கின் தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு தென்பகுதியிலிருந்து பெருமளவு உத்தியோகத்தர்கள் வந்துள்ளனர்.

மக்கள் அச்சமின்றி – சுதந்திரமாக வாக்களிப்பதை உறுதிப்படுத்து வதற்காக அவர்கள் விஷேட ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள னர். இன்று காலை முதல் நாளை வாக்களிப்பு முடியும் வரையில் அவர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர்.

தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் இந்த அதிகாரிகள் இன்று இரவு வேளையில், வாகனங்களில் வடபகுதி முழுவதும் தொடர் ரோந்து மேற்கொள்ளவர். இரவு வேளையில் வாகனச் சத்தங்களைக் கேட்டு பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந–5)

## வாக்கு

எடுத்துச் செல்லப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. வடக்கின் ஏனைய மாவட்டங்களில் மாவட்டச் செயலகங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்குரிய ஏற்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வாக்களிப்புப் பெட்டிகள், யாழ்.மாவட்டச் செயலகத்திலிருந்து, வாக்கு எண்ணும் நிலையமாகச் செயற்படவுள்ள யாழ்.மத்திய கல்லூரிக்கு நேற்றுக் காலை எடுத்து வரப்பட்டது.

இன்று காலை 7 மணிக்கு, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்க்ள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான விசேட கலந்துரையாடல் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. அதன்பின்னர், காலை 8 மணியளவில், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லவுள்ளனர். அதற்குரிய போக்குவரத்து ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கின் ஏனைய மாவட்டங்களில், மாவட்டச் செயலகங்களிலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்கு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லவுள்ளனர். (ந–5)

## மரண அறிவித்தல்கள்

### சுவாம்பிள்ளை பத்திநாதர்

(நிதுஷா மல்ரி சென்ரர் முன்னாள் உரிமையாளர்)



சில்லாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.60A, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை பத்திநாதர் நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை-அக்னேஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபமாலை- ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி அருளம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மேரி லூட்ஸ் (யஸ்மின்) மற்றும் கவிஸ்ரன் (அமெரிக்கா), மேரி இமெல்டா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி மேரி நிஷாந்தினி (அமெரிக்கா), அன்பனவன் ஆகியோரின் அன்பு மாமனும், அன்றியாவின் அன்புப் பேரனும், அல்பிறட் (பிரான்ஸ்), கென்றி (ஓய்வுநிலை உதவி பிரதேச முகாமையாளர்- மக்கள் வங்கி), யேசுதாசன் (முன்னாள் நிதுஷா மல்ரி சென்ரர் உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 60A, பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### பெரியதம்பி கணேசலிங்கம்



சோனெழு, கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கணேசலிங்கம் 04.01.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோனெழு,**
**கோப்பாய் மத்தி,**
077 384 4969 (55579) (45.3.7)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### சோமசுந்தரம் மார்க்கண்டு

(வேலணை கிழக்கு)



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் தரணிக்குளத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் மார்க்கண்டு நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம், சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுசிலாதேவியின் (மகேஸ்) அன்புக் கணவரும், யசோதா (கனடா), யதீசன் (பிரான்ஸ்), வனஜா (ஆசிரியை- வவுனியா தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), ராதிகா (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரன் (கனடா), மைதிலி (பிரான்ஸ்), ஞானேஸ்வரன் (நிர்வாக கிராம அலுவலர் செட்டிக்குளம்), நிமலநேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்றவர்களான பாக்கியலட்சுமி, மனோன்மணி, நாகரத்தினம், இராசையா, இராசம்மா, பூபதி, செல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சுப்பிரமணியம், பொன்னையா, இரா சேந்திரம், சிவனேஸ்வரி மற்றும் புனிதவதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சண்முக இரத்தினத் தின் சகலனும், துவாரகா, மதுரிகா, நிவேதா, ஆர்த்திகா, அபிநயன், யதுசன், விதுசன், நிதுசன், அஸ்விகன், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் ஈசங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சு. ஞானேஸ்வரன்**
(0772427880)
**மருமகன்**

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரிமளம் தம்பிராசா

கொல்லோலை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் தம்பிராசா 04.01.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயிலு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயிலு தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யோக்கியம், செல்லமுத்து, கந்தசாமி, பரமசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் இராஜேஸ்வரன், இராஜேஸ்வரி (கனடா), பாலேஸ்வரன், இரத்தினேஸ்வரி, கமலேஸ்வரி விக்னேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், தேவராணி, திருச்செல்வம் (கனடா), நாகேஸ்வரி, இராசையா, யூகநாதன், வசந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கீதா, கோபிராஜ், வேணுகா, ரேக்கா, வான்மதி, ஆதவன், தேன்மொழி, உமையாள், கிருஷ்ணஜோதி, காலஞ்சென்ற ஜீவகரன் மற்றும் விஜிதா, கோபிராகவன், மயூரன், டினேஸ், யோகானந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனுசன், பாணுஜா, பாவனா, அஷ்யா, வைசா, ஷாயுந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை நடைபெறவிருந்த இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்). இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.**
**இராஜேஸ்வரன்:** 0775124974
**கீதா:**905-209-1704 **(கனடா)**
**கோபிராஜ்:** 6479914624 **(கனடா)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### கந்தையா குருபரன்



(முன்னாள் வர்த்தகர் ஸ்ரீரங்கன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்-கொழும்பு-கைதடி)

கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குருபரன் நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரது பூதவுடல் நாளை (08.01.2015) வியாழக்கிழமை கைதடியிலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும், தகனக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
0044 7405001374,
077 6561673, 077 3127268

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

### திருமதி சிவலட்சுமி சபாரத்தினம்



தொல்புரம் வழக்கம்பரையைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிட மாகவும் கொண்ட சபாரத்தினம் சிவலட்சுமி நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா (மில்க்வைற் ஸ்தாபகர்) - சிவயோகம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சபாரத்தினம் (குட்டி அண்ணை) அவர்களின் அன்பு மனைவியும், கலைவாணி (ஆசிரியை - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் அன்புத்தாயும், பிருதிவிராஜ் (முகாமையாளர் - இலங்கை வங்கி - திருநெல்வேலி) அவர்களின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி, காலஞ்சென்ற தவகுலரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிஷோர்ராஜ் (கட்டார்), திரிலோசனன் - அபிராமி (வங்கி உத்தியோகத்தர் - பான் ஏசியா வங்கி - யாழ்ப்பாணம்), அபிசுயா (முதலாம் வருடம்-இராமநாதன் நுண்கலைப் பீடம்), ஹரிராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"ராஜபவனம்"**
**இல.46, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**த.பிருதிவிராஜ்**
**(மருமகன்)**
(55592) (45.3.7)

# செய்திகள்

## போர் முடிந்து 5 வருடமாகியும் தமிழர்களுக்குத் தீர்வு இல்லை

### சிந்தித்து வாக்களிக்கக் கோருகிறது யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

போர் நிறைவடைந்து 5 வருடங்களாகியும் இந்த அரசு இதுவரை எமக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தரவில்லை. போதாக்குறைக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று எமது பூர்வீக நிலங்களில் அத்துமீறிய குடியேற்றங்களையும் நில அபகரிப்பும் செய்து வருவதோடு பொருளாதார ரீதியாகவும் எம்மை நலிவடையச் செய்துள்ளது என்று தெரிவித்துள்ள யாழ்.பல்கலைக் கழகமாணவர் ஒன்றியம்,நாளை அனைவரும் தவறாது வாக்களிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:–

3 வருடகால உரிமைப் போராட்டத்தின் உச்சமாக முள்ளிவாய்க்காலில் எமது பல்லாயிரக்கணக்கான உறவுகள் காவு கொள்ளப்பட்டதோடு எஞ்சிய மக்கள் ஏதிலிகளாய் வறுமையில் சிக்கி அன்றாட வாழ்வுக்கு அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதனைத் தமக்குச் சாதகமாக்கி எமது மக்களையும் இளைஞர், யுவதிகளையும் பணம், வேலை வாய்ப்பு என்று ஆசை வார்த்தைகள் கூறித் தேர்தல் காலங்களில் அரசியல் ஆதாயம் தேட முற்படுவதை ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

எம் இனத்தின் அடையாளத்தையும் இருப்பையும் சிதைப்பதுடன் எமது பிரதேசத்தில் தேவையற்ற இராணுவக் கெடுபிடிகளையும் மேற்கொண்டு வருகிறது. தேர்தலில் வாக்களிப்பது என்பது ஒவ்வொருவரது ஜனநாயக உரிமையும் கடமையும் ஆகும். எனவே அனைவரும் நாளை வாக்களிக்க வேண்டும். வாக்களிக்காவிட்டால் எமது வாக்குகள் தவறான முறையில் பயன்படுத்தப்படலாம். எனவே தமிழ் மக்கள் அனைவரும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (த–4)

## தேர்தல் காரியாலயங்கள் இன்று முதல் மூடப்படும்

### கட் அவுட்டுக்களும் வைக்கமுடியாது

யாழ்ப்பாணம், ஜன. 7

சகல பகுதிகளிலும் அமைக்கப் பட்டுள்ள தேர்தல் காரியாலயங்கள் எவையும் இன்று முதல் இயங்க முடியாது என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று, கட் அவுட்டுக்கள் எவையும் காட்சிப்படுத்தி வைக்க முடியாது எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நாளை இடம்பெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. தேர்தல்கள் திணைக்களத்தின் அனுமதியுடன் கட்சிக் காரியாலயங்கள் மற்றும் வேட்பாளரின் கட் அவுட்டுக்கள் என்பன வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தேர்தல் காரியாலயத்தை வைத்திருப்பதற்கும், கட் அவுட்டுக்களைக் காட்சிப்படுத்தி வைத்திருப்பதற்குமான காலம், நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவுக்கு வந்துள்ளது. இதனையும் மீறி ஏதாவது தேர்தல் அலுவலகங்கள் இயங்குமாக இருந்தால் அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)




# யாருக்கு வெற்றி?

மூனாத்தான

## பெரும்பான்மையினர் ஆதரவு இருவருக்கும் தமிழர், முஸ்லிம்கள் ஆதரவு வேறு விதமாக

**2015ஆம் ஆண்டு புதிய நாடு காணும் ஜனாதிபதியை தெரிவு செய் யுமா? அல்லது ஜனாதிபதியான மஹிந் தவே பதவியில் நீடிப்பாரா? மக்களின் தீர்ப்பே இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருக்கும்.**





இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. நாட்டில் முன்னர் நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இது மிக வித்தியாசமான தேர்தலே. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதில் இருந்து, அரசியல் களத்தில் பல திகைக்க வைக்கும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கட்சி தாவல்களும் ஒருபுறம் சூடுபிடித்திருந்த நிலையில் தேர்தல் பரப்புரைகளில் வன்முறைகளும் முன்னெப் போதும் இல்லாதவாறு அதிகரித்துக் காணப்பட்டன.

தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக களமிறங்கியுள்ளார். எதிர்க்கட்சிகளின் சார்பில், மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் சுகாதார அமைச்சர் பதவி வகித்துக் கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேன வேட்பாளராகக் களமிறக்கப்பட்டார். அதையடுத்து அரசியல் களமும் தேர்தல் பரப்புரைகளும்சூடுபிடிக்கஆரம்பித்தன. கட்சித் தாவல்கள், வன்முறைகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், தேர்தல் கூட்டங்களை தடுத்தல், கல்லெறி வீச்சு எனப் பல்வேறு வன்முறைகளுக்கு மத்தியில் இரு தரப்பினரது பரப்புரைகளும் நடைபெற்று முடிந்திருக்கின்றன.

2005,2010ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களைவிட இம்முறை நடைபெறவுள்ள தேர்தல் பரப்புரைகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் அதிகமானதாகும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

மூன்றாவது தடவையாகப் போட்டியிடுகின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் பிரயத்தனங்களுக்கும் மத்தியில் தனது தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தார். அதற்காக சகல வளங்களையும் அதிகாரத்தையும் வேண்டியளவுக்குப் பிரயோகித்ததையும் அவதானிக்க முடிந்தது. எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தரப்பில், முறைகேடுகள் செய்தமை தொடர்பாக அதிகளவு முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவில்லை. ஆயினும் எதிரணியினர் மேற்கொண்ட தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு இடையூறுகளும், துப்பாக்கிச் சூடும், கல்லெறியும் நடத்தப்பட்டன.



புதிய நாடு காண்போம், நூறு நாள்களில் நிறைவேற்று அதிகாரமுறையை ஒழிப்பேன் என்ற விடயங்களை முன்னிலைப்படுத்தி எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பரப்புரைகளை மேற்கொண்டிருந்தார். அவருடன் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, ஹெல உறுமய கட்சியினர், மஹிந்த அரசின் முன்னாள் அமைச்சர்கள், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனப் பல தரப்பினரும் இணைந்து பரப்புரைகளை மேற்கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பரப்புரையில் போர் வெற்றி, அபிவிருத்திகள் போன்றவற்றை முன்னிலைப்படுத்தியிருந்தார். நாட்டின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களும், மஹிந்த சிந்தனையும் அவரது பரப்புரையின் பிரதான பேசுபொருளாகக் காணப்பட்டபோதும், சிங்கள மக்கள் மத்தியில் அவர், போரை வெற்றி கொண்டது குறித்தும், விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம், புலம்பெயர் தமிழர்கள் என்ற வழமையான பரப்புரை யுக்திகளை இம்முறையும் உபயோகிக்கத் தவறவில்லை.

தென்னிலங்கையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டங்களை அவதானிக்கையில் இரு பிரதான வேட்பாளர்களின் பரப்புரைகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். ஆயினும் பரப்புரைக்காக மஹிந்த ராஜபக்ஷதரப்பில்பயன்படுத்தப்பட்ட வளங்கள், அதிகாரங்கள் என்பவற்றுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். ஆயினும் கூடும் மக்கள் தொகையைக் கொண்டு தேர்தல் முடிவுகளைக் கணித்துவிட முடியாது என்பதே உண்மை.

தென்னிலங்கை மக்களின் எண்ணப்பாடு ஒருபுறமிருக்க, வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது தெரிவு யார் என்பதை முன்னரே தீர்மானித்து விட்டனர் என்றே கூறலாம். ஜனாதிபதியாக பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ 30 ஆண்டு காலமாக நிலவிய போரை முடித்ததாக கூறும் கருத்து சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவைக் அதிகரிக்கும் என்று கருதினாலும், அது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவருக்கு எதிரான மனஉணர்வையே ஏற்படுத்தும். அதைவிடவும் போர் முடிந்தது என்று கூறப்பட்டாலும், தமிழ் மக்கள் தற்போதும் தாம் அடக்குமுறைக்குள் இருப்பதான உணர்வுடனேயே இருக்கின்றனர்.

ஒரே இனம்; ஒரே நாடு, இந்த நாட்டின் சிறுபான்மையினம் என்று ஒன்று கிடையாது. தமிழர்களுக்கு பிரச்சினைகள் என்று ஒன்றுமில்லை, தமிழ மக்களுக்கு என்று தனியான பிரதேசமில்லை, புலிகள் கேட்டதை தமிழர்கள் கேட்கக் கூடாது, இராணுவத்தை வடக்கில் இருந்து அகற்றமுடியாது – என்று மஹிந்த தலைமையிலான அரசு கொண்டிருக்கும் நிலைப்பாட்டாலும், தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப்படாமை, காணாமற்போனோர் விடயம், தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டமை, இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தமது சொந்தக் காணிகளில் குடியமர்த்தப்படாமை என்பவற்றால் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களும், அளுத்கம சம்பவம், தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம், ஹலால் பிரச்சினை போன்ற சம்பவங்களால் முஸ்லிம் மக்களும் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிரான எண்ணப்பாட்டையே கொண்டிருக்கின்றனர். இவை இம்முறை தேர்தலில் தாக்கம் செலுத்தும் என்பதை உறுதியாகக் கூறமுடியும். வடக்கு,கிழக்கு தமிழ் பேசுகின்ற மக்களை பொறுத்தவரை பெரியதொரு மாற்றத்தை எதிர் பார்த்திருக்கின்றனர் என்று கருதலாம்.

அதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போரை வென்று கொடுத்தவர் என்ற எண்ணமும், விடுதலைப்புலிகளை அழித்து நாட்டைமீட்டவர் என்ற நிலைப்பாடும் காணப்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஷவுக்கான செல்வாக்கு சரிந்துள்ளபோதும், அவருக்கான பலம் முற்றாகக் குறைந்துவிட்டது என்று கூற முடியாது. எனவே தேர்தலில் கடும் போட்டிநிலவும்என்று எதிர்பார்க்கலாம். தென்னிலங்கை வாக்குகளில் இரு வேட்பாளர்களுக்கும்இடையேபெரும் வித்தியாசம் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு நிகழுமானால் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் வாக்குகளே அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றன. அவையே தேர்தல் முடிவுகளின் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றன.

வடக்கு, கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் மாற்றம் ஒன்றையே எதிர்பார்க்கின்றனர் என்ற நிலையில், எண்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குப் பதிவு நடக்கலாம் என்று கூறப்படுகின்றது. 2015ஆம் ஆண்டு புதிய நாடு காணும் ஜனாதிபதியை தெரிவு செய்யுமா? அல்லது ஜனாதிபதியான மஹிந்தவே பதவியில் நீடிப்பாரா? மக்களின் தீர்ப்பே இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருக்கும்.

வாக்குகள் எண்ணிக்கையில் தில்லுமுல்லுகள், மோசடிகள் இல்லாமல் சரியான முறையில் தேர்தல் நடைபெறுமாக இருந்தாலே மக்கள் விரும்பிய முடிவு எட்டப்படும். ஆயினும் இதுவரை நாள் நடைபெற்ற வன்முறைகளை நோக்குமிடத்து, தேர்தல் அமைதியாக நடக்குமா என்பது தொடர்பில் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததே. எவ்வாறாயினும் நாளை மறுதினம் இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பது ஓரளவு தெரிந்துவிடும்.

செய்திகள்

# எக்னலிகொடவை விடுவியுங்கள்

## அலரிமாளிகைக்கு அருகில் போராட்டம்



கொழும்பு, ஜன, 07

காணாமற்போகச் செய்யப் பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவை விடுவிக்குமாறு கோரி அவரது குடும்பத்தினரால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று அலரி மாளிகைக்கு அண்மையில் நடத்தப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த பிரகீத், லங்காநியூஸ் கொம் இணையத்தளத்தின் ஊடகவியலாளராகப் பணியாற்றியவர். இவர் கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர், அதாவது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கொஸ்வத்தை என்ற இடத்தில்வைத்துக்காணாமற் போனார் என பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இவர் இலங்கை அரசு சார்பானவர்களால் கடத்தப்பட்டதாக அவரது குடும்பத்தினர் கூறிவருகின்றனர். அதே வேளை இதனை அரசு மறுத்துள்ளது. இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரகீத் முன்னொரு தடவையும் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மையப்படுத்தி 'போர் ஒன்றை வெற்றி கொள்வதற்கான இரகசியங்கள்' என்ற 40 நிமிட நேர ஆவணத் திரைப் படத்தைத் தயாரித்தவர்களில் இவரும் ஒருவர்.

பிரகீத் எக்னலிகொட காணாமற் போகச் செய்யப்பட்டு 5 ஆண்டுகள் கடந்துள்ளன. இந்த நிலையிலேயே அவரது குடும்பத்தினரால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தினர், இலங்கை இராணுவத்தின் முன்னாள் கட்டளைத்தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணியினர், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உட்பட 50இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

குறித்த போராட்டத்துக்கு, ஆரம்பத்தில் பொலிஸார் தடை விதித்த போதிலும் பின்னர் எவ்வித தடைகளும் விதிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

அதேவேளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஊடக அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்பினரின் பங்குபற்றுதலோடு ஒரு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. விஹாரமாதேவி பூங்காவிலிருந்து லிப்டன் சுற்று வட்டம் வரை சென்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் இந்த ஆட்சியில் காணாமற்போன, கடத்தப்பட்ட, கொலை செய்யப்பட்ட ஊடகத்துறையினரான சிவராம், பிரகீத் எக்னலி கொட மற்றும் லசந்த விக்கிர மதுங்க நினைவுகூரப்பட்டனர். (ந-10)

## வன்முறைகள் தொடர்ந்தால் மறுவாக்கு பதிவுக்கு உத்தரவு

### எச்சரிக்கின்றார் தேர்தல்கள் ஆணையாளர்



கொழும்பு, ஜன.7

தேர்தல்வன்முறைகள்தொடர்ந்து இடம்பெறுமானால் மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவிட வேண்டி நேரிடும் என்று எச்சரித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய.

கடந்த சில தினங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இத்தகைய வன்முறைகள் சட்டத்தை மீறும் செயல்கள்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர்களை அச்சுறுத்தல், வாக்காளர்களைத் தடுத்தல்; வாக்குச் சீட்டுக்களைச் சேகரித்தல் போன்றவை தேர்தல் விதிமுறைகளை மீறும் செயல்களாகும். வாக்களிப்பின்போது இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். பொலிஸாரே முழுமையாகக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர்"– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

## ஓயாடுவவிலுள்ள சதொசாவில் பழுதடைந்த வெங்காயம் மீட்பு.

கொழும்பு, ஜன.7

அநுராதபுரம் ஓயாடுவவில் அமைந்துள்ள கூட்டுறவு மொத்த விற்பனை (சதொச) நிறுவனத்தின் களஞ்சிய சாலை ஒன்றிலிருந்து மனிதப் பாவனைக்கு உதவாத ஒரு லட்சத்து 80 ஆயிரம் கிலோ கிராம் வரையிலான பெரிய வெங்காயம் கைப்பற்றப்பட்டதாக வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உணவுகள் மற்றும் மருந்துகள் பரிசோதகர் ஆனந்த வேரகொட தெரிவித்துள்ளார்.

அவற்றுள் ஒரு தொகுதி வெங்காயம் அழுகி துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்ததோடு மேலும் ஒருதொகுதி முளை விட்டிருந்தது. மூன்று வார காலத்துக்கு மேலாக அங்கு இந்தப் பெரிய வெங்காயம் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தாகவும் தெரிய வந்துள்ளது. இந்தக் களஞ்சியம் சுற்றிவளைக் கப்பட்ட வேளையில் பணியாளர்கள் குழு ஒன்று அழுகிப் போன வெங்காயத்திலிருந்து ஓரளவு நல்ல நிலையிலான வெங்காயத்தைத் தெரிவு செய்து கொண்டிருந்தது என்றும் ஆனந்த வேரகொட தெரிவித்துள்ளார்.

அநுராதபுர நகரத்திலுள்ள சில பலசரக்குக் கடைகளில் அதிகாரிகளால் சோதனைகள் நடத்தப்பட்டபோது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த அழுகிய வெங்காயம் சிக்கியிருந்ததை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பயனாக இந்தக் களஞ்சியம் சுற்றி வளைக்கப்பட்டது.

இரண்டு கோடி ரூபா பெறுமதியான இந்த வெங்காயத் தொகை சதொசவால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும், இடம்பெற்றுள்ள முறைகேடொன்று அல்லது சரியான விதத்தில் களஞ்சியப்படுத்தாதிருந்ததன் காரணமாக வெங்காயத்துக்கு இந்த நிலைஏற்பட்டிருப்பது தெளிவாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ள வேரகொட இதுதொடர்பாகசம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுடன் பேசிஅவற்றைஅழித்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் தெரிவித்துள்ளார். (வ-22)

## பரப்புரைகள் தொடர்கின்றன

### பவ்ரல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.7

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் நேற்றும் நடைபெற்றன என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவுறுத்தப்பட்டது. இந்தநிலையில் நேற்றும் தேர்தல் பரப்புரைகள் நடைபெற்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ந)

## வன்முறை தொடர்பில் ஐ.நா. அதிக கரிசனை

### மூனின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.7

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக வன்முறைகள் தீவிரமடைந்துள்ளமை குறித்த தனது கரிசனத்தை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் ஸ்டீபனெ டுஜாரிக் இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் அறிந்துள்ள்தாக குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையில்அண்மையில்நடைபெற்றசம்பவங்களை, ஏன் இன்று (நேற்று)நடைபெற்ற சம்பவங்களைக்கூடநாங்கள் அவதானித்துள்ளோம், நல்லிணக்கத்தையும், அரசியல் பேச்சை முன்னெடுக்குமாறும், தேர்தல் அமைதியாகவும், சிறுபான் மையினர் அச்சமின்றி வாக்களிப்பதாகவும் அமைவதை உறுதி செய்யுமாறும் அரசுக்கு பான்கீமூன் விடுத்துள்ள வேண்டுகோள்கள் இதன் காரணமாகவே முக்கியமானவை என கருதுகின்றோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வாரகாலத்திற்கு முன்னதாக பான் கீ மூன் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தேர்தல் அமைதியாகவும், சிறுபான் மையினர் அச்சமின்றி வாக் களிப்பதாகவும் அமைவதை உறுதிசெய்யுமாறும் வேண்டு கோள் விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# தொடர்ச்சிகள்

## வாக்களிப்புக்கு

முழுவதும் 420 தற்காலிக பொலிஸ் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனஎன்றுபொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு ஆரம்பமாகி, வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் வரை அந்த வீதித் தடைகள் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவற்றுக்கு மேலதிகமாக அவ்வப்போது தேவையான இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் தினத்தன்று இடையூறு ஏற்படும் விதமாகச் செயற்படுவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வாறான இடையூறுகள்ஏற்படுத்தப்பட்டாலும்,அந்தப் பகுதிகளுக்கு கூடுதலான அதிகாரிகள் அனுப்பப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

பரப்புரைக்கான காலம் முடிவடைந்த பின்னர் பரப்புரைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலில்வாக்களிப்பதுஅனைத்து மக்களின் உரிமை அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அனைவரும் நீதியான, அமைதியான தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் – என்று தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே', வாக்களிக்கும் தினத்தன்று காலையிலேயே அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களியுங்கள் என்று கோரியுள்ளது. வாக்காளர்கள்யாருக்கு வாக்களிக்கின்றார்கள் என்பதை யாராலும் கண்டு கொள்ள முடியாது. எனவே மக்கள் அச்சமின்றி வாக்களிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ற)

## நாட்டின்

டுள்ளனர்.

இந்தத் தேர்தலில் 19 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் பிரதான இரு வேட்பாளர்களிடையே தான் ஆரம்பத்திலிருந்து கடும் போட்டி நிலவுகின்றது. இருவரும் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வந்ததுடன், பரஸ்பர குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தனர்.

ஆளுங்கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள மஹிந்தராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 18 லட்சத்து 42 ஆயிரத்து 749 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தாலும், இந்த முறை அவருக்குக் கடும் போட்டி, நெருக்கடி ஏற்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன முக்கிய சில அமைச்சர்கள் சகிதம் அரசிலிருந்து வெளியேறிப் பொது வேட்பாளராகக் களமிறங்கியுள்ளமை, 2010 ஆம் ஆண்டு மஹிந்தவுடன் இருந்த ஜாதிக ஹெல உறுமய, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன அரச கூட்டுக்குள் இருந்து வெளியேறியுள்ளமை, அரசுக்குச் சார்பான கட்சிகள் இரண்டாகப் பிளவுபட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்களே நெருக்கடிக்குப் பிரதான காரணிகள் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசுக்குப் பின்னடைவு ஏற்பட்டதுடன், மக்களால் சிவப்பு சமிக்ஞையும் காட்டப்பட்டது. இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர், அரசிலிருந்து பலர் வெளியேறினர். ஆனால் எதிரணியிலிருந்து இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரமே அரசினால் இணைத்துக்கொள்ள முடிந்துள்ளது. இது அரசின் வீழ்ச்சிப் போக்கைக் காட்டுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எதிரணிக்கு ஆதரவு வழங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன 2010 ஆம் ஆண்டிலும் எதிரணிக்கே ஆதரவு வழங்கின. அப்போது எதிரணி பக்கம் இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த முறை ஜனாதிபதியின் பக்கம் நிற்கின்றது. ஆனால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எதிரணியுடன் கைகோர்த்துள்ளமை விசேட அம்சமாகப் பார்க்கப்படுகின்றது. இது இலங்கை அரசியல் வரலாற்றில் புதியதொரு மாற்றமாகக் கருதப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் இது சட்ட விரோத தேர்தல் அறிவிப்பு என்றும் – ஜே.வி.பி. உட்பட சில கட்சிகள் சுட்டிக்காட்டின. இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் ஜனாதிபதி மூன்றாவது தடவையாக போட்டியிட முடியாது என சட்டவிளக்கம் அளித்திருந்தது. எனினும், 17ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த சரத்துகள் நீக்கப்பட்டுவிட்டதால், மூன்றாவது முறையும் முடியும் என வாதாடி வந்த அரசு, இதற்கு உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலையும் பெற்றது. அதனையடுத்து தேர்தலுக்குரிய திகதியும் அறிவிக்கப்பட்டது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்குத் தேர்தல் செயலகம், உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புக்கள், சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்கள் ஆகியன தமது கண்காணிப்பாளர்களைக் களமிறக்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (த–4)

## பாப்பரசர்

சந்திப்பின் போது அவர் வெளியிட்டார்.

"இலங்கை கத்தோலிக்க திருச்சபையால், பரிசுத்த பாப்பரசரை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடையூறு ஏற்படாது. ஜனாதிபதி தேர்தல் காரணமாக பாப்பரசரின் வருகைக்கு பாதிப்பு ஏற்படாது என இரண்டு வேட்பாளர்களும் உறுதியளித்துள்ளனர். அந்த உறுதி மொழிகளில் எங்களுக்கு நம்பிக்கை உள் ளது. தேர்தலுக்குப் பின்னர் அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது" – என்று தேசிய கத்தோலிக்க பொதுத் தொடர்பாளர் பிரிவின் பணிப்பாளர் சிறில் காமினி மேலும் தெரிவித்தார். (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்ரின் லிட்ணா யோகரட்ணம்

பலாலிவீதியைப் பிறப்பிடமாகவும் , யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ரின் லிட்ணா யோகரட்ணம் நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி றோமர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி யேக்கப் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோக ரட்ணத்தின் அன்பு மனைவியும், இராஜேந்திரம், காலஞ் சென்றவர்களான வேத நாயகம்,ஹென்றி, பிலிப்பையா, இராசநாயகம் மற்றும் ரூபி, ஜேம்ஸ், காலஞ்சென்ற சாள்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜீவரட்ணம், மற்றும் தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (07.01.2015) பி.பகல் 3.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:சி.என்.எச். சாள்ஸ்
(மருமகன்)

## துயர் பகிர்கின்றோம்



### அமரர் பாக்கியலட்சுமி சங்கரதாஸ்

எமது Dr.சங்கரதாஸ் நிமலன் (consultant Radiologist-TH. Jaffna)அவர்களின் பாசமிகு தாயார் அமரர் பாக்கியலட்சுமி சங்கர தாஸ் கடந்த 04.01.2015 அன்று இறைபதம் அடைந்ததை யிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தின ருக்கு தெரி வித்துக் கொள் வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச வைத்தியசாலை,
வல்வெட்டித்துறை.

மாவட்ட வைத்திய அதிகாரி
வைத்திய உத்தியோகத்தர்கள்
மற்றும் ஊழியர்கள்.

## ஆத்மார்த்த அஞ்சலி



### காசிப்பிள்ளை பொன்னம்பலம்

(காசிப்பிள்ளை-இராசு)

கொக்குவில் மேற்கு, ஆனைக் கோட்டை வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவரும், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் அமைந்துள்ள தீர்த்த வாவிக்குரிய (தீர்த்தக்கேணி) காணியை வழங்கியவர்களில் ஒருவருமான காசிப்பிள்ளை பொன்னம்பலம் (இராசு) அவர்கள் நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகப் பெருமானின் பாதார விந்தங்களில் நிலையான சாந்திபெற மஞ்சவனப்பதியானை இறைஞ்சுகிறோம்.

மஞ்சவனப்பதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

ஆலய தர்மகர்த்தா
சபையினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28.12.1938

மறைவு
30.12.2012

பளவத்தை வல்வெட்டியைச் சேர்ந்த

### அமரர் பொன்னுத்துரை சின்னத்தம்பி

(இளைப்பாறிய கிராமசேவையாளர்)

துதி: துதியை
(07.01.2015) புதன்கிழமை



எங்கள் அன்புத் தெய்வமே
ஈராண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள்
எம்மை விட்டு அழியவில்லை
என்றும் உம் நினைவுகளுடன்

மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள். மைத்துனிகள்.,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
12.04.1929

மறைவு
20.11.2014



### அமரர் வள்ளியம்மை நாகேந்திரம்

கடந்த 20.11.2014 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி வள்ளியம்மை, நாகேந்திரன் அவர்களின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலிருந்தும் ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் எம்மோடு இருந்து உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (07.01.2015) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள (T.C.T) சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.101, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## விளையாட்டு

# முதல் நாளிலேயே ஆஸியின் ஆதிக்கம்



ஜாம்பவான்களின் தொடர் என வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்றையதினம் ஆஸ்திரேலியாவின் சிட்னி மைதானத்தில் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆஸ்திரேலியாவின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய றோயேர்ஸ் மற்றும் வோர்ணர் ஆரம்பம் முதலே சிறந்த ஆட்டத்தை வழங்க ஆரம்பித்தனர். ஒரு நாள் பாணியில் வோர்ணர் அடித்து ஆட அணியின் ஓட்டம்கிடுகிடுவென உயர ஆரம்பித்தது. தொடர்ந்தும் வோர்ணர் அதிரடியைக் கையிலெடுத்து 108 பந்துகளிலேயே சதம் கடந்து அசத்தினார். அணியின் ஓட்டம் 200 ஆக இருந்தபொழுது இணைப்பாட்டம் பிரிக்கப்பட வோர்ணர் 101 ஓட்டங்களுடன்வெளியேறினார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே றோயேர்ஸ் 95 ஓட்டங்களுடன் வெளியேற ஆஸ்திரேலியா 204 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது. தொடர்ந்து வந்த வொட்சன் மற்றும் சிமித் மற்றுமொரு இணைப்பாட்டத்தைக் கொடுக்க ஆஸ்திரேலியா அணி முதல் நாளிலேயே ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வலுவான நிலைக்குச் சென்றது. இறுதியில் நேற்றைய முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலியா அணி 2 இலக்குகள் இழப்புக்கு 348 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வொட்சன் 61 ஓட்டங்களுடனும் சிமித் 82 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக சமி மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றியுள்ளனர்.

ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)



## விருதுப் பரிந்துரையில் இடம்பெற்றார் சாய்னா

ஒலிம்பிக்போட்டியில் வெண்கலம் வென்றுள்ள சாய்னா பல்வேறுபட்ட சாதனைகளைப் படைத்துள்ளார். இந்நிலையில், பத்மபூஷண் விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் தன் பெயர் இல்லாதது குறித்தும் மத்திய விளையாட்டுத்துறை தனது பெயரைப் பத்மபூஷண் விருதுக்காகப் பரிந்துரை செய்யாதமை குறித்தும் பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவால் வருத்தம் தெரிவித்திருந்தார். இதனையடுத்து பத்ம பூஷண் விருதுக்கு பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவால் பெயரை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

இது குறித்து விளையாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சாய்னா நேவாலின் சாதனைகளைக் கருத்தில் கொண்டு அவரது பெயர் பத்மபூஷண் விருதுக்காக உள்துறை அமைச்சகத்துக்கு பரிந்துரைக்க முடிவு செய்துள்ளது. விருதுக்கு விண்ணப்பிக்கும் காலக்கெடு முடிந்துவிட்டாலும், சிறப்பு அந்தஸ்து வழங்கி அவரது பெயர் பரிந்துரைக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–ரி)

## வவுனியா கூடைப்பந்தாட்ட சங்கம் அங்குரார்ப்பணம்



வவுனியா, ஜன. 7

வவுனியா மாவட்டக் கூடைபந்தாட்ட சங்கம் கடந்த 21ஆம் திகதி நகரசபை கூடைபந்தாட்டத் திடலில் க.கங்காதரன் தலைமையில் வவுனியா மாவட்ட கூடைபந்தாட்ட வீரர்கள், அவர்களின் பெற்றோர்கள் பங்குபற்றுதலுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் உரையாற்றிய விளையாட்டு உத்தியோகத்தர் கமலன், வவுனியாவில் கூடைபந்தாட்டம் நல்ல நிலையில் இருந்தாலும் ஒரு அமைப்பு இல்லாதது பெரும் குறையாக இருந்தது. அது இன்று நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது. இனி வரும் காலங்களில் வவுனியாவில் கூடைபந்தாட்டம் இன்னும் முன்னேறும் எனக் குறிப்பிட்டார். (த–421)



## திரில் நிலையில் ஆட்டம்

நியூஸிலாந்து–இலங்கைஅணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் தற்பொழுது நியூஸிலாந்தின் பசின் றிசேர்வ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணி முதலில் நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில்சகலஇலக்குகளையும் இழந்து 221 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக பிரதீப் 4 இலக்குகளையும் லக்மெல் 3 இலக்குகளையும் பிரசாத் 2 இலக்குகளையும் மத்தியூஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கையணி தனது முதல் இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 356 ஓட்டங்களைக் குவித்து. 135 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. அதிகபட்சமாக சங்கா 203 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக பிறேஸ்வெல் மற்றும் நீஸம் தலா 3 இலக்குகளையும் பௌல்ற் 2 இலக்குகளையும் சௌத்தி மற்றும் கிறைக் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியை தடுக்க வேண்டுமாயின் 135 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணிக்கு, அணியின் ஓட்டம் 159 ஆக இருந்த பொழுது 5 இலக்குகள் பறிபோயிருந்தன. மறுமுனையில் போராடிக்கொண்டிருந்த வில்லியம்சனுக்கு வற்லிங்கை கொடுக்க இருவரும் இணைந்து படிப்படியாக அணியை சரிவில் இருந்து மீட்க ஆரம்பித்தனர். நங்கூரம் இட்டதுபோல் நிலைத்து நின்ற இருவரும் இலங்கையணிக்கு எந்தவித வாய்ப்புக்களையும் வழங்காமல் அணியின் ஓட்டத்தைப் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே சென்றனர். இலங்கையணியின் வியூகங்கள் எதுவும் பயனளிக்காமல்போகவே வில்லியம்சன் இரட்டைச்சதமும் வற்லிங் சதமும் கடந்து அசத்தினார்கள். இருவரும் இணைப்பாட்டமாக 365 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த பொழுது அணியின் ஓட்ட எண்ணிக்கை 5 இலக்குகள் இழப்புக்கு 524 ஆக இருந்தது. அந்த வேளையில் அணித்தலைவர் மக்கெலம் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார். வில்லியம்சன் 242 ஓட்டங்களுடனும் வற்லிங் 142 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக பிரதீப் 3 இலக்குகளையும் கெரத் மற்றும் பிரசாத் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

390 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கையணிக்கு ஆரம்ப வீரரான கருணாரத்ன 17 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றினார். இதனையடுத்து நேற்றைய ஆட்டநேர முடிவில் இலங்கையணி ஓர் இலக்கு இழப்புக்கு 45 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக கிறைக் ஓர் இலக்கைக் கைப்பற்றினார். ஆட்டத்தின் ஐந்தாவது நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30மணிக்குஆரம்பமாகும். (த–ரி)

# பொறி பறக்கும் கோஹ்லியின் ஆட்டம்



இந்திய கிரிக்கெட் அணியின் ஆக்ரோஷமான இளம் வீரர் விராட் கோஹ்லியை மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரர் விவியன் ரிச்சர்ட்ஸ் புகழ்ந்துள்ளார்.

ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் விராட் கோஹ்லி மிரட்டல் ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். அடிலெய்டு டெஸ்டில் அணித்தலைவர் பொறுப்பில் 2 இன்னிங்ஸிலும் சதம் அடித்து அவர் அபாரத்தை வெளிப்படுத்தினார்.

கடைசியாக மெல்போர்ண் டெஸ்டில் 169 ஓட்டங்களை குவித்தது அவரது அதிகபட்ச ஓட்டங்களாகும். 3 டெஸ்ட் போட்டிகளில் 6 இன்னிங்ஸில் விளையாடி 499 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 3 சதமும், ஒரு அரைச் சதமும் அடங்கும்.

மேலும் டோனி டெஸ்ட் போட்டிகளில் இருந்து திடீரென்று ஓய்வு பெற்றதால் கோஹ்லி அணித்தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் மிரட்டல் ஆட்டக்காரர் விவியன் ரிச்சர்ட்ஸ் கோஹ்லிக்கு ஆதரவளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், கோஹ்லியின் ஆட்டத்தை நான் மிகவும் நேசிக்கிறேன். ரசிகர்களுக்கு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி மகிழ்விக்கிறார்.

அவரது ஆட்ட முறையை ரசிகர்கள் நன்றாகவே புரிந்து கொள்கின்றனர். மைதானத்தில் அவரை வெறுப்பேற்றுவது சிறந்த ஆட்டத்துக்கு உதவுகிறது.

அவரது இந்த மோதல் போக்கும் நீடிக்க வேண்டும். அவர் நடந்து கொள்ளும் விதத்தில் எந்தத் தவறும் இல்லை என்று கூறியுள்ளார்.(த)

# இலகு வெற்றியுடன் தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காஅணிக்கும் மற்றும் மேற்கிந்தியத் தீவு களுக்கும் இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்றையதினம் தென்னாபிரிக்காவின் கேப்ரவுன் மைதானத்தில் நிறைவுக்கு வந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 329 ஓட்டங்களில் சுருண்டது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும், கார்மர் 3 இலக்குகளையும் மோர்கல் 2 இலக்குகளையும், சில் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குதமது முதல் இன்னிங்ஸிற்காகதுடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி சகல இலக்குகளையும் இழந்து 421 ஓட்டங்களைப் பெற்று 92 ஓட்டங்களால் முன் னிலை வகித்தது. அதிக பட்சமாக வில்லியர்ஸ் 148 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாககோல்டர் மற்றும் சாமுவேல்ஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ரெய்லர், கபிரியேல் மற்றும் பென் ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க வேண்டுமாயின் 92 ஓட்டங்களை பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களும் பின்வரிசை வீரர்களும் கைவிரித்து சென்றனர். இறுதியில் அந்த அணி தனது இரண்டாவது இன்னிங் ஸில் சகல இலக்குகளையும் இழந்து 215 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிக பட்சமாக சாமுவேல்ஸ் 74 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக கார்மர் 4 இலக்குகளையும் ஸ்ரெய்ன் 3 இலக்குகளையும் மோர்கல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் இலகுவான இலக்குடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரரான பீற்றர்சன் எந்த ஓட்டத்தினையும் பெறாது வெளியேறி அதிர்ச்சியளித்தார். தொடர்ந்து வந்த பிளாசிஸ்சும் 14 ஓட்டங்களுடன் வெளியேற தென்னாபிரிக்க அணி 2 இலக்குகள் இழப்புக்கு 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து வந்த அம்லா எல்கருடன் இணைந்து இணைப்பாட்டமாக 73 ஓட்டங்களைப் பகிர முடிவில் தென்னாபிரிக்க அணி 2 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றியீட்டியது. அதிக பட்சமாக எல்கர் 60 ஓட்டங்களையும் அம்லா 38 ஓட்டங்களையும் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக பின்னி 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா அணி 2:0 எனகைப்பற்றியுள்ளது.

ஆட்டநாயகனாக வில்லியர்ஸ்சும் தொடராட்டநாயகனாக அம்லாவும் தெரிவாகினர்.

இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்று ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது.

(த-ரி)



# இந்திய அணி அறிவிப்பு



ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெறும் 2015 உலகக் கிண்ண தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

15 வீரர்கள் கொண்ட அணி விவரம்:-

டோனி (தலைவர்), ரோஹித் சர்மா, தவான், விராட் கோஹ்லி, அம்பத்தி ராயுடு, சுரேஸ் ரெய்னா, அஜிங்கிய ரஹானே, மொகமது சமி, ஸ்டூவர்ட் பின்னி, ரவீந்திர ஜடேஜா, அக்சர் பட்டேல், இசாந்த் சர்மா, புவனேஸ் குமார், அஸ்வின், உமேஸ் யாதவ்

பொதுவாக அதிகம் ஆச்சரியமளிக்காத எதிர்பார்த்த அணித் தேர்வாகவே இது அமைந்துள்ளது.

2011 உலகக்கிண்ணத்திற்கு பிறகு இந்திய அணி 95 ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் விளையாடியது. இதில் உள்நாட்டில் 25 ஆட்டங்களிலும் அயல் நாட்டில் 32 ஆட்டங்களிலும் வென்றுள்ளது.

2011 உலகக்கிண்ண தொடருக்கு பிறகு ஒருநாள் ஆட்டங்களில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள்: விராட் கோஹ்லி 4,254 ஓட்டங்கள் ரோஹித் சர்மா 2,504 ஓட்டங்கள் ரெய்னா 2,338 ஓட்டங்கள்டோனி2,143ஓட்டங்கள்தவான்2046ஓட்டங்கள்,ரஹானே 1230 ஓட்டங்கள் கம்பீர் 1130 ஓட்டங்கள் ஜடேஜா 1156 ஓட்டங்கள் ராயுடு 685 ஓட்டங்கள் அஸ்வின் 561 ஓட்டங்கள் சேவாக் 513 ஓட்டங்கள்.

2011 உலகக்கிண்ணத் தொடருக்கு பிறகு அதிக இலக்குகளைக் கைப்பற்றிய பந்து வீச்சாளர்கள்:

ஜடேஜா 105 இலக்குகள், அஸ்வின் 101 இலக்குகள், மொகமது சமி 68 இலக்குகள், யாதவ் 46 இலக்குகள், புவனேஸ் குமார் 44 இலக்குகள், இசாந்த் சர்மா 43 இலக்குகள், அமித் மிஸ்ரா 37 இலக்குகள், வினய் குமார் 36 இலக்குகள்.

இவ்வாறாக தனியொரு வீரரின் செயற்திறன்களின் அடிப்படையிலேயே இந்த அணித் தேர்வு இடம்பெற்றிருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. (த-ரி)

# ஹியூக்ஸுக்கான உணர்ச்சிகரமான அர்ப்பணிப்புக்கள்

இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான 4 டெஸ்ட் ஆட்டங் களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆஸ்திரேலியாவின் சிட்னி மைதானத்தில் ஆரம்பமாகியது.

உள்ளூர் ஆட்டமொன்றில் பவுன்சர் பந்தில் படுகாயமடைந்து உயிரிழந்த ஆஸ்திரேலிய நட்சத்திரமான ஹியூக்ஸ் சிட்னி மைதானத்திலேயே காயமடைந்து சிகிச்சை பயனின்றி இறந்தார். இதனால் ஹியூக்ஸ் இறந்த சிட்னி மைதானத்தில் இடம்பெறும் இந்த நான்காவது டெஸ்ட் ஆட்டத்தினை ஹியூக் ஸுக்கு அர்ப்பணிக்கவேண்டும் என்ற உணர்ச்சிப்பிடியில் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய வீரர்கள் களமிறங்கினர். இந்த ஆட்டத்தில் அஞ்சலியுடன்கூடிய பல்வேறு அர்ப்பணிப்புக்கள் மற்றும் நிகழ்வுகள் ஹியூக்ஸுக்காக இடம்பெறும் என்ற பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற நேற்றையஆட்டம்ஆரம்பமானது.

ஹியூக்ஸின் குடும்பஉறுப்பினர்கள் அனைவரையும் நேற்றைய ஆட்டத்தையும் ஹயூக்ஸுக்கு செய்யப்படும்அஞ்சலிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் அனைத்தையும் காண வருகை தரும்படி ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்திருந்தது. அது மட்டுமன்றி ஆஸ்திரேலிய வீரர்களின் உடை மாற்றும் அறைக்கு முன்னால்ஹியூக்ஸின் உருவப்படம் பொறிக்கப்பட்ட செப்பு தகடு பொருத்தப்பட்டது. இது வீரர்கள் மைதானத்துக்குள் செல்லும் போதும் வரும் போதும் ஹியூக் ஸினை நினைவுபடுத்தும் படியாக அமைந் திருந்தது. வோர்ணர் மைதானத்துக்குள் துடுப்பெடுத்தாடச் செல்லும்போது ஹியூக்ஸின் உருவப்படத்தை வணங்கி விட்டுச் சென்றார். ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய அவர் 63 ஓட்டங்ளை எடுத்திருந்த பொழுது ஹியூக்ஸ் அடிபட்டுவிழுந்த ஆடு களத்துக்கு சென்று விழுந்து வணங்கி விட்டு வந்தார். தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்டு சத மடித்த அவர் சதத்தை ஹியூக்ஸிற்கு அர்ப் பணித்தார். இவை வீரர்களால் ஹியூக்ஸிற்கு செய்யப்பட்ட கௌரவங்களாக அமைந்தன. (த–ரி)

## மரண அறிவித்தல்



### சின்னக்குட்டி குணரத்தினம்

(ஓய்வுநிலை பொலிஸ் அத்தியட்சகர்)

மணற்பகுதி ஆவரங்கால் கிழக்கு புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி குணரத்தினம் நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி- சிவக் கொழுந்து தம்பதியரின் ஏக புதல்வனும், நடராஜா குட்டிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும், ஜனார்த்தனன், உமாசங்கர், லாவண்யா, யுகேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்சினி, சயந்தா, சுமன்ராசா ஆகியோரின் மாமனாரும், விஹாசனின் அன்புப் பேரனும், பாமா, உதயகுமாரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2015) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

OXFORD ABC IT
CAMBRIDGE ENGLISH
Ph: 0212212166



உலகத்தரப் பல்கலைக்கழகங்களால் வடிவமைக்கப்பட்ட பாடநெறிகளை நவீன ஸ்மாட் (SMART) வகுப்பறைகளில் மகிழ்ச்சிகரமான சூழலில் கற்கும் எல்லாச் சிறார்களும் நிச்சயம் வெற்றியாளர்களே! புதிய கல்வியாண்டுக்கான கேம்பிரிட்ஜ் ஆங்கிலம் மற்றும் ஒக்ஸ்போட்டின் தகவல்த் தொழில்நுட்பப் பாடநெறிகள் விரைவில் ஆரம்பம்.
எஸ். எம். எஸ் மூலம் பதிவு செய்ய "REG(இடைவெளி)முழுப்பெயர்" என டைப் செய்து 077 9866409 இற்கு அனுப்பும் ஒவ்வொருவருக்கும் விசேட சலுகைகள் உண்டு.
ALISON
வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கு, இணுவில். பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

CIMA
உங்கள் தொழில்சார் கற்கை நெறியினை இன்றே ஆரம்பியுங்கள்
"பெறுபேறுகள் ஒரு தடையில்லை"



FasTrack your future
with the new generation professional business qualification
NEW BATCHS COMMENCING DATES
WEEK END BATCH STARTS ON 10TH JAN 2015 (SAT)
WEEK DAYS BATCH STARTS ON 12TH JAN 2015 (MON)
இம்முறை A/L பெறுபேறுகள் வெளியாகியவர்கள் தங்களது பரீட்சைப் பெறுபேறுகளையும் ஏனைய சான்றிதழ்களையும் சமர்ப்பித்து உங்களுக்கான எமது கல்வி உதவித் தொகையை பெற்றுக்கொள்ள முடியும்
கல்விக் கடன் வசதி ஒழுங்குசெய்து தரப்படும்
மாணவர்களுக்கான எமது கல்விக் கட்டணஉதவித்தொகை
O/Leval Students -25%
A/Leval 3A's Students -25%
Students after O/L exams
Register today and enjoy special benefits...!
We are ready..! Call us to guide you better
WISDOM BUSINESS ACADEMY
Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E : info@wisdombusiness.com
021 2 220 727
021 7 200 777

தேவை
திருநெல்வேலி தெற்கு, பரமேஸ்வராச் சந்தி, ஆலயத்துக்கு நித்திய பூசை செய்வதற்கு ஐயரும், குருக்களும், நாதஸ்வர தவில் கலைஞர்களும், சாத்துப்படி செய்பவர்களும் தேவை.
தொடர்புகளுக்கு: தலைவர்
077 9436781 (55588)(10.7.3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வீடு வாடகைக்குத் தேவை
யாழ். நகரை அண்மித்ததாக, இரு குடும்பங்கள் வசிப்பதற்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை. (மாடிவீடு விரும்பத்தக்கது)
தொடர்பு: 0777 531461 (55583)(10.7.3)

அச்சக வேலைக்கு ஆள் தேவை
யாழ். நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு கணினி இயக்குநர் (பக்க வடிவமைப்பாளர்), மெசின் (Kora) இயக்குநர் தேவை. (திறமைக்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.)
தொடர்பு: 071 6191700 (555910)(10.7.3)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி இராஜலட்சுமி



சுழிபுரம் வீரபத்திர கோவிலடியை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி காளி கோவிலடியை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி இராஜலட்சுமி கந்தசாமி நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை அன்னப் பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற சிற்பஸ்தபதி செ.கந்தசாமியின் பாசமிகு மனைவியும் , காலஞ்சென்ற விமலதாஸ் மற்றும் விமலசோதி விமலராணி விம லரட்ணம் விமலரஞ்ஜினி ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

தகவல்:
செ.சட்டநாதர்.
(மருமகன்)



SPOKEN ENGLISH
O/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள்,இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.
சனி,ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 10.01.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
யாழ்நகர் - நெல்லியடி - சங்கானை.
SAAMSON LANGUAGE SCHOOL
யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L Day
பொருளியல்
உங்கள் புகழ்பூத்த பேராசான்
திரு. கருணாகரன்
(B.A.(Hons) ECO Spl.)
திங், செவ், புதன், வியாழ, வெள்ளி
5 நாள்களும்
பிரிவு I : 8.30 ⟶ 10.30
பிரிவு II : 10.30 ⟶ 12.30
ஆரம்பம் 09.01.2015 வெள்ளி
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை
உதயன்
07 ஜனவரி 2015 புதன்கிழமை

> மனிதனை அறிவாளியாகச் செய்ய முடியாத அறிவின் பெரும்பகுதி அவனை ஆணவம் பிடித்தவனாயும், பயனற்றவனாயும் செய்து விடுகிறது.
> -அடிஸன்

# சத்தமில்லாது கொல்லும் போதைப் பொருள்கள்

ராஜராஜன்

தமிழர் பிரதேசங்களில் போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்துச் செல்வதால் பெரும்சமூகப் பிறழ்வு ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன. போதைப் பொருள்கள் என்று வகைப்படுத்தும் போது ஹெரோயின், அபின், கஞ்சா ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்குவது தவறானது. மதுபான வகைகள், புகையிலைப் பொருள்கள், வெற்றிலை ஆகியவற்றையும் போதைப் பொருள்களாகவே கொள்ள முடியும்.

ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான லீற்றர் மதுபான வகைகளை எம்மவர்கள் குடித்துத் தீர்த்து விடுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அதிலும் இளவயது வாலிபர்கள் மதுபானப் பிரியர்களாக மாறியுள்ளமை ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லப் போகின்றது. அரசின் வரவு–செலவுத்திட்டத்தில் மதுபான வகைகளுக்கு என்னதான் அதிகரித்த வரி விதித்தாலும் அவற்றின் விற்பனையில் ஒருபோதுமே வீழ்ச்சி ஏற்படுவதில்லை. மாறாக அதிகரித்துச் செல்வதையே காண முடிகின்றது. இந்த நிலைதான் புகையிலைப் பொருள்களுக்கும் ஏற்படுகின்றது.

புகையிலைப் பொருள்களின் பாவனையால் பாதிக்கப்பட்டு ஆண்டுதோறும் பல ஆயிரம் பேர் சாவைத் தழுவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புகையிலையில் காணப்படும் கொடிய வேதியியல் பொருள்கள் புற்றுநோயை ஏற்படுத்துவதால் இந்தச் சாவுகள் ஏற்படுகின்றன. ஆனால் இதை எவரும் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. சிகரெட், பீடி ஆகியவற்றை உதடுகளில் பொருத்திச் சுகம் காண்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

எமது பாரம்பரிய வழக்கப்படி வெற்றிலை, பாக்கு என்பன மங்கலப் பொருள்களாகக் கருதப்படுகின்றன. ஆலயங்களில் இறைவனுக்கு அர்ச்சனை செய்வதற்கும் மங்கல நிகழ்வுகளின் போதும் இவை முக்கிய இடம்பெறுகின்றன. ஆனால் இவற்றைத் தொடர்ச்சியாக வாயில் இட்டு மெல்லும்போது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. சிலர் வெற்றிலை பாக்குடன் சுண்ணாம்பு, புகையிலை ஆகியவற்றையும் சேர்த்து மெல்லுவதுடன் இவற்றின் கலவையை வாயில் வெகுநேரம் வைத்திருப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இதனால் வாயிலுள்ள மெல்லிய தோற்பகுதி பாதிக்கப்பட்டு, அங்கு கிருமிகள் தஞ்சமடைந்து இறுதியில் புற்றுநோய் ஏற்படுவதற்கு வழி வகுக்குகின்றது.

இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் வெற்றிலையை மென்று சுகம் காண்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைந்த பாடாகத் தெரியவில்லை.

போர் ஓய்ந்த பின்னர் தமிழர் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட வகையில் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இதன்கொடிய விளைவுகளை உணரத்தவறிவிடும் எமது இனத்தவர், விளக்கில் வீழ்ந்து இறக்கும் விட்டில் பூச்சிகளின் நிலைக்கு மாறிவிட்டனர்.

> போர் ஓய்ந்த பின்னர் தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் திட்டமிடப்பட்ட வகையிலான சமூகச்சீரழிவுகளை ஏற்படுத்தி விடும் நடவடிக்கைகள் வெற்றிபெற்றுள்ளதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இதன்கொடிய விளைவுகளை உணரத் தவறிவிடும் எமது இனத்தவர், விளக்கில் வீழ்ந்து இறக்கும் விட்டில் பூச்சிகளின் நிலைக்கு மாறிவிட்டனர்.

இந்தியாவிலுள்ள கேரள மாநிலம் எமது நாட்டுக்கு அருகில் காணப்படுகின்றது. ஆகாய மார்க்கமாகவும் கடல் வழியாகவும் அங்கு செல்வதற்கு ஏனைய பகுதிகளுக்குச் செல்வதைவிடக் குறைவான நேரமே எடுக்கின்றது. ஆயுள்வேத சிகிச்சை, மாந்திரீகம் ஆகியனவற்றுக்குப் பெயர்போன கேரளா, கஞ்சா என்னும் போதைப் பொருளை உற்பத்தி செய்து வேறு இடங்களுக்கு அனுப்பி வைப்பதிலும் முதலிடத்தை வகிக்கின்றது. சமீப காலமாக கேரளாவிலிருந்து கடல் மார்க்கமாக இங்கு கடத்தி வரப்படும் பெருந்தொகையான கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. இவற்றின் பெறுமதி பல கோடி ரூபாய்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது. கஞ்சாவைத் தொடர்ந்து பயன்படுத்துபவர்கள் மூளை பாதிக்கப்பட்டு இறுதியில் நடைப் பிணங்களாக மாறி விடுவார்கள். இதனால் இதன் உற்பத்தி, விற்பனை மற்றும் பாவனை கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இவற்றையெல்லாம் மீறி கஞ்சா வியாபாரம் அமோகமாக இடம்பெற்று வருகின்றது.

இதைவிட போர் ஓய்ந்த பின்னர் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஏனைய குடிவகைகளைவிட கசிப்பின் விலை குறைவாகக் காணப்படுவதாலும், இலகுவாகக் கிடைப்பதாலும் அன்றாடம் கூலிவேலை செய்து பிழைக்கும் சாதாரண மக்கள் இதனை அருந்தி போதையில் மிதக்கின்றனர். இதனால் இவர்களது குடும்பங்களில் சச்சரவுகள் தோன்றுவதுடன் சமூகக் கட்டமைப்பும் பாதிக்கப்படுகின்றது.

மனிதனது நிதானத்தை மெல்ல மெல்ல அரித்து உடலையும் அழித்துவிடும் போதைப் பொருள்களால் ஏற்படும் ஒரு நன்மையையாவது எவராலும் குறிப்பிட முடியுமா? ஆனால் தீமைகளை நீண்ட பட்டியல் இட்டுக் கூறமுடியும்.

மேலும், போதைப் பொருள்கள் பாவனைக்குப் பெரும் தொகையான பணத்தைச் செலவிடும் எம்மவர்கள் அதனைத் தமது குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்த முடியும். அத்துடன் போதைப் பொருள்களின் பாவனையால் உடல் பாதிக்கப்பட்டு ஏற்படும் மருத்துவச் செலவுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

மனிதர்களை அணுஅணுவாகக் கொல்லும் போதைப்பொருள்களை இந்த உலகிலிருந்து முற்றிலுமாக ஒழித்து விடும் அந்தப் பொற்காலம் மலர வேண்டும்.

அரசுகளுக்கு இவற்றின் மூலமாகக் கிடைக்கும் பெருந்தொகையான வரிப்பணத்துக்கு மாற்றீடான வழிவகைகள் ஆராயப்பட வேண்டும். போதைப் பொருள் இல்லாத உலகே வளமான எதிர்காலச் சமூகத்தை உருவாக்கும்.



புதன்பொய்கை

# "கிளர்ந்தெழும் தந்திகளில் முத்தாக விளைந்த இசை மணி உருப்படிகள்"

மெண்டலின் சிவகுமார் அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவைமுன்னிட்டு,லலிதஷேத்ராவின் ஆசியோடு, 16.12.2014 செவ்வாய் மாலை 4.30 மணியளவில் பூநாறிமரத்தடி செல்வ மஹால் மண்டபத்தில், தென்னிந்திய இரட்டை வயலின் புகழ் நெய்வேலி எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களுடைய 'இரட்டை வய்லின்' இசை அரங்கம், கனகச்சிதமாக நடைபெற்றது. இற்றைக்கு 40 வருடங்களுக்கு மேலாக்வே எல்.சங்கர் அவர்களினால் உருவாக்கப்பட்ட இந்த வயலின், உருவகத்தில் வித்தியாசமானதோடு, இலங்கையில் முதல் தடவையாக, யாழ். மண்ணில் முத்தாக விளைந்து எமது சொத்தாகியது. கணீரென்ற நாதம், காண்பதற்கு எளிமையான வடிவம். கிளர்ந்தெழும் பல தந்திகள். ஒரு பக்கம் நான்கு தந்திகள், மறு பாகத்தில் ஸப்த தந்திகள். அனுமந்திர ஸ்தாயிக்கு அழைத்துச் செல்லும் விசித்திரமான வாசிப்பு. உச்ச ஸ்தாயியில் ஸ்திரமாக நின்று சங்சரிக்கும் உபாசிப்பு. அடேயப்பா! அற்புதமான வாசிப்பு. அனுசரணையான பக்க வாத்திய முத்தாய்ப்பு. சொல்லவா வேண்டும். செல்வமஹால் விரலிசையால் சோபித்ததெனலாம்.

தவில் சக்கரவர்த்தி, கலைமாமணி ரி.ஆர்.கோவிந்தராஜனது அநாயாசமான வாசிப்பு, அனைவரையும் வசீகரித்ததெனலாம். அவரது கம்பீரம், ஆர்ப்பரித்த விரல்களின் லயவிந்நியாசம், இடையிடையே உதிர்த்த மனோதர்ம தாளலயச் சிரிப்புக்கள், சீராக அமைந்த லாவண்யமான இரம்மியம் சொட்டும் வலந்தலை, இடந்தலை வாசிப்புக்கள் யாவுமே, இரட்டை வயலினுக்கு வரம் கொடுத்ததெனலாம்.

'லயஞானகுபேரபூபதி' தெட்சணாமூர்த்தியோடு இணைந்த சிட்சைகளை அனுபவித்த பேறாக, அவரது பாணியிலான வாசிப்பினை தென்னிந்திய தவில் மேதை ரி.ஆர். கோவிந்தராஜன் அரங்கில் சமர்ப்பணம் செய்து சபையோரின் கரகோஷத்தைத் தமதாக்கினார்.


வயகலாவிபஞ்சி என்.இராமகிருஷ்ணன் அவர்களது மிருதங்க விநோதங்களும், பிசிறாத வாசிப்பும் எந்த விதத்திலும் சோடை போகவில்லை. காமகோடி பீட ஆஸ்தான வித்துவான் ஏ.கணேசன் அவர்களது முகர்சிங் வாத்திய சௌக்கியமும், ஈழத்து வாத்தியக் கலைஞர் மெண்டலின் எஸ். சிவகுமாரின் தாற்பரிய வெளிப்பாடும் அரங்கைச் சௌகரியமாக்கிற்று – எனலாம்.

மோகன இராகத்திலமைந்த நின்னுகோரி வர்ணத்தின் உயிருக்கு எந்தவித இடைஞ்சலுமில்லாமல், அதியுச்ச வேக காலத்தில், தாதுமாது விலகாமல், தீட்சண்யமாக, தெவிட்டாமல் தேனாகத் தந்த இரட்டை வயலினது சுகானுபவத்தினை, தியாகராஜ சுவாமிகளது பஞ்சரத்தின கீர்த்தனையான ஶ்ரீராக 'எந்தரோ மஹானுபாவுலு' வரை இடைவிடாது அனுபவிக்க முடிந்தது. அப்பாலமைந்த உருப்படிகள் இசை மேதைகளான சந்திரசேகரம், சித்தார் இசைக் கலைஞர் பண்டித் ரவிசங்கர், மதுரைச் சோமு, குன்னக்குடி வைத்தியநாதன், மெண்டலின் ஶ்ரீனிவாசன் ஆகியோரை வணங்கும் படியாக வைத்தது எனலாம்.

Music is the Universal Language சங்கீதம் ஓர் உலக மொழியாக மிளிர்வதற்கு விரல் இசைக் கலைஞர்களும், குரல் இசைக் கலைஞர்களும் ஆற்றி வரும் பங்களிப்பு மிகவும் உன்னதமானது என்பதை இரட்டை வயலின் இசைவிருந்தானது பல தடவை நிரூபித்து, தீர்மானங்கள், குறைப்புக்கள், சில்லறைகள், பரிணாமங்களோடு அரங்கின்னை விடுவித்தது.

இதேபோன்று இலங்கை, இந்திய கலைஞர்களின் உறைவிடமாக யாழ். மண் வரம் பெற வேண்டுமென்ற ஆவலோடு ஆர்வலர்கள் விடைபெற்றனர். இசையானது கற்பனைக் காட்டிலும், கேட்பதினாலேயே மேம்படும் என்பது யாழ். மண்ணில் நிஜமாகிறது.

கே.எஸ். சிவஞானராஜா,
கொக்குவில்.













## விரதமஞ்சரி காணொளி 'பைரவ கீதங்கள்' இறுவட்டு வெளியீடு

'விரதமஞ்சரி' காணொலி மற்றும் 'பைரவ கீதங்கள்' இறுவட்டு அறிமுகவிழாவும், இசை நிகழ்வும் அண்மையில் யாழ்.பூநாறி மரத்தடி செல்வ மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் இணுவில் தர்மசாஸ்தாகுருகுலம் தாணு. மகாதேவக் குருக்கள், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இதன்போது ச.ஷைலேந்திரசர்மாவின் இசை நிகழ்வும், கௌரவிப்பும் நடைபெற்றன. இறுவட்டை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டு வைத்தார். (வ–14)

## நெஞ்சக் கதவைக் கொஞ்சம்........

### மானுடம் மரித்துவிடக்கூடாது!

ஒரு நிறுவனத்தின் பெண் பணியாளர் சிலர் மதிய உணவு வேளையின் போது அன்றைய செய்தித்தாளில் வந்த, "குழந்தைகளுக்கு உணவில்லை, உயிரை மாய்க்கத் துணிந்த தாய் – குடாநாட்டில் வறுமையின் கோரம் – தூக்கில் தொங்க முற்பட்டு காப்பாற்றப்பட்டார் மூன்று பிள்ளைகளின் தாய்" என்ற செய்தியை அலசுகின்றனர். ஏழு பிள்ளை நல்ல தங்காள் கதையிலிருந்து சமகாலத்தில் வெளியான இம்மாதிரியான செய்திகள் அசை போடப்படுகின்றன. "ஐயோ! பாவம், இப்படியானதுகளுக்குத்தான் உதவ வேண்டும். நாங்கள் எல்லாம் சேர்ந்து காசு போட்டு அவவுக்கு உதவுவோமா", "எல்லோரும் சேர்ந்து கொடுக்கா விட்டாலும் ஆஸ்பத்திரிக்குத் தன்னும் போய் அவர வருக்கு விரும்பினதைக் கொடுக்கலாம் தானே" – பல எலிகள் சேர்ந்தால் புற்றெடுக்காத கதையாகி பின்னர் பூச்சியமானது விடயம்.

அரச நிறுவனம் ஒன்றில் அரட்டை அடித்துக் கொண்டிருந்த பணியாளர்களிடையே அன்றைய செய்தித்தாளில் வந்த "புதுச் சைக்கிளைப் பறி கொடுத்தார் உயர் வகுப்பு மாணவி– வறுமை நிலையிலும் பெற்றோர் கடன் பட்டு வாங்கிக் கொடுத்தனர்– உயிரை மாய்க்க முயற்சித்த மாணவி வைத்தியசாலையில்" எனும் செய்தி பேசுபொருளானது. "அருகிலுள்ள கோயிலுக்கு ஏன் சைக் கிளைக் கொண்டு போனவ; புதுச் சைக்கிள், முன்னம் முன்னம் கோயிலுக்குக் கொண்டு போயிருக்கும்; பூட்டியிருந்த அந்தக் கறுமத்தின் சைக்கிளை எடுத்தவன் நல்லா இருக்கமாட்டான்; ஒபிஸ் நலன் புரிமூலம் காசுசேர்த்து ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுப்போமா?" – ஆண்டி மடம் கட்ட முற்பட்டது போலாகி அதுவும் பின்னர் பூச்சியமானது.

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர், "எனது மகனைப் புலிகளிடம் பறிகொடுக்கவில்லை, சிங்கத்திடம் பறி கொடுத்தேன் "எனத் தாயொருவர் ஆணைக்குழு ஒன்றின் முன்பாகத் தெரிவித்திருக்கிறார். அவருக்கு உதவிகள் செய்வது பற்றிக் கேட்டபோது, "எனக்குக் காலும் கையும் நல்லா இருக்கு. உதவி ஒண்டும் தேவையில்லை" என்றிருக்கிறார், அதுவும் நாலுபிள்ளைகளைப் பறி கொடுத்து நிற்கும் தள்ளாமையிலும், தாழாமையும் தளராமையும் ஒருங்கு சேர. இதை அவர்களுக்கு – ஆணைக்குழுவுக்கு – தெரிவித்ததாக அல்லாமல், தற்கொலை முயற்சியாளருக்கு – எங்கள் சமூகத்துக்கு – தெரிவித்ததாக ஏன் கொள்ளக்கூடாது? மானுடராக பிறந்தவர் இறக்க வேண்டியவர்தான். நீண்ட கால வரலாற்றில் ஒரு குறித்த கால அவகாசம் வரை பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் வாழ்ந்து தான் ஆக வேண்டும். அவர்களது உதவியை அந்த அம்மா மறுத்தது வேறு. எங்களவர்க்கு நாம் உதவ மறப்பது வேறு. மானுடம் மரித்துவிடக்கூடாது.

# வளர்ந்து வரும் இளம் படைப்பாளியின் பார்வையில்....

தேவி பரமலிங்கம் எழுதிய "பரிசுத் தெரிவுப் படைப்புக்களின் வீக்க தூக்கங்கள்" என்ற தலைப்பிலான விமர்சனக் கண்ணோட்டத்தை 2014.12.03, ஆம் திகதிய 2014.12.10 ஆம் திகதிய உதயனின் புதன் பொய்கையில் வாசித்தேன். வளர்ந்து வரும் என்னைப் போன்ற இளம்படைப்பாளிகளுக்கு களமாக அமைவது, கண.மகேஸ்வரன் போன்ற மூத்த எழுத்தாளர்களின் பரிசுக்குத் தெரிவான சிறுகதைகளும், அதனூடாக படைப்பாளியின் நியாயமான தவிப்புக்களை அவர் எவ்வாறு சமூகத்துக்கு எடுத்துரைக்கிறார் என்பனவே. ஏனைய பரிசுத் தெரிவான சிறுகதை, கவிதைகளின் படைப்புகளுக்குச் சொந்தமானவர்கள் தேவிபரமலிங்கத்தின் நுனிப்புல் மேய்ந்த விமர்சனத்தை நியாயமானதாக கருதினாலும், கண.மகேஸ்வரன் ஒருவரே தனது படைப்பில் விமர்சிக்கப்பட்ட தவறுகளை சுட்டிக் காட்டி 2014.12.17 ஆம் திகதிய புதன் பொய்கையில் தனது நியாயமான கண்ணோட்டத்தை தேவி பரமலிங்கத்துக்கு எடுத்துரைத்தார்.

அப்போதாவது தேவி பரமலிங்கம் மீள தன் தவறை ஒத்துக் கொள்ளாமல் 'திரிவு படுத்துதல் விமர்சனமல்ல' என 2014.12.24 ஆம் திகதிய புதன் பொய்கையில் 'நெருப்பு சுடும்' என்று தெரிந்தே தான் விரலை வைத்ததாக கூறியுள்ளார். அவருடைய இந்த சிறு குறிப்பை வாசிக்கக் கிடைத்த இளம் படைப்பாளியான நானும், தேவி பரமலிங்கத்துக்கு மட்டும் அல்ல, அவரைப் போன்ற 'சேற்றை அள்ளி தன் முகத்தில் பூசிக் கொள்ள' நினைப்பவர்களுக்கும் பயன்படும் வகையில் சில கருத்துக்களைக் கூற விளைகிறேன்.

தேவி பரமலிங்கம் அவர்களே, பரிசு பெற்ற 10 சிறுகதைகள், 10 கவிதைகள் பற்றி இரண்டுக்குமான விமர்சனங்களை எழுதக் கூடியதாக 'உதயன்' ஆசிரியர் உங்களைத் தெரிவு செய்திருந்தார்.

'செய்வன திருந்தச் செய்'. தந்த பணியை நேர்த்தியாகச் செய்வதை விட்டு விட்டு அவருக்கு அரை ஆண்டுகளை விழுங்கி விடுமாம். விழுந்தும் மீசையில் மண் ஒட்டாதவராய், நுனிப்புல் மேய்ந்ததையே தாங்கிக் கொள்ள முடியாத கண. மகேஸ்வரனால் ஆழக்கடித்து மேய்ந்திருந்தால் தாங்கவா முடியும்? என்ற ஒரு கு(கி)றுக்கு கேள்வியும்...

விருட்சம் என்பது இருபதோ, இருநூறோ என்பதற்கு தாவரவியல் கல்வியை நீங்கள் படிக்கத் தேவையில்லை. பத்திரிகையில் வெளிவந்த படைப்பு போதும். இதிலிருந்து உங்கள் கண்பார்வை மழுங்கி விட்டதை உணரலாம். உண்மையில் உங்களுக்கு உருவகத்துக்கு விளக்கம் கொடுக்கத் தெரியவில்லை. உருவகத்துக்கு விளக்கம் இப்படியும் கூறலாம். சிறுவயதில் 'குடையின் சுயசரிதை' என்று எழுதியிருப்போம். அஃறிணைப் பொருளான குடைக்கு உணர்ச்சிகள் இருக்கின்றனவா? இல்லையே. அதை உபயோகிக்கும் மனிதனே அதற்கு உயிர் கொடுத்து தனது தவிப்புக்களை 'குடை' என்ற உருவகம் மூலம் கூற விளைகிறான்.

படைப்புக்களில் பத்திரிகையின் ஆசிரியர் சில திருத்தங்களை செய்வது அனைவரும் அறிந்ததே. இதன் போது தனக்கு சொந்தமில்லாத வார்த்தையை புகுத்தி விட்டார்களே என்று கண. மகேஸ்வரன் வெளிப்படையாகக் கூறியது, அவரது படைப்பில் அவர் முழுமையாக உரிமை கொண்டாட முடியாதவராய் நீதியின் பால் ஈர்க்கப்பட்டவராய் உண்மைத் தன்மையை கூறியுள்ளார். அதைக் கூட உங்களை அவர் கூறவில்லை. உதயன் நிறுவனத்துக்கே தனது கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

எவ்வளவுதான் நியாயமான காரணங்களைக் கூறினாலும் 'குதிரைக்கு கொம்பு உண்டு' என்று அடம்பிடிப்பவர் தேவி பரமலிங்கம். 'ஒரு கோப்பை சோற்றுக்குள் முழுப் பூசணிக்காயை மறைக்க எடுக்கும் பிரயத்தனம் என்ற வார்த்தை சரியாக உங்களுக்கு பொருந்துகிறது.

மறைந்த எழுத்தாளர் சுஜாதா கூறிய வார்த்தை அவருக்கு இருந்த, தான் என்ற ஆணவத்தைக் காட்டுகிறது. இதைக் கண. மகேஸ்வரன் தனக்குதவியாக சுஜாதாவை பிணக் குழியிலிருந்து தூக்கி நிறுத்தவில்லை. தான் என்ற அகந்தை தங்களுக்கும் தொற்றியுள்ளதையே குறிப்பிட்டிருந்தார்.

படைப்பாளிக்கும், விமர்சகனுக்கும் இடையில் முளைத்த இந்தக் காளானை இருவரும் அறிந்திருக்க வாய்ப்புக்கள் குறைவே. நான் வளர்ந்து வரும் ஓர் இளம்படைப்பாளி என்பது பத்திரிகையில் எழுதினால் தான் அறிமுகம் வேண்டும் என்றில்லை.

2009 ஆம் ஆண்டில் ஜீவநதி என்னும் ஊற்றில் மூழ்கி எழும்பிய நான் சமூகத்துக்காய் பல படைப்புக்களை மூழ்கி முத்தெடுத்துள்ளேன்.

செய்தி நிருபரின் பேனாவும், ஒரு படைப்பாளியின் பேனாவும் எப்போதும் ஓய்ந்திருப்பதில்லை. மரணப்படுக்கையில் கூட பேனை குமிழ் திறந்த படி இருக்கும். அதே போல் கண.மகேஸ்வரனின் நியாயமான பார்வைக்கும், தேவிபரமலிங்கத்தின் அசமந்தப் போக்குக்கும் விடை கொடுக்க நானும் உதயனுடன் இணைந்தேன்.

நான் முதன் முதலாக எழுதிய சிறுகதையின் தலைப்பை ஜீவநதி ஆசிரியர் வேறு தலைப்பில் பிரசுரித்திருந்தார். அதைத் தாங்க முடியாத என்னால், கண.மகேஸ்வரனின் வலியையும் உணர முடிந்ததால் நீதியின் பக்கம் தலை வணங்குகிறேன்.

தேவி பரமலிங்கத்தை உதயனின் சூரியகாந்தியில் வெளிவந்து கொண்டிருக்கும் 'மேட்டு நிலத்து ஊற்று' என்ற தொடர்கதை வழியாகவே அறிவேனே தவிர நான் அவரது பரம எதிரியும் இல்லை, நீண்டகால நண்பனும் இல்லை.











# வலி.கிழக்குப் பிரதேச பண்பாட்டு பேரவையின் பண்பாட்டுப் பெருவிழா

வலி.கிழக்கு, கோப்பாய் பிரதேச பண்பாட்டுப் பேரவையின் பண்பாட்டுப் பெருவிழா கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப முன்றிலில் அமைந்துள்ள நடராஜ இராமலிங்கேஸ்வரர் (சிவன் கோயில்) ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளை அடுத்து விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மங்கல இசை முழங்க மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

வலி. கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற அந்தப் பண்பாட்டுப் பெருவிழாவில்கிளிநொச்சி,வவுனியா மாவட்டங்களின் முன்னாள் அரச அதிபரும், தமிழ் இலக்கிய படைப்பாளியுமான உடுவை எஸ்.தில்லைநடராசா, வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், பேராசிரியர் சி.சிவலிங்கராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கவிஞர் இ.முருகையன் அரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதேச செயலரின் தலைமை உரையை அடுத்து சபையே அதிர்ந்தது. மேடையில் ஒலித்த யுத்த பேரிகை முழக்கத்தோடு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களின் "வாள் நடனம்" ஆற்றுகை அரங்கேறியது. அது விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்ததோடு தமிழரின் பாரம்பரிய கலை வடிவத்தையும் வீர உணர்வையும் மீண்டும் ஒருதடவை நினைவுக்குக் கொண்டுவந்தது. 15 வயதுக்குஉட்பட்ட பாடசாலை மாணவர்களா இதனை நிகழ்த்துகின்றனர்? என அனைவரும் வியந்து மௌனிகளாக இருந்து ரசித்தனர். மாணவர்களின் கலை ஆர்வம், வீரத்தை வெளிப்படுத்தும் உடை அலங்காரம், வாள்வீச்சு என்பன அதனை நெறியாள்கை செய்த பாடசாலை ஆசிரியரின் திறமையையும் வெளிப்படுத்தி நின்றது.



தொடர்ந்து கலைஞர் மஞ்சரி நூல் வெளியீடும், விருந்தினர்களின் உரையும், கலைஞர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றன. விழாவின் நிறைவாக திருமதி சிவை.குகநேசன் அவர்களது மாணவர்களின் வாத்திய பிருந்தா இசையுடன் விழா நிகழ்வு நிறைவு பெற்றது.

வலிகிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவையினால் 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடர்ந்து இரண்டு தினங்கள் நடத்தப்பட்ட பண்பாட்டுப் பெருவிழாவை அடுத்து ஆறு வருடங்களின் பின்னர் நடைபெற்ற இந்த விழா காலத்தால் ஏற்பட்ட இடை வெளியை நிறைவு செய்வதாக அமைந்திருந்தது. (வ-11)

# புதன்பொய்கை

# வெற்றிக்கான 12 மந்திரங்கள்

மந்திரங்கள் சில நேரங்களில் தந்திரங்களாக இருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் புத்தமதம் மற்றும் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் தியானம் போன்ற செயல்களில் ஈடுபடும் போது மந்திரம் போன்ற சில வார்த்தைகளை உச்சரிப்பதை அநேக இடங்களில் பார்த்திருக்கிறோம். இது ஆன்மிக ரீதியாகவோ அல்லது விஞ்ஞான ரீதியாகவோ அணுகுவோருக்கு வெவ்வேறு பார்வையில் தோன்றும். தியானம் செய்யும்போது இவர்கள் உச்சரிக்கும் வார்த்தைகள் பார்ப்பவர்களின் மனதுக்கு மந்திரங்களாகத் தோன்றுகின்றன. உண்மையில் இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று பலமுறை நினைத்ததுண்டு. அதன் காரணம் என்னவென்றால் அவர்கள் தங்களது தியானத்தில் கவனம் செலுத்த ஏதாவது ஒன்றைக் கூறிக் கொண்டே இருக்க வேண்டும் அவ்வளவு தான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான மந்திரங்களைப் பயன்படுத்துவதுண்டு. இதேபோல் தான் நாமும், நாம் நினைத்த காரியத்தில் எமது கவனத்தைச் செலுத்த 12 மந்திரங்கள் உள்ளன. அவை கீழே தொகுக்கப்பட்டுள்ளன.



– இணையவன்

### கவலை எதுவுமில்லை

எமது ஒவ்வொரு முயற்சிக்கும் தடையாக இருப்பது எமது பயம், கூச்சம் மற்றும் கவலைகள் தான். இவை மட்டும் எம்மிடம் இருந்தால் எமது எதிரிகள் எம்மை நலிவுபடுத்த எந்த முயற்சியையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.ஏனென்றால் இவை எம்மிடம் இருக்கும் வரை எம்மால் முன்னேறவே முடியாது. அதற்கான மந்திரம் தான் இது. கவலை எதுவுமில்லை, தொல்லை இல்லை. நடக்கும் செயல்களை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளும்போது எமது கவலைகள் எம்மைவிட்டு விலகிவிடும்.

### உங்களை விட்டுக் கொடுக்காதீர்கள்

வாழ்க்கை எளிது என்று எவருமே, ஒரு நாளும் கூறியதில்லை. வெற்றியாளர்கள் ஒருநாளும் தங்களைத் தங்கள் பாதையிலிருந்து விலக்கிக்கொண்டதில்லை. தோல்விகளிடம் ஒருபோதும் உங்களை விட்டுக்கொடுக்காதீர்கள்!

### பொறுமையே வெற்றிக்கான வழி

இந்த மந்திரத்தைப் புரியும்படி சொன்னால் ஒரே நாளில் ஒபாமா ஆக முடியாது. வெற்றி ஒரே நாளில் கிடைத்திடாது, அதற்கு முக்கியமாக பொறுமை, விடாமுயற்சி, கடின உழைப்பு என்ற மூன்றும் அவசியம். அத்துடன் அனுபவமும் ஒன்று சேர்ந்து விட்டால் வெற்றி கிடைப்பதை எவராலும் தடுக்க முடியாது. நாம் திட்டமிட்டபடி எமது திட்டம் நடைபெறாத போது கோபம், எரிச்சல் போன்ற தேவையில்லாத எண்ணங்கள் வரும், ஆனால் அதையெல்லாம் தாண்டிப் பொறுமையுடன் இருந்தால் மட்டுமே வெற்றிக்கனியை ருசிக்க முடியும்.

### காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

வாய்ப்புகள் எப்போதாவதுதான் கிடைக்கும், அப்போது நாம் அவற்றைப் பயன்படுத்தாவிட்டால் அந்த வாய்ப்புக்களை நழுவவிட்டதை எண்ணி வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். வாய்ப்பு சரியாக அமைந்தது என்றால் எவ்வளவு பெரிய ஆபத்தாக இருந்தாலும் முயற்சி செய்யுங்கள்.

### சிறந்ததையே செய்யுங்கள்

ஒரு ஆசிரியர் மாணவர்களிடம், தேர்ச்சி அடைந்தால் மட்டும் போதும் என்று கூறுவதில்லை. அனைவரும் நூறுவீத மதிப்பெண் எடுக்க வேண்டும் என்றுதான் கூறுவார். அதைப் போலத் தான் இதுவே போதும் என்ற எண்ணம் வந்துவிட்டால் எம்மால் எவ்வளவு முடியும் என்பது எமக்கே தெரியாமல் போய்விடும். அதனால் எப்போதும் உங்களால் முடிந்தவரை சிறப்பாகச் செயற்படுங்கள். இதில் ஒரு சில மந்திரங்களைக் கடைப்பிடிக்கத் தவறினாலும், இவற்றைக் கடைபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டாலே விரைவில் வெற்றி கிடைத்துவிடும்.

### என்னால் முடியும்

மற்றவர்கள் உங்களைப் பார்த்து உங்களால் முடியும், நீங்கள் செய்தால் நன்றாக இருக்கும் என்று கூறும் முன்னரே நீங்களாகவே முன்வந்து அந்தச் செயலைச் செய்யத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு முறை உங்கள் திறமையைப் பற்றிய சந்தேகம் உங்களுக்கு வரும்போதும் என்னால் முடியும் என்ற மந்திரம் கண்டிப்பாக உதவும். யானையின் பலம் தும்பிக்கை, மனிதனின் பலம் நம்பிக்கை உலகில் பல புத்திசாலிகள் இருக்கின்றனர். ஆனால் அனைவராலும் தலைவராக முடிவதில்லை. ஏனெனில் அவர்களின் மீது அவர்களுக்கே நம்பிக்கை வருவதில்லை. என்னால் இந்தச் செயலை முன்னின்று நடத்த முடியும் என்ற நம்பிக்கை எப்போது வருகிறதோ அப்போது நாம் இந்த மந்திரத்தில் கைதேர்ந்தவராகிறோம்.

### முன்னோக்கி முன்னேறுங்கள்

ஏற்கனவே செய்த தவறுகளை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் அடுத்த நிலைக்கு ஒருநாளும் செல்ல முடியாது. வாழ்க்கையில் ஓர் உச்சநிலைக்கு வரும் வரை நடந்தது என்னவென்று பின்னோக்கிப் பார்க்கக்கூடாது, எத்தனை தோல்விகள் வந்தாலும் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். தோல்வியில் இருந்து பாடம் கற்காவிட்டால் அதுதான் உண்மையான தோல்வி, அதனால் தோல்வியை வெற்றிக்கான படிக்கல்லாக்கி அடுத்த நிலைக்கு தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருங்கள்.

### முடியாதது ஒன்றுமில்லை

இன்று வெற்றியாளர்களாக நாம் பார்க்கும் பலர் ஒரு நாள் அவர்கள் இப்போதிருக்கும் உயரத்தினை கனவாகக் கண்டவர்களாகத்தான் இருப்பார்கள். உங்கள் கனவை நீங்கள் நிறைவேற்றாவிட்டால் யார் நிறைவேற்றுவார் என்ற எண்ணம் மனதிற்குள் இருக்கவேண்டும். அப்போதுதான் எம்மால் முடியாது என்ற எண்ணமே வராது. உங்களால் மற்றவர்களை மாற்ற முடியாது. உங்களால் உங்களை மட்டுமே மாற்ற முடியும். இந்த உலகத்தில் உங்களால் மாற்றக்கூடிய ஒரே உயிர் நீங்கள் மட்டுமே. அதனால் உங்களை நீங்களே கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால் இந்த மந்திரத்தை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

### [illegible]

இது நீங்கள் அடிக்கடி பார்த்து வியந்த ஸ்பைடர்மேன் படத்தில் இருந்து வந்தது. எமக்கு என்ன திறமை என்பது நாம் மட்டும் அறிந்த ஒன்று. அதை நாம் பயன்படுத்தினால்தான் சிறப்புறச் செயலாற்ற முடியும். உங்கள் திறமையின் மீது நம்பிக்கை வைத்து அதைச் செயல்படுத்துங்கள். கண்டிப்பாக வெற்றி கிடைக்கும்.

### விழி, எழு, பற...

வாழ்க்கையில் ஏதாவது ஒரு இலக்கு எமக்கு கண்டிப்பாக வேண்டும். அந்த இலக்கினை அடைவதற்கு தொடர்ந்து [illegible] காற்று போல முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் [illegible] முடியும்.

### இறுதியில் எல்லாம் சரியாகிவிடும்

எமது வெற்றிக்கான பாதை எப்போதும் சமமானதாகவே இருக்கும் என்று சொல்ல முடியாது. மேடு பள்ளங்களுடன் தான் இருக்கும். அதை சகித்துக்கொள்ளும் மனப்பக்குவமும், சுயகட்டுப்பாடும் எமக்கு வேண்டும். இறுதியில் எல்லாம் சரியாகிவிடும் என்ற எண்ணம் இருந்தால் கடைசிவரை வெற்றி எமது கையில்தான்.

### [illegible]

எமது அனைத்துத் திறமைகளையும் எமது மனதுக்குள்ளே வைத்துக் கொண்டால் வெளியுலகுக்கு எப்படித் தெரியும்? அதை வெளிக்கொணர எம்மிடம் இருக்கும் மந்திரம்தான் உழைப்பு. உழைத்தால் மட்டுமே எமது கனவை நனவாக்க முடியும்.



# சுவாமி விவேகானந்தர்

"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான், வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து" என்னும் பொய்யாமொழிக்கு அணிகலமாக அவதரித்தவரே நரேந்திரன் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்ட சுவாமி விவேகானந்தர். கிறிஸ்துவுக்குப் பின் 1863 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம்12 ஆம் திகதி வேந்தனய விஸ்வநாதத் தருக்கும் துணைவி புவனேஸ்வரி மாதாவுக்கும் இந்துப் பூமியிலே ஜனனமானார் சுவாமி விவேகானந்தர். குழந்தைப் பருவத்திலே துடுக்குத்தனமும், மலர்ந்தமுகமும் கொண்டு துள்ளித்திரிந்தார். பள்ளிப் பருவத்து நண்பர்களுக்கு ஒரு தலைமகனாகத் திகழ்ந்தார். அஞ்சா நெஞ்சமும், இடர்களை வெல்லும் மன உறுதியும், சங்கீதப் பிரியமும் இவருடைய ஆளுமையை மெருகூட்டின. "குட்டிப் பிசாசு" என்று கூறுமளவுக்கு குறும்புத்தனம் மிக்கவராகத் திகழ்ந்தார். ஆனால் தமது வாலிபப் பருவத்தில், தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டிய கடப்பாட்டை உணர்ந்து கருத்துடன் செயல்பட்டார். வாலிபப் பருவத்தில் கல்வியில் சிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாது பிரம்மச்சரிய விரதத்தையும் வரிந்து ஏற்றுக் கொண்டார். மெய்ப் பொருள் வேண்டி ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சீடரானார். கடவுளைப் பற்றியல்லாது வேறொன்றும் பேசாத பரமஹம்சரால் ஆட்கொள்ளப்பட்டார். வாலிபத்தில் துறவு பூண்ட இளம் சந்நியாசிகளுக்குத் தலைமை வகித்தார். இராஜபோகங்களையெல்லாம் துறந்து, இல்லற வாழ்வை மறுத்து கடும் தவம் புரிந்த கௌதம புத்தரின் வரலாறு இவர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. சமூகத்தில் நிலவுகின்ற சமூக சீர்குலைவுக்கு சமூகப் பொறுப்புடையோரே காரணம் என உணர்ந்து அவர்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கல்வி, பொருளாதாரம், கைத் தொழில், வியாபாரம்ஆகிய துறைகளில்எவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென எடுத்துரைத்தார். மகிழ்வும், தூய்மை பொருந்திய மனமும், பிறர் குறை கூறாமையும் நோயற்ற வாழ்வுக்கு உதவும் என அடித்துக் கூறினார். ஆணவ் அதிகாரம் உடையவர்களை அதட்டிப் புத்தி புகட்டவல்ல ஆற்றல் சுவாமிகளிடத்தே காணப்பட்டது. வர்ணாச்சிரம தர்மங்களுக்குரிய கடமைகளை மிக விரிவாக எடுத்துக் கூறி சமூகத்தை நல் வழிப்படுத்தினார். அஹிம்சா தர்மமும், காருண்யமும் கொண்டவனே சுத்தவீரன் என்று பொருள் கொண்டார்.



அமெரிக்க நாட்டிலே சர்வமத மகாசபை ஒன்றிலே உரையாற்றும் போது தொடக்க உரையிலேயே "சகோதர சகோதரிகளே" என விளித்துப் பேசியமை அனைத்து "மக்களும் சமத்துவம்" என்கின்ற கருத்தாழத்தை ஒரே வரியிலேயே கூறிய சுவாமிகளின் பேச்சு வன்மை அனைவர் மனங்களையும் கவர்ந்தது. ஆயிரம் தீவுச் சோலை என்னும் இடத்தில் தமது சீடர்களுக்கு ஆத்ம ஞானம் கற்பித்துக் கொண்டிருக்கும் வேளையில் "கிறிஸ்து நாதரே இன்று உமது உடல் தாங்கி உலாவுவது போல் உள்ளது" என சீடர்களால் போற்றப்பட்டார். 1897 ஆம் ஆண்டு தனது குருவான ஸ்ரீஇராமகிருஷ்ணரின் சீடர்கள் அனைவரையும் வரவழைத்து மக்களின் மகோன்னத வாழ்வுக்கு ஐக்கியம் ஒன்றே அவசியம் என்று கூறி சத் சங்கம் ஒன்றை நிறுவினார். சத் சங்கத்தினூடாக தர்மப் பிரசாரம் செய்தல், பாடசாலை, வைத்தியசாலைகள் அமைத்தல் ஆகியனவும், மடத்தினூடாக தர்ம, ஞான, பக்தி, இராஜயோகங்களுடன் கூடிய ஆலோசனைகளையும் செய்வித்து வந்தார். இவரது "ஜுலைத்திங்கள் 4 ஆம் நாள்" என்னும் ஆங்கிலக் கவிதை அனைவர் மனங்களையும் கவர்ந்தது. பேச்சாற்றல், சர்வ மொழிப் புலமை ஆகியவற்றைக் கொண்டிருந்த சுவாமி விவே கானந் தர் 'பிரபுத்பாரத்' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும், 'உத் போதவம்' என்ற வங்காளப் பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தினார். உலகம் போற்றிய உத்தமரான சுவாமி விவேகானந்தர் 1902 ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.




கடந்த வாரத் தொடர்ச்சி...


உடனே தனது நெருங்கிய நண்பனான ராமுவிடம் இது பற்றிச் சொன்னது. ராமு எல்லாக் குரங்குகளையும் அழைத்து அவ்விடயத்தை இரகசியமாகக் கூறியது. இவற்றின் ஒற்றுமையைக் கண்ட அந்தப் புதிய குரங்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து அவற்றின் கண்களில் தென்படாமல் இருந்தது. அவற்றை எப்போதும் கண்காணித்தபடியே இருந்தது.இது அந்தக் குரங்குகளுக்குத் தெரியாது. ஒரு நாள் ஆறு குரங்குகளும் தனித்தனியே படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. இதற்காகக் காத்துக் கொண்டிருந்த புதிய குரங்குக்கு நல்ல சந்தோஷம். அது திட்டம் போட்டபடியே தனது காரியத்தை ஆரம்பித்தது.

அது சோமுவிடம் சென்று "நேற்று உன்னை விட்டு விட்டு ராமு தலைமையில் உன் நண்பர்கள் அனைவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்" என்றது. "இது சத்தியம்" என்று மேலும் பொய் உரைத்தது. இந்த வார்த்தைகளைச் சோமு நம்பிவிட்டது. ஏனெனில் அதற்கு "சத்தியம் என்பது உயிர் போன்றது" என்று தெரியும். அதற்கு மட்டுமல்ல மற்ற எல்லாவற்றுக்கும் இது பொருந்தும். சோமு அடுத்த நாள் அவைகளை விட்டு விட்டு தூர விலகி விட்டது. அவ்வாறே ஏனைய குரங்குகளையும் புதிய குரங்கு பிரித்து விட்டது. ஒரு நாள் சோமு, குரங்குகள் பிரிந்து இருப்பதைக் கண்டு கொண்டது. இதனால் அதற்குச் சந்தேகம் வரவே பிராட்டினைச் சந்தித்து நீ ஏன் தனியாக இருக்கின்றாய்? உன்னையும் பிரித்து விட்டார்களா? என்று கேட்டது. அதற்கு பிராட் "என்னடா உளறுகிறாய், நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னைப் பிரித்து விட்டீர்களே" என்று கூறி அழுதது. சோமுவுக்கு அப்போது தான் உண்மை புரிந்தது.

ஒரு நாள் அதிஷ்டவசமாக ஆறு குரங்குகளும் சந்தித்துக் கொண்டன. சோமு எல்லாவற்றுக்கும் நடந்தவற்றைக் கூறியது. எல்லாக் குரங்குகளுக்கும் உண்மை புரிந்தது. அவை மீண்டும் ஒற்றுமையாகின. புதிய குரங்கை விரட்டுவதற்குத் திட்டம் தீட்டின. திட்டம் போட்டபடியே குரங்குகளைப் பிரித்து விட்ட சந்தோசத்தில் இருந்த மரிக்குக்கு நல்ல பாடம் கற்பித்து காட்டை விட்டு விரட்டின. முன்பு போலவே தங்களுக்குள் பிரிவு வந்து விடக் கூடாது என எண்ணித் தங்களைத் திருத்திய சோமுவை தங்களுடைய தலைவனாக்கின. அன்று முதல் சோமு அந்தக் குரங்குகளின் அரசனாக முடி சூடியது. இதனால் அவற்றின் வாழ்க்கை சுபிட்சம் நிறைந்ததாக மாறியது.

(முற்றும்)


**ஸ்ரீ.தர்ஷிகன், யாழ். இந்துக் கல்லூரி.**



ச.சேயோன், தரம்–3,
யாழ்ப்பாணக் கல்லூரி



றெ.றக்ஷனா,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



கே.மனோச்காந்
ஜஏரி சித்திரப் பயிற்சி நிறுவனம்



மு.லுசாந்தன், உரும்பிராய்
சைவத்தமிழ் வித்தியாலயம்

## உங்களுக்குத் தெரியுமா?

- இலைகளின் கீழ்ப் புறம் முட்டையிடும் பூச்சி இனங்கள் எவை?
  வண்ணத்துப் பூச்சி, அந்துப்பூச்சி
- உயரமான மரக்கிளைகளில் கூடு அமைத்து முட்டையிடும் பறவைகள் எவை?
  காகம், தூக்கணாங்குருவி, நாரை, கழுகு, கொக்கு
- நீரின் மேற்பரப்பில் அல்லது நீரிலுள்ள புற்களின் மேல் முட்டையிடுபவை எவை?
  தேரை, தவளை, நுளம்பு, தும்பி
- மரப் பொந்தினுள் முட்டையிடும் பிராணிகள் எவை?
  கிளி, மைனா, மரங்கொத்தி, மீன் கொத்தி
- பறக்க முடியாத பறவைகள் எவை?
  தீக்கோழி, கிவி, பென்குயின்
- நத்தைகளைப் பிடித்து உண்ணும் பறவை எது?
  செண்பகம்
- கழுத்தில் பிடித்துத் தூக்க வேண்டிய பிராணி எது? வாத்து
- ஒளிபுகக் கூடிய இரண்டு சோடி இறகுகள் உள்ள பூச்சி எது? தும்பி
- பறக்க முடியாத பூச்சிகள் எவை? பேன், மூட்டைப் பூச்சி, உண்ணி

**அ.விசாகன்,
யாழ்ப்பாணக் கல்லூரி.**

# புதன்பொய்கை









## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய விழா

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய விழாவும் திருவுடையான் மலர் வெளியீட்டு நிகழ்வும் அண்மையில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவ சிறி தலைமையில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் உஷா சுபலிங்கம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், யாழ் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற தமிழ் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கலாமணி உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நூலை வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் வெளியிட்டு வைக்க தொழில் அதிபர் பாஸ்கரன் பெற்றுக்கொண்டார்.(வ–109)









## வவுனியாவில் நடைபெற்ற 'கிரீடம்' நிகழ்வு

தமிழர் முன்னேற்றக் கழகம் நடத்திய 2014 ஆம் ஆண்டுக்கான 'கிரீடம்' நிகழ்வு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. தமிழர் முன்னேற்றக் கழகத்தின் பிரதான அமைப்பாளர் வி.ஜெனகன், நிகழ்வில் வைத்து வவுனியா இறம்பைக்குளம் மக ளிர் கல்லூரியில் ஆண்டு 7 இல் கல்வி கற்று வரும் விசேட தேவைக்கு உட்பட்ட மாணவி ஒருவருக்கு மடிக்கணினி ஒன்றை வழங்கி னார். 25 வருடம் கல்விச் சேவையில் பணி புரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவ ரையும் கௌரவித்து விருது வழங்கப்பட்டது. (வ–421)

# மனரீதியான ஆரோக்கியத்தின் மீது ஆன்மிகம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

மனரீதியான ஆரோக்கியமும் ஆன்மிகமும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. மூளையின் செயற்பாடுகளை ஆன்மிகம் எவ்வாறு மேம்படுத்துகிறது என்ற புதிர் நிறைந்த அம்சத்தை அறிவியலும் கூட சற்று நிரூபித்துள்ளது. மூளையின் செயற்பாடுகளுக்கும், ஆன்மிகத்துக்கும் உள்ள தொடர்பை நிரூபிக்க இதுவரை நாம் கண்ட விளைவுகளே போதுமானவை. புத்தரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கையை மாற்றும் சில பாடங்கள்.

ஆன்மிகத்துக்கும், மனரீதியான ஆரோக்கியத்துடன் அது கொண்டுள்ள தாக்கத்துக்கும் இடையேயான தொடர்பைப் பற்றித் தான் நாம் பார்க்கப் போகிறோம். அடிப்படையில் ஆன்மிகம் எப்படி மூளையின் மீது தாக்கத்தை உண்டாக்குகிறது என்பதையும் இதனால் மனித உடலில் எந்த அளவிலான நேர்மறை திறன்கள் நுழைகின்றன. (குறிப்பாக மனித மூளை) என்பதையும் பார்க்கப் போகிறோம். ஆன்மிகம் மனரீதியான ஆரோக்கியத்தின் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது? ஆன்மிகம் என்ன செய்கிறது என்பதைப் பார்த்தோமானால், மனித மூளையின் மீதுள்ள ஆன் மிகத்தின் தாக்கத்தை சரியாக தீர்மானித்து விடலாம். இந்தச் சொற்கூற்றை முழுமையாக வரையறை செய்ய, ஆன்மிகத்தில் பல வகையான அம்சங்கள் நிறைந்துள்ளன.

ஆன்மிகத்தின் அதிமுக்கிய அம்சமாக விளங்குவது தியானத்தில் ஈடுபடுவது. ஆன்மிகத்தின் மற்றொரு அதிமுக்கிய அம்சமாகப் பார்க்கப்படுவது அமைதி, சந்தோஷம் மற்றும் நல்லது செய்வதை மேம்படுத்துவது. இந்து மதத்தைப் பற்றிய தவறான கருத்துக்களும் உண்மைகளும் மனிதர்களாக, நல்லதையும் கெட்டதையும் பிரித்துப் பார்க்கக் கூடிய உள்ளார்ந்த ஆற்றலுடன் நாம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம்.

நல்லது செய்தால் என்ன? கெட்டது செய்தால் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை நாம் பெற்றிருக்கிறோம். இந்த உள்ளார்ந்த ஆற்றலின் அடிப்படையில், பல வகையான வியத்தகு திறன்களுடன் படைக்கப்பட்டதே நம் மனம் என்பதை நம்மால் உணர முடியும். ஆன்மிகத்தின் மிக அடிப்படையான அம்சங்களின் ஒன்றான தியானத்தின்படி பார்க்கையில், எமது உடலுக்கும் மனதுக்கும் சாதகமான பயனுள்ள தாக்கத்தை தியானம் ஏற்படுத்துகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பதற்றத்தையும், மன அழுத்தத்தையும் தியானத்தால் மட்டுமே குணப்படுத்த முடியும். மூளை தேய்வு மற்றும் ஸ்கிசோஃப்ரினியா போன்ற கொடிய நோய்களைக்கூட அண்டவிடாமல் உதவுகிறது தியான ஈடுபாடு.

அதனால், தியானம் மூலமாகவும் அமைதி மற்றும் சந்தோஷத்தைப் பரப்புவதன் மூலமாகவும், ஈர்க்கப்படும் அதிர்வலைகள் மிகவும் மேலான நேர்மறைத் திறனாகும். இது மனிதனின் மனதில் நீடித்து நிலைக்கவும் செய்யும். மூளையின் அமைப்பை மாற்றி, சிறந்த மூளை மற்றும் மனரீதியான ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஆற்றலை தியானம் தருகிறது.

–மிது



# பெயரில் என்ன இருக்கிறது?

ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியட் நாடகத்தில் ரோமியோவிடம் ஜூலியட் சொல்வாள்: "பெயரில் என்ன இருக்கிறது? ரோஜாவை வேறு எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் மணம் வீசத்தானே போகிறது"

அண்மையில் வந்த ஒரு திரைப்படத்தில் பெற்றோர் தனக்கு வைத்த பெயரே நகைச்சுவையாக இருப்பதாகக் கருதி தாழ்வு மனப்பான்மையில் தத்தளிப்பான் கதாநாயகன்.

கல்லூரிக் காலத்தில் வரலாற்றுக் கற்பனை நாடகத்தில் நடித்தபோது, அரசர் தனது அரண்மனையில் ஒருவரை அறிமுகம் செய்து இவர்தான் அமைச்சர் என்று கூறத் தொடங்கியதுமே, தெரியுமே.. அமைச்சர் மார்த்தாண்டன்.. என்பார் வந்தவர். மன்னர் வியப்புடன் பார்க்க, எல்லா சினிமாவிலேயும் அமைச்சர் பெயர் மார்த்தாண்டந்தானே.. அதுதான்.." என்பார் வந்தவர்.

அந்தளவுக்குத் திரைப்படங்களில் பெயர்களுக்குக் கூடப் பஞ்சம் இருந்தது ஒரு காலத்தில்.

முன்னணிக் கதாநாயகர் நடிக்கும் எந்தவொரு படத்திலும், மாசானம், அங்குச்சாமி, பிச்சை என்று கதாநாயகர்களுக்கோ, மூக்காயீ, பொம்மி, பச்சையம்மா என்று கதாநாயகிகளுக்கோ பெயர் வைப்பது அரிதினும் அரிதாகவே உள்ளது.

பருத்தி வீரன் படத்தில் முத்தழகி, மண்வாசனையில் முத்துப் பேச்சி என்று பெயர் வைத்துள்ளதற்குக் காரணம் அவை கிராமியப் படங்கள் என்பதால் தான்.

சங்க காலத்தில் எழுதப்பட்ட பாடல்கள் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டவை. அப்படித் தொகுக்கும்போது, 102 பாடல் களை எழுதிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. தொகுத்தவர்கள், குறிப்பிட்ட பாடல்களில் உள்ள பாடல் வரி, அல்லது உவமை அல்லது தொடரைக் கொண்டு பாடல்களை யாத்த புலவர்களுக்குப் பெயராகச் சூட்டிவிட்டனர்.

குறுந்தொகை பாடல் ஒன்றில் முன்பின் தெரியாத தலைவன் தலைவி ஆகியோரின் நெஞ்சங்கள், காதலால் இணைவதைக் குறிப்பிடும் போது, செம்மையான மண்ணில் மழை நீர் கலப்பது போல எமது நெஞ்சங்கள் கலந்துவிட்டன என்பார் புலவர்.

செம்புலப் பெயல் நீர் போல.. என்ற அழகான உவமையைச் சொன்ன புலவருக்கு, செம்புலப் பெயல்நீரார் என்று பெயர் வைக்கப்பட்டு விட்டது. இப்படி குப்பைக் கோழியார், கல்பொரு சிறு நுரையார், தேய்புரிப் பழங்கயிற்றினார் என்று பல புலவர்களுக்குப் பெயர்கள் அமைந்து விட்டன. அதற்கெல்லாம் காரணம், அவர்களது பெயர்கள் தெரியாமல் போனதுதான். புலவர்கள் மீதான மரியாதை காரணமாக இப்படிப் பெயர் வைத்தார்கள். பெயரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லாதே என்பார்கள். ஆனால், அரசியல்வாதிகளோ, தமது ஊரையே பெயராக்கிச் சொல்வதை அதிகம் விரும்புகிறார்கள்.

இன்னும் சில அரசியல்வாதிகளின் பெயர்களுக்குப் பதில் அவர்களது கட்சிப் பதவிகளே பெயர்களாகிவிடும்.

அமைச்சர் வருகிறார், எம்.பி. வந்துவிட்டார் என்பது அதிகாரப்பூர்வ பதவியைக் குறிப்பிடுவதாகும். ஆனால், கட்சிப் பதவிகளும் பெயர்களாகிவிடுகின்றன. கட்சிக்காரர்கள் வட்டம் வந்தாச்சா, ஒன்றியம் வந்தாச்சா என்று பேசக் கேட்கலாம்.

இவையெல்லாம், சம்பந்தப்பட்ட பதவிகளில் இருப்பவர்களைக் குறிக்கும். எல்லோருக்குமே, தங்களது பெயரை இன்னொருவர் குறிப்பிட்டால், அதிலும் முதலெழுத்துடன் கூறிவிட்டால், அளவற்ற மகிழ்ச்சி ஏற்படும்.

**செம்புலப் பெயல் நீர் போல.. என்ற அழகான உவமையைச் சொன்ன புலவருக்கு. செம்புலப் பெயல்நீரார் என்று பெயர் வைக்கப்பட்டு விட்டது. இப்படி குப்பைக் கோழியார். கல் பொரு சிறு நுரையார். தேய்புரிப் பழங்கயிற்றினார் என்று பல புலவர்களுக்குப் பெயர்கள் அமைந்து விட்டன. அதற்கெல்லாம் காரணம். அவர்களது பெயர்கள் தெரியாமல் போனதுதான்.**

நீண்ட நாள் பழகி, இடையில் சில ஆண்டுகள் தொடர்பு விட்டுப் போன நபரொருவரைச் சந்தித்தபோது, எதிர்பாராமல் அவரது பெயர் மறந்துவிட்டது.

வேறு ஒருவரின் பெயரை வைத்து அவரை அழைத்தபோது, அவர் அதைத் திருத்தினார். அப்போது மிகவும் கூச்சமாக இருந்தது. அதேசமயம் அந்த நபர், எம்மைப் பெயரிட்டு அழைத்த போது என் பெயரை நினைவில் வைத்திருக்கிறாரே.. என்று மகிழ்ச்சி ஏற்பட்டது. யாரையாவது குறிப்பிட நேரும்போது, உயரமாக இருப்பாரே.. கண்ணாடி போட்டிருப்பாரே.. ரயில்வே திணைக்களத்தில் வேலை செய்கிறாரே.. ஸ்கூட்டர்லே வருவாரே.. பிள்ளை யார் கோயில் அருகே வீடு வாங்கியிருக்கிறாரே.. அவரைத் தெரியுமா? என்று கேட்டுப் பாருங்கள்..

சுமார் ஐந்து நிமிடம் குழம்பிவிடுவார் அதைக் கேட்பவர். அதே சமயம், வி.எஸ். ராமநாதனைத் தெரியுமா என்று கேட்டுப் பாருங்கள்.. அடுத்த கணமே, தெரியும் அல்லது தெரியாது என்று ஏதாவது ஒரு பதில் வரத் தவறாது.

–நிலா



# எமது பாரம்பரிய கலைகளை அரங்கேற்ற முன்வர வேண்டும்

**வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஓய்வுநிலை பிரதிச் செயலாளர் கருத்து**

சகோதர இனத்தவர்கள் தங்களது கலாசார அடையாளங்களை எப்போதும் இழக்கத்தயாராக இல்லை. எம்மவர்கள் பாரம்பரிய கலைகளை வெளிக்கொணரவோ, அரங்கேற்றவோ வெட்கப்படுகின்றார்கள்; அல்லது வெறும் மாயையினாலோ மற்றவர்கள் தங்களைக் குறைத்து மதிப்பிடுவார்கள் என்ற வறட்டுச் சிந்தனையாலோ, மேலைநாட்டுக் கலைகளை அரங்கேற்றத்துடிக்கின்றனர். மேலைத்தேய கலை, கலாசாரங்களை விடுத்து எமது பாரம்பரிய கலைகளான கூத்து, காவடி, கரகம், நாட்டார் இலக்கியங்களை அரங்கேற்ற முன்வர வேண்டும். அத்துடன் எமது கிராமங்களில் உள்ள மீதமுள்ள கலைகளையும் பாதுகாக்க முன்வருவதுடன், அவற்றை இவ்வாறான விழாக்கள் ஊடாக வெளிக்கொணர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஓய்வுநிலை பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன்.

தீவகக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி கலைவிழா அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் திஜோண் குயின்ரஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராகக்கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

சமூகத்தின் பண்பாடு, கலாசார, மரபுகள், சிறப்புக்கள் என்பவற்றை வெளிக்கொணர வேண்டும். பல்கலைக்கழகக் கலைத்துறை மாண வர்கள் சமூகத்தின் கலாசார பண்பாடு களை வெளிக் கொணரும் ஆய்வுகளை மேற் கொள்ளவேண்டும். பழைமைகளை வெளிக்கொணர் வது வெட்கம், தரம்குறைந்தது என நினைப்பதை விடுத்து அவற்றை வெளிக்கொணர முயல வேண் டும். இவ்வாறான பிரதேச நிகழ்வுகள் இதற்குக் களமாக அமையும். பாரம்பரிய நிகழ்வு களை மாணவர்கள் மத்தியில் வேரூன்றச் செய்து வலுப்படுத்துவதுடன் கலைத் துறையில் ஈடுபடவைக்க வேண்டும்.

இன்றைய நிகழ்வில் பிரதேசத்தின் மண்வாசனைக் கருத்துக் கள் சிறப்பாக வெளிக்கொணரப்பட்டன. நடன ஆசிரியர்கள் நடத்திய நடன நிகழ்வு, அரங்க நிகழ்வுகளிலிருந்து தாம் இன் னும் விலகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையால் நடத்தப்பட்ட நிகழ்வை என்னால் நம்பமுடிய வில்லை. அந்தளவுக்குச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

இந்தப் பிரதேசத்துத் தமிழறி ஞர்கள் பலர் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளனர். அதே போல பல நிறுவனங்களும் இங்கு தமிழ்ப் பணி யாற்றின. சைவ மகா சபை முன்னோடி நிறு வகமாகத் திகழ்ந்தது. மகாத்மா காந்தியடிகளை வரவழைத்து காந்தீயக் கொள்கைகளைப் பரப்பியதுடன் அறவழியில் பணியாற்றியது. பிற்பட்ட காலத்தில் வாரிவளவு நல்லியக்கச்சபை போன்ற அமைப்புக்கள் முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து சிறார்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்தது மட்டுமன்றி சிறுவர்கள் முதல் வயது வந்தவர்கள் வரை கலைத் துறையில் ஈடுபாடுகாட்ட வழிசமைத்தது- என்றார்.(வ-250)



# அனிமேஷன் படமாகிறது பொன்னியின் செல்வன்

பிரபல தமிழ் வரலாற்று புதின ஆசிரியர் கல்கியின் பொன்னி யின் செல்வன் கதை 2-டி அனிமேஷன் திரைப்பட மாகிறது. இரண்டரை மணிநேரம் ஓடக் கூடியபடமாகஇது உருவாகஇருக்கிறது. ஒருதொண்டு நிறுவனமான 'வளமான தமிழகம்' ஆதரவுடன் 'பைவ் எலிமெண்ட்ஸ்' நிறுவனம்தான் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது.

இதை தயாரிக்க இருப்பவர் பொ. சரவணராஜா. இத்தனை நாவல்கள் இருக்கும்போது குறிப்பாக பொன்னியின் செல்வனை படமாக்கக் காரணம் என்ன என்று அவரிடம் கேட்டபோது, "பொன்னியின் செல்வனுக்கு அவ்வளவு வாசகர்கள், ரசிகர்கள் இருக்கிறார்கள். . தனிப்பட்ட முறையில் எனக்கு அந்தநாவல் பிடிக்கும். 2500 பக்கங்கள் கொண்டது என்றாலும் நானே ஐந்து முறை படித்துள்ளேன். அவ்வளவு அற்புதமான படைப்பு அது. எனவே அதை எடுத்துக் கொண்டேன். இவ்வளவு புகழ் பெற்ற அந்தப் படைப்பை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் முயற்சிதான் 'பொன்னியின் செல்வன்' அனிமேஷன் திரைப்படம்" என்றார் சரவணராஜா.

மேலும் அவர் கூறுகையில், இன்றைய வணிகமய, உலகமயச் சூழலில் வரலாற்றுப் படைப்புகள் ரசிக்கப் படுமா என்று சிலர் கேட்கிறார்கள். சொல்கிற விதத்தில் சொன்னால் ரசிக்கவே செய்வார்கள். இன்று தமிழ் இளைஞர்கள் தமிழின் பெருமையை, தமிழரின் பெருமையை, வரலாற்றை, மரபை, பாரம்பரியத்தை எல்லாம் அறியாமல் இருக்கிறார்கள். இதை அப்படியே விட்டால் எல்லாம் மறக்கப்பட்டு விடும் – என்றார்.

தமிழக வரலாற்றை எடுத்துக் கொண்டால் சோழர்கள் ஆண்ட காலம், தமிழகத்தின் பொற்காலம். சோழ மன்னர்களில் அனைத்து வகையிலும் தன்னிகரற்று விளங் கிய மன்னன் இராஜராஜ சோழன். அவன் அரியணை ஏறிய வரலாறு குறித்து அழகுடன், வரலாற்று உண்மைகளுடன் கல்கியால் புனையப்பட்ட காவியம்தான் பொன்னியின் செல்வன். இந்தக் கதை இன்றைய தலைமுறைக்கு சென்றடைய வேண்டும் என்கிற நோக்கில் தான் இதை 2டி அனிமேஷன் திரைப்படமாக எடுக்கிறோம் என்றும் கூறினார். மேலும் அனிமேஷனாக உருவாக்கும் போது அதன் எல்லையும் சுதந்திரமும் பரந்தது. தொழில் நுட்ப நுணுக்கங்களில் சிறப்புச் சேர்க்க முடியும் என்றார். படத் தின் அனிமேஷன் இயக்குநர் மு.கார்த்திகேயன். இவர் இத் துறையில் இருபது ஆண்டுகள் அனுபவம் பெற்றி ருப்பவர். இம் முயற்சியில் திரைப்பட ஊடக நண்பர்களும் பின்னணியில் இருக்கிறார்கள். அவர்களின் பக்கபலம் திரைவடிவ முயற்சிக்கு பெரிதும் துணைநிற்கும், என்றார் அவர். படத்துக்கான இசை, வசனம் போன்றவற்றுக்கு மட்டுமல்ல பின்னணிக்குரலுக்கும் கூட பிரபலமானவர்களை– தமிழ் திரை நட்சத்திரங்களை அணுக இருக்கிறோம் என்றும் சரவணராஜா கூறினார்.


NGT GATEWAY
No. 39, College Road, Neeraviady, Jaffna.
GATEWAY CfiCT



Limited Space Registration Required

New Batches Start on
Saturday, 10th, January 2015.

**ICT Classes for O/L Students**
Classes for school students as per their government curriculum, evening & week end classes can be arrange for student's convenience

**Computer Classes for Kids**
Introduction to ICT, Keyboarding, MS Word, MS Excel, MS Powerpoint, Internet & Techniques evening & week end classes available

**New ICDL Base for Job Seekers**
Certifies essential skills, as the skills covered in this 4 module certification are essential for anyone who uses computers and other devices on a daily basis.
It is recommended that everyone should certify their skills to this level.

**E-Citizen for O/L Students**
Sets out essential concepts and skills related to the use of devices, file creation and management, networks and data security. evening & week end classes are available

Courses available at all New Gateway Tech Branches
(Jaffna, Nelliady, Chavakacheri, Kilinochchi)